உரையாசிரியரின் அறுபதாண்டு நிறைவு வெளியீடு.

உ
சிவமயம்
முருகக்கடவுள் துணை



செல்வத் திறவுகோல்

மூலமும் உரையும்

விநாயக கவசம், காரியசித்தி மாலை,
ஆனைமுகக் கடவுளைப் போற்றுதல், சிவகவசம்,
சத்திகவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம்,
மக்கட் செல்வ மாலை, மழை மாலை,
என்ன செய்குவாய் மனமே

ஆகியன அடங்கியுள்ளன.

உரையாசிரியர் :
கருப்பக்கிளர்,
கு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

கிடைக்குமிடம் :
திருநெல்வேலித் தென்னிந்திய
...ப்புக் கழகம் லிமிடெட்
...067 சென்னை-1

உரையாசிரியரின் அறுபதாண்டு நிறைவு வெளியீடு.

உ
சிவமயம்
முருகக்கடவுள் துணை



செல்வத் திறவுகோல்

மூலமும் உரையும்

விநாயக கவசம், காரியசித்தி மாலை,
ஆனைமுகக் கடவுளைப் போற்றுதல், சிவகவசம்,
சத்திகவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம்,
மக்கட் செல்வ மாலை, மழை மாலை,
என்ன செய்குவாய் மனமே

ஆகியன அடங்கியுள்ளன.

உரையாசிரியர் :
கருப்பக்கிளர்,
சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள்

கிடைக்குமிடம் :
திருநெல்வேலித் தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்
திருநெல்வேலி-6. 1967 சென்னை-1.

முதற் பதிப்பு டிசம்பர்—1962.
Ed. : 1 Dec. 1962.

மறு பதிப்பு மார்ச்—1967.
Ed. : 2 Mar. 1967.

SELVATH THIRAVUKOL
With
URAI

விலை ரூ. 2—00

Copies can be had of :
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LIMITED.
TIRUNELVELI-6. MADRAS-1.

PAARI ACHAKAM, MADRAS-1.

3-உ

உ



இரண்டாம் பதிப்பின் முன்னுரை

இந்நூல் வெளிவர நேர்ந்த காரணம் முதலியவைகளை முதற்பதிப்பின் முன்னுரையில் எழுதியிருக்கிறேன். முன்னுரையைப் படித்த அன்பர்கள் பலர் நூலின் பெருமையை உள்ளவாறுணர்ந்து நூலைப் பெற்றதுடன், பலர் பல புத்தங்களை வாங்கித் தம்முடைய நண்பர்கள் உறவினர்கள் முதலியவர்கட்கு வழங்கி நூலின் சிறப்பையுந் தெரிவித்தனர். இதனால் முதற் பதிப்புப் பிரதிகள் விரைவாகவே செலவாகிவிட்டன.

நூலைப் பெற்ற அன்பர்களிற் சிலர் நூல் தமது கைக்கு வந்த பிறகு தங்களுடைய பொருள் முட்டுப்பாடு முன் போல் இல்லையென்றும் எப்பொழுதுங் கையிருப்பில் சிறு தொகையேனும் இருந்துகொண்டிருப்பதாகவும், முன்னுரையில்

எழுதியுள்ள செய்திகளைத் தாம் முற்றிலும் நம்புவதாகவும் எழுதியுள்ளனர். இரண்டோர் அன்பர்கள் விநாயக கவசத்தை நாடோறும் பாராயணஞ் செய்தபடியால் எதிர்பாராத வகையில் சில வழக்குகள் தமது பக்கம் வெற்றியடைந்தன வென்றும் வெற்றியடையுமென்று தாங்கள் எதிர்பார்க்கவில்லை யென்றும் எழுதியுள்ளனர். தெய்வ நம்பிக்கையில்லாதிருந்த சிலரும் இந்நூலைப் பெற்றுத் தம்முடைய இல்லத்தில் வைத்திருக்கின்றனர் என்னுஞ் செய்தியொன்றும் எனக்குக் கிடைத்தது.

இந்நூற் பாடல்கள் பல்லாண்டுகட்கு முன்னரே யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் அவர்களால் விநாயக புராணம், காசி கண்டம் முதலிய நூல்களில் இருந்து திரட்டப் பெற்றுப் பலபதிப்புக்களை யடைந்தது. ஆயினும் நூலின் சிறப்பை இதுவரை அறிஞர்களே உணர்ந்திருந்தனர். இப்பொழுதோ அனைவரும் உணர்ந்துகொள்ளும் படியான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்நூலால் உலகிற்கு எத்தகைய பயன் ஏற்பட வேண்டுமென்று அடியேன் எதிர்பார்த்தேனோ அப்பயன் ஏற்படத் தொடங்கியிருப்பது கண்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

தனிச் சிறு நூலாக வெளிப்படுத்தியிருந்த காரியசித்தி மாலை என்னும் பாடல்களையும் விநாயக கவசத்தை யடுத்துச் சேர்த்து ஒன்றுபடுத்தி யிருக்கிறேன். முதற் பதிப்பு நூலைத் திங்களிதழ்கள், கிழமையிதழ்கள், நாளிதழ்கள் முதலியவைகட்கு மதிப்புரையின் பொருட்டு அனுப்பியிருந்தேன். சிறந்த இதழ்கள் அனைத்தும் நூலைப் பாராட்டி மதிப்புரை வழங்கியிருந்தன. இதனாலும் நூல் விரைவிற் பரவுதற்கு வழியுண்டாகியது. மதிப்புரை வரைந்த இதழ்கள் எல்லாவற்றிற்கும் எனது நன்றியறிதலைத் தெரியப்படுத்திக்கொள்ளுகிறேன். பத்து இருபது என்று நூலை வாங்கிப் பலருக்கும் வழங்கி அவர்களும் பயனடையுமாறு செய்த அன்பர்கட்கும் எனது நன்றி உரியதாகுக.

இந்நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிடுதற்கு அருள் புரியுமாறு காஞ்சி சகத் குரு ஆசாரிய சுவாமிகட்கும் அவர்

களின் இளவரசு புதுப் பெரியவாள் அவர்கட்கும் செய்யுள் மூலமாய் விண்ணப்பஞ் செய்து நேரிற் சென்று புதுப் பெரியவாள் அவர்களேயும் பார்த்தேன். அவர்களும் அருள்புரியும் நோக்கத்தோடு சில நாட்களின் பின் வந்து பார்க்குமாறு கட்டளேயிட்டிருந்தார்கள். அவர்கள் உலக நன்மையைக் கருதிப் பலவிடங்கட்கும் விசயஞ் செய்து கொண்டிருந்தபடியினுலும் அடியேனுக்கும் 'உடல்நலமில் லாமற்போய்விட்டபடியினுலும்' மீளவுங் காண முடியாமலே போய்விட்டது.

சென்னே பிராட்வே 127இல் உள்ள பாரி அச்சக உரிமை யாளர் திருமிகு. மு. நாராயணன் செட்டியார் அவர்கள் பொருள் நிலேமையைக் கவனிக்காமல் இவ் விரண்டாம் பதிப்பு விரைவில் வெளிவருவதற்குப் பேருதவியாக இருந்தனர். மேலும் என்னுடைய கண்ணுக்கு நேர்ந்த நோயிணப் போக்குவதில் ஊக்கங்கொண்டு உடல் வருத்தத்தையும் பொருட் செலவையும் பொருட்படுத்தாமல் பன்முறை கண் மருத்துவமணக்கு வந்து உதவி செய்து

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களேவதாம் நட்பு"

என்னும் பொய்யில் புலவன் பொன்னுரைக்கோர் எடுத்துக் காட்டாகவும் அமைந்தனர். மேற்படி செட்டியார் காலத் திறை செய்தநன்றி ஞாலத்தின் மாணப் பெரிதாகலின் அவருக்கு என் ஐயனுகிய ஆறுமுகப் பெருமான் எல்லாவகை யான நன்மைகளேயும் இனிது அருளுமாறு வேண்டிக்கொள்ளு கிறேன். இப்பதிப்பு என்னுடைய அறுபதாண்டு நிறைவின் நினேவாகவும் அமைய நேர்ந்தது திருவருட் செயலேயாம்.

4—2—67
சென்னே-1.

சு. அ. இராமசாமிப் புலவர்.

முதற் பதிப்பின் முன்னுரை

ஆழிசூழ் உலகில் 1907 ஆம் ஆண்டிற் பிறந்த அடியேன் ஏறக்குறைய நாற்பது ஆண்டுகட்கு முன்னர், விநாயக கவசம், சிவகவசம், சத்திகவசம், சகல கலாவல்லிமாலை, இலக்குமி தோத்திரம் ஆகியவைகள் அடங்கிய விநாயக கவசம் என்னும் நூலைப் பார்த்தேன். அதன் இறுதியில் இருந்த இலக்குமி தோத்திரத்தைப் படித்த போது,

"என்று தமிழ்க் குறுமுனிவன் பன்னியொடும்
இருநிலத்தில் இறைஞ்ச லோடும்
நன்றுனது துதிமகிழ்ந்தேம் நான்மறையோய்!
இத்துதியை நவின்றோர் யாரும்
பொன்றலரும் பெரும்போகம் நுகர்ந்திடுவர்
ஈங்கிதனைப் பொறித்த ஏடு
மன்றல்மனை அகத்திருப்பின் வறுமைதரு
தவ்வையவண் மருவல் செய்யாள்"

என்னும் இறுதிப் பாட்டிலே என்னுடைய உள்ளஞ் சென்றது. இந்நூல் வீட்டில் இருந்தாலே வறுமை உண்டாக மாட்டா தாமே; இந்நூலை நாம் பாதுகாத்து வைத்திருந்து பலனைப் பார்க்கவேண்டும் என்று முடிவு செய்தேன்.

பாடல்கள் ஏழையும் மனப்பாடஞ் செய்தேன். சமயம் நேர்ந்த பொழுதெல்லாம் பாடிக்கொண்டிருந்தேன். கோவிலுக் குச் செல்லும்போது திருமகளின் திருவுருவத்தின் முன் நின்று இப்பாடல்களை மனத்திற்குள்ளேயே பாடுவதுண்டு. அப் பொழுது எனக்குஅகவை (வயது) இருபது இருக்கலாம். நான் வீட்டை விட்டு வெளியேறி வெள்ளை வேட்டி மொட்டைத்தலைச் சாமியாராக மடங்களினும் பிறவிடங்களினும் சுற்றிக்கொண்

டிருந்தேன். எனக்கு உரிமையாக ஒரு செல்லாக்காசும் இல்லை. என்னுடைய முன்னோர்களின் பொருள்களில் நான் கருத்துச் செலுத்தவோ அடையவோ முயற்சி செய்யவில்லை. முன்னோர்கள் தேடிய பொருள் சிறிதுதான் இருந்தது. அதுவும் போனவகை தெரியாமலே போய்விட்டது. இந்நிலையில் மேற்படி பாட்டு எவ்வாறு பலனளிக்கப் போகிறது பார்க்கலாம் என்று எண்ணிக்கொண்டிருந்தேன்.

இதன் பிறகு கல்வியிற் கருத்து மிகுதியாகச் சென்றது. இலக்கண இலக்கியங்களைப் படிக்கத் தொடங்கினேன். அகவை முப்பதிலே கல்வியறிவு ஒருவாறு ஓர் அளவை எட்டியது. இந்நிலையில் வெள்ளை வேட்டிச் சாமியார்கள் சிலர் நான் தங்கியிருந்த இடங்களில் என்னிடம் பாடங் கேட்கலாயினர். பாடங் கேட்டவர்களிற் சிலர் புலவர் புகுமுக வகுப்பில் தேறிப் புலவர்தேர்வுக்குப் படிக்கவுஞ் சென்றனர். படித்துப் புலவர்களும் ஆயினர்.

செட்டிமார் நாட்டில் பலவான்குடி என்னும் ஊரில் திருவாசகப் பாடசாலையில் யான் தங்கியிருந்தபோது திரு. மெ. வெ. வேலப்ப செட்டியார் என்னும் பெயருடைய தனவணிக அன்பர் ஒருவர் என்னிடங் கல்வி கற்கத் தொடங்கினர். பதினைந்து நாட்களில் வெண்பாவைத் தாமே புதிதாக இயற்றுந் திறம்பெற்றார். காலஞ் சென்ற செட்டி நாட்டரசர் அண்ணாமலைச் செட்டியார் மீது அண்ணாமலை அணியறுபது என்னும் நூலையும் வெண்பாவில் இயற்றினர். இந்நாளில் நான் நூல் எழுதும் பணியிலும் ஈடுபட்டேன். முதலில் புலமை வித்தக போதினி என்னும் பெயரோடு ஐந்திலக்கணச் சுருக்க நூல் ஒன்றை எழுதி முடித்தேன். இஃது அச்சேறி வெளி வந்தது. இதைத் தொடர்ந்து தமிழுந் தமிழரும், கல்லாட உரை நடை, குறுந்தொகை உரை நடை என்னும் நூல்களை எழுதினேன். இவைகளும் ஒவ்வொன்ருக வெளிவரலாயின.

1940ஆம் ஆண்டில் சென்னையில் தங்கியிருந்தபோது ஒருநாள் தங்கசாலைத் தெருவிற் சென்றுகொண்டிருந்தேன். ஆனந்தபோதினி உரிமையாளரும் என் நண்பருமாகிய திரு.

நா. முனிசாமி முதலியார் அவர்கள் அப்போது என்னைக் கண்டு ஆனந்தபோதினி அலுவலகத்தில் வேலை பார்க்குமாறு கேட்டுக் கொண்டார். நானும் அதற்கு இணங்கி ஆனந்த போதினி அலுவலகத்தில் வேலை பார்க்கலானேன்.

இந்நிலையில் எனக்கு முன்னரே அறிமுகமாகவும் பழக்கமாகவும் இருந்த உயர்திரு. வ. சுப்பையா பிள்ளையவர்கள் தமது ஆட்சிப் பொறுப்பின் கீழ் நன்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தில் அச்சுப் பிழை திருத்தும் வேலையிலும் ஈடுபடுத்தினார்கள். அவ் வேலையில் ஈடுபட்டிருக்குங் காலத்தில் இலக்கியச் சிறுகதைகள், தமிழ்ப் புலவர்களின் வரலாறுகள் முதலிய நூல்களை எழுதச் செய்தார்கள். பிறகு ஆனந்தபோதினி வேலையை விட்டு முழு நேரமுங் கழகத்திற்கு நூல்கள் எழுதும் பணியிலேயே ஈடுபட்டேன். முற்கூறிய பல வழிகளாலும் எனக்குப் பொருள் வருவாய் ஓர் அளவாக வரத் தொடங்கியது. பொருள் நிலை மனத்திற்கு நிறைவான நிலையிலேயே வந்துகொண்டிருந்தது. பிறகு திருமணம் நடந்து மக்கட் செல்வமும் உண்டாயிற்று. இலக்குமி தோத்திரத்தின் இறுதிப்பாடல் இவ்வாறு உண்மையாகவே முடிந்துவிட்டது. இவ்வளவும் நடந்த பிறகு இலக்குமி தோத்திரப் பாடல்கள் பலனளிக்கவில்லையென்று யாரேனும் கூறமுடியுமா ?

பல பேர் என்னிடம் விநாயக கவசத்தைப்பற்றியும் அதன் பலனைப்பற்றியுங் கேட்டனர். அவர்கட்குக் கவசத்தின் பலனைப்பற்றிக் கூறியதோடு அந்நூலையும் வாங்கிக்கொடுத்திருக்கிறேன். பலபேர் பாடல்களுக்குப் பொருளுங் கேட்டிருக்கின்றனர்.

விநாயக கவச பாராயணத்திற்குக் கூறப்பட்டுள்ள பலன்கள் அப்படியே பலித்திருக்கின்றன. மனைவி மக்கள் நண்பர்கள் ஆகியோர் உண்டாவரென்றபடி எனக்கும் உண்டாகியுள்ளனர். சிறையில் இருந்த ஒருவர் (நீண்டகாலத் தண்டனை பெற்றவர். இவர் எனக்கு உறவினரோ நண்பரோ அல்லர். என்னால் விரும்பப்பெற்றவர்) விடுதலையடைய

வேண்டுமென்று சிலகாலம் பாராயணஞ் செய்தேன். அவர் விரைவில் விடுதலை செய்யப்பெற்ருர். அரசபதவி போன்ற மிக உயர்ந்த நிலையில் அமர்ந்துள்ள சிலரைப் பார்க்கச் சென்ற சமயத்தில் மூன்று முறை பாராயணஞ் செய்துவிட்டுச் சென்றேன். அவர்கள் மிகுந்த அன்போடும் ஆதரவோடும் நடந்து விரும்பியவைகளை நிறைவேற்றினர். இன்றும் அன்போடு நடந்துகொள்ளுகின்றனர்.

விநாயக கவசத்தையுஞ் சக்தி கவசத்தையும் போரில் ஓதினல் வெற்றி ஏற்படும். பகைவர்கள் படை புறமுதுகு காட்டி ஓடும் என்பது கவசப் பலன். சீனர்கள் போர் தொடங்கிய வுடனேயே நான் கவசங்களை ஓதத் தொடங்கி விட்டேன். சீனர்கள் படை பின்வாங்கிவிட்டது. கவசப் பலன் உடனே பலித்து விட்டது என்பதற்கு ஐயமென்ன? இதனைப் படிப்பவர்கள் நகைப்பார்க ளென்பது எனக்குத் தெரியும். அதைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலையில்லை.

''சமரில்மொழிந் திடில்விசயம் முற்றும்'' என்பது விநாயக கவசப் பலன்களில் ஒன்று; 'களிறுவீழ் ஞாட்பிற் கூறுங் கவச மோர்ந் தினிதி னேதில், ஒளிரும்வேற் பகைஞர்தானை உடைந்து வெந் கொடுத்து நீங்கும்'' என்பது சக்தி கவசப் பலன்களில் ஒன்று. பல விடங்களில் நாட்டின் பாதுகாப்புக்குத் தெய்வவழி பாடுகள் நடைபெற்றன. எல்லைப்புறத்து ஊர்களில் சிறுவர்கள் ஒன்று திரண்டு கடவுளைப் போற்றிய படங்களும் நாளிதழ் களில் வெளியாயின. மேலும் போர் நடைபெறத் தொடங்கி னலும் நமது நாட்டிற்குத்தான் வெற்றி யேற்படும்.

சிலர் தமக்குப் பிள்ளைப் பேறில்லாமைக்கு யாதேனும் பாடல்கள் எழுதித் தந்து மக்கட் செல்வத்தையடைய உதவ வேண்டுமென்று விரும்பினர். அவர்கட்கு நான் காசி கண்டத்தில் விசுவாநரன் மக்கட்பேற்றை விரும்பிச் சிவபெருமான் முன்பு பாடி மக்கட்பேற்றை யடைந்ததாகக் கூறப் பட்டிருக்கும் பாடல்களை யெழுதிக்கொடுத்தேன். அவர்கள் அப் பாடல்களைப் படித்து மனக்குறை நீங்கப்பெற்றனர். மழையை

விரும்பிய காலங்களில் பாடினுல் மழை பெய்யக்கூடிய பெருமை பொருந்திய பாடல்கள் சிலவற்றைச் சிருங்ககிரி சங்கராச்சாரி யார் பாடியிருந்ததன் தமிழ் மொழி பெயர்ப்பையும் இதனோடு சேர்த்து இவைகட்குச் "செல்வத் திறவுகோல்" எனவும் பெயர் கொடுத்து விநாயக கவசம் முதலிய எல்லாவற்றிற்கும் பதவுரை பொழிப்புரை முதலியன எழுதி முடித்து இப்பொழுது வெளிப் படுத்துகிறேன்.

இவ்வாறு இந்நூலை வெளிப்படுத்த வேண்டுமென்று பல ஆண்டுகளாகவே எண்ணிக்கொண்டிருந்தேன். அவ்வெண்ணம் இப்பொழுதுதான் நிறைவேறியது. யார் எச் செல்வத்தை விரும்பினுலும் அவர்கள் அச் செல்வத்தை யடைதற்கு இந்நூலைத் திறந்தால் போதுமாகையால் இந் நூலுக்குச் செல்வத் திறவுகோல் என்று பெயர் கொடுத்திருக் கிறேன். இந்நூலை வாங்குபவர்கள் படிக்காமல் வீட்டில் பாது காத்து வைத்திருந்தாலுஞ் செல்வநலம் சிறந்தோங்குமாகை யால் அன்பர்கள் இந்நூலைப்பெற்றுப் பொன்னெனப் போற்றிப் பாதுகாத்து எல்லா நன்மைகளையும் அடைவார்களாக! ஒவ் வொரு நூலுக்கும் கூறப்பெற்றுள்ள பலன்கள் நன்கு கைகூடு கின்றன என்பதை நான் நடைமுறையில் அறிந்துள்ளேன்.

இந்நூலைத் தமது பாரி அச்சகத்தில் நன்முறையில் அச் சிட்டுதவிய நண்பர் திருமிகு. மு. நாராயணன் செட்டியாரவர் கள் எல்லா வகையான செல்வங்களையும் நன்குபெற்றுச் சிறப் புடன் வாழத் திருமுருகப் பெருமானுடைய திருவடிகளை வணங்குகிறேன்.

பைந்தமிழ்ப் பண்ணை,
கருப்பக்கிளர்,
தஞ்சைமாவட்டம்,
20—11—62.

சு. அ. இராமசாமிப் புலவர்.

மதிப்புரைகள்

இறைவனை வணங்கி வழிபட்டால் துன்பங்கள் தீரும் என்பதை உலகத்தில் எல்லாச் சமயத்தாரும் ஒப்புக்கொள்கிறார்கள். இந்த நாட்டில் அந்த நம்பிக்கை அதிகம். தம்முடைய துன்பங்களைப் போக்கிக் காப்பாற்றியருள வேண்டுமென்று தெய்வங்களைப் பிரார்த்திக்கும் கவசம் என்ற ஒருவகை நூல் உண்டு. வடமொழியிலுந் தென்மொழிலும் இந்தப் பிரபந்தம் வழங்குகிறது. விநாயகர் முதலியமூர்த்திகளைப் போற்றும் கவசங்கள் பல உள்ளன. விநாயக கவசம், சிவ கவசம், சக்தி கவசம் ஆகிய கவசங்களையும், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வ மாலை, மழை மாலை என்னும் நூல்களையும் தொகுத்து, பதவுரை, பொழிப்புரை, கருத்து, விரிவுரை ஆகியவற்றுடன் திரு சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள் இதை வெளியிட்டிருக்கிறார். புலவரவர்கள் பல நூல்களுக்குத் தெளிவான உரை எழுதியுள்ளவர். இலக்குமி தோத்திரத்தால் தாம் பயன் பெற்றதையும் விநாயக கவசம் முதலியவற்றால் பிறர் பயன் பெற்றதையும் உரையாசிரியர் முன்னுரையில் விளக்கியிருக்கிறார்.

இந்தப் பாராயண நூல்களைப் பொருளறிந்து படிப்பதற்கும் பலகால் பாராயணம் செய்வதற்கும் இவ்வாசிரியர் எழுதியுள்ள உரை பயன்படும். அங்கங்கே விரிவுரையில் பல அரிய கருத்துக்களையும் மரபுகளையும் விளக்கியிருக்கிறார்.

கலைமகள், ஜூலை 1963

'மனிதர் நம்புவதினும் பல அரிய செயல்கள் வழிபாட்டினால் நிறைவுறுகின்றன' (Many things are wrought by prayers than the world thinks of) என்று ஆங்கிலத்தில் ஒரு பழமொழி உண்டு. அப்பழமொழியின் உண்மையினை நம் நாட்டினரில் பலரும் கண்கூடாகக் கண்டிருக்கின்றனர்; கண்டு வருகின்றனர். நிறைமொழி மாந்தரின் மறைமொழியாகிய மந்திரங்கள் ஓதுவார் வேண்டும் பயன்களை விளைக்கும் திறத்தைப் பலரும் கேட்டிருப்பர். அவ்வாறு ஓதி வழிபட்டு இவ்வுலகில் வேண்டிய செல்வங்களை எய்துவதற்குச் சிறந்த திறவுகோலாகக் கருதக் கூடிய இந்நூலின்கண் விநாயக கவசம், சிவகவசம், சக்தி

கவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வ மாலை, மழைமாலை ஆகிய பதிகங்கள் அடங்கியுள்ளன. அவற்றிற்கெல்லாம் தெளிவான சிறந்த பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விளக்கவுரைகளைப் புதிதாக எழுதியுள்ளார் ஆசிரியர் அவர்கள். கடவுள் நம்பிக்கையுடைய எல்லோருடைய கையிலும் இத்தகைய ஒரு நூல் இருப்பது இன்றியமையாதது.

செந்தமிழ்ச் செல்வி, பிப்ரவரி 1963

இந்நூலில் விநாயக கவசம், சிவ கவசம், சக்தி கவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வ மாலை, மழை மாலை, ஆகிய ஏழு சிறுபாராயண நூல்கள் இடம் பெற்றுள்ளன. "சொல்லிய பாட்டின்பொருளுணர்ந்து சொல்லுவார் செல்வர் சிவபுரத்தினுள்ளார்" ஆதலின் அவ்வாறு பொருளுணர்ந்து சொல்லத் தக்க நிலையில் சிறந்த உரையினை எழுதி வெளியிட்டவர் கருப்பக்கிளர் திரு. சு. அ. இராமசாமிப் புலவர் ஆவர். இது பாராயணத்துக்குரிய ஒரு சிறந்த தொகை நூல். இவற்றைப் பாராயணம் செய்தே தம் வறுமை நிலை சென்று நன்னிலையுற்றதாக உரையாசிரியர் தம் அனுபவத்தைக் கூறும் போது அதற்கு மேல்சான்றுகள் வேண்டா. ஆகவே, இம்மைச் செல்வமும் மறுமைச் செல்வமும் அடைதற்குரிய வழிக்குள் புகும் வாயிற் கதவினைத் திறத்தற்குரிய திறவுகோல் இஃது என்பது சாலப் பொருத்தமே. மக்கள் வாங்கிப் படித்துப் பயன் பெற்றுய்வார்களாக. 128 பக்கங்கள் கொண்டது. விலை 150 புதுக்காசுகள். கிடைக்குமிடம்:—சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை-1.

சித்தாந்தம், ஏப்ரல் 1963

நல்ல சொற்களைப் பேசுவதும், நல்ல செயல்களைச் செய்வதும் மக்களுக்கு நன்மை தருவன என்பது அன்றுதொட்டு இன்றுவரை நிலவிவரும் இயற்கையின் நியதியாகும். இவ்வாறே நல்ல சொற்களைக் கேட்பதும், நல்லாரோடு இணங்குதலும் நலம்பல விளைவித்து வருகின்றன ; மங்கலச் சொற்களைப் பாமாலைகளாகத் தொடுத்து இறைவனை நாம் வழிவழி வணங்கி வருகின்றோம். அன்பின் ஊற்றாக விளங்கும் நனிசிறந்த பாடல்களால் இறைவனின் இன்னருளுக்குரியாரான அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் போன்ற சைவப் பெரியார்களையும், பெரியாழ்வார், நாச்சியார் போன்ற

வைணவப் பெருந்தகையாளரையும் வரலாறு மக்களுக்கு அறிவிக்கின்றது.

பொதுமக்கள் அனைவரும் தேவாரம், திருவாசகம், சிவ ஞான போதம், பகவத் கீதை முதலிய உயரிய சாத்திர நூற் களைப் படித்துப் பயன் பெறுவது மிகவும் அரிதாகும். மக்கள் தம் உள்ளப் பாங்கிற்கும் விழைவிற்கும் ஏற்றவாறு அமைந் திலங்கும் பல்வேறு தெய்வங்களையும் வழிபட எளிய இனிய தோத்திரப் பாக்கள் அமைவது மிகவும் பயனளிப்பதாகும். இந்த வகையில் பன்னூலாசான் சு. அ. இராமசாமிப் புலவர் அவர்கள் தொகுத்தும் உரை எழுதியும் வெளியிட்டுள்ள ஓர் அரிய நூலே 'செல்வத் திறவு கோல்'' ஆகும். 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்னும் கொள்கை ஏற்றதாக இருப்பினும், கல்விக்கு ஒரு தெய்வம், சக்திக்கு ஒரு தெய்வம், பொருளுக்கு ஒரு தெய்வம் என்று வைத்து வழிபாடு செய்வது— மக்களுக்கு எவை தேவையோ அவற்றிற்குரிய தெய்வங்களை வேண்டி வழிபட்டுப் பெறுவது—சிறப்பாக உள்ளது. செல்வத் திறவுகோலில் சிவன், சக்தி, கலைமகள், இலக்குமி ஆகிய தெய்வங்களை வேண்டி வழிபடும் கவசங்கள் இடம் பெற்றுள்ளன. இலக்குமி தோத்திரத்தின் ஏழு பாக்களையும் மனப்பாடம் செய்து வாய்ப்பு நேர்ந்தபோதெல்லாம் பாடிக் கொண்டிருந்த இந்நூலின் ஆசிரியர் இன்று எல்லா நலன்களை யும் பெற்ற பேரறிஞராக விளங்குகின்றார்கள். இச்செய்தியினை ஆசிரியர் அவர்கள் நூலின் முன்னுரையில் தெரிவித்துள்ளார் கள்.

நூலாசிரியரின் பேராற்றலை அவர்களுடன் பழகுபவர்கள் நன்கு உணர்வார்கள், ஒரு சில நாட்கள் இவர்களிடம் பாடம் கேட்ட அன்பர்கள் தமிழ்ப் புலமை மிகுந்த அறிஞர்களாகிய செய்தியொன்றே இவர்தம் அருந் திறனையும் பேராற்றலையும் விளக்குவதாகும்.

பாமர மக்களுக்கும் எளிதில் விளங்கும் வகையில் உரை எழுதப்பெற்று ஆசூழ் நிரம்பிய அமுதத் தோத்திரப் பாக்களைக் கொண்டொளிரும் 'செல்வத் திறவுகோல்' ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய நூல் என்பதைக் கூற வேண்டுவதேயில்லை. 'ஏடு.' மன்றல்மனை அகத்திருப்பின் வறுமைதரு தவ்வை யவண் மருவல் செய்யாள்' என்னும் மங்கலச் சொற்களை இலக்குமி தோத்திரத்தில் காணுகின்றோம். நூலைப் படித்தாலும் பயன் தரும். படிக்காது வீட்டில்

வைத்திருப்பினும் பயன்தரும் என்பது ஆசிரியரும் அவர் வாயிலாக அன்பர் பலரும் கண்ட உண்மை.

நூலைப் பெறும் மக்கள் பயனைத் துய்ப்பதோடு தம் அனுபவங்களைத் தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.

நித்திலக் குவியல், ஜனவரி 1963

ஆசிரியர்: தஞ்சை மாவட்டம் திருத்துறைப்பூண்டிக் கூற்றம் கருப்பக்கிளர் எனும் ஊரினர். இருநூறுக்கும் மேற்பட்ட நல்ல நூல்கள் தீட்டியவர்; சென்னை சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத் தமிழ்ப்பணியாளர்: நல்லவர். எளிமையும் இனிமையும் சான்றவர். இனியன் எனும் புனை பெயரினர்.

நூல்: விநாயககவசம், சிவகவசம், சக்தி கவசம், (வச்சிர பஞ்சரம்), சரசுவதி தோத்திரம், (சகல கலாவல்லி மாலை), இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வமாலை, மழைமாலை ஆகியனவும் அவற்றிற்குரிய உரையும் கொண்டது. இவற்றைத் தூய்மையோடு இருந்து நேர்மையோடு ஓதுபவர்கள் பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் சுரக்க, நீடிய ஆயுளும் கூடிய செல்வமும் பெற்று, பகை நீங்க நண்பினர் பெருகப் பெறுவர். இவற்றுள்ளும் இலக்குமி தோத்திரத்தை ஓதுவதால் வளம் பெருகும் வாழ்வு சிறக்கும்; சரசுவதி தோத்திரத்தால் புலமையும் புகழும் கிட்டும்; மக்கட்செல்வ மாலையால் பிள்ளைப் பேறு உண்டாகும்; மழைமாலை பாட மழை பெய்யும் என்றும் இவை நடைமுறையில் கைவரப்பெற்ற உண்மை யெனவும் ஆசிரியர் உணர்த்துகிறார்.

யார் எச் செல்வத்தை அடைய விரும்பினாலும், இந்நூலைத் திறந்தால் போதுமாகையால், இந்நூலுக்குச் 'செல்வத் திறவு கோல்' எனப் பெயர் கொடுத்திருப்பதாக இந் நூலாசிரியர் சுட்டுவது கொண்டு நூற்பெயர் நுணுக்கம் உணரலாம். அருமையான பாக்கள்; எளிமையான உரை. இந்நூல் ஒரு நன்னூல்; இதனை வெளிக்கொணர்ந்த இராமசாமிப் புலவர்க்கு நம் நன்றியும் பாராட்டும். இந்நூல் இருக்கும் மனைகளெல்லாம் செல்வநலம் கொழிக்கும் எனக் கூறப்பெறுகிறது. உண்மை யெனவும் ஒப்புமாறு உள்ளது. எனவே இந்நூலை நல்லோர் எல்லோரும் வாங்கியும் வாங்குவித்தும் வளமடைவார்களாக.

தமிழ்ச் செல்வி (*16—5—63*)

இஃது ஒரு தெய்வத்தன்மை பொருந்திய நூல். இந்நூல் வீட்டில் இருந்தாலே கல்விநலம் செல்வநலம்முதலியன சிறந்து

விளங்கும். இந்நூலால் உரையாசிரியர் சிறந்த பயனையடைந் துள்ளார் என்பது முகவுரையால் நன்குவிளங்குகிறது. விநாயக கவசம் முதலிய எல்லா நூல்களும் சிறந்த உரையுடன் விளங்குகின்றன. ஒவ்வொருவரும் இந்நூலின் பிரதி ஒன்றைப் பெற்று வீட்டில் வைத்து இதனுல் ஏற்படுகின்ற பயனை அநுபவத்தினுல் அறிய வேண்டுமென்று விரும்புகிருேம். நூலைப் படிக்கக்கூட வேண்டியதில்லை. வீட்டில் இருந்தாலே பெருஞ் செல்வ நலம் முதலியன உண்டாகும் என்பது வியக்கத்தக்க தன்ருே?

வணிக முரசு, ஜூலை 1963

சிவகவசம், சக்தி கவசம், சரஸ்வதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வமாலை ஆகியன அடங்கிய இந்த நூலுக்குத் திரு. இராமசாமிப் புலவர் பதவுரை பொழிப்புரை, கருத்து ஆகியவற்றை விரிவாகவும் தெளிவாகவும் எழுதி யுள்ளார். ஒவ்வொரு கவசத்தையும் ஓதினுல் குறிப்பிட்ட சில பலன்கள் ஏற்படுகின்றன என்றும் உரையாசிரியர் நூலின் முன்னுரையில் தெரிவித்திருக்கிருர். உதாரணமாக, விநாயக கவசத்தையும் சக்தி கவசத்தையும் போரில் ஓதினுல் வெற்றி ஏற்படும் என்றும் பகைவர்கள் படை புறமுதுகு காட்டி ஓடும் என்றும் இவர் கூறுகிருர். இவர் கவசங்களை ஓதத் தொடங்கிய தும் சீனர்கள் படை பின்வாங்கி விட்டதாகவும் குறிப்பிட்டிருக் கிருர். இதேபோல் பிள்ளைப்பேறு வேண்டுவோர் ஓதவும் ஒரு கவசம் இருக்கிறது. மழையைப் பெய்விக்க வேருெரு கவசத்தை ஓதலாம். கவசங்களின் பலன்களில் நம்பிக்கை கொண்டவர்கள், தெளிந்த உரையுடன் கூடிய இந்த நூலைப் பெரிதும் விரும்புவார்கள் என்பது திண்ணம். (நாளிதழ்)

நவசக்தி 21—6—63

மந்திரசக்தி வாய்ந்த இந்தத் தெய்வத் திருநூலில், விநாயக கவசம், சிவகவசம், சக்தி கவசம், சரசுவதி தோத் திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வமாலை, மழை மாலை என்னும் ஏழுநூல்கள் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை, விரி வுரை ஆகியவைகளோடு அடங்கியுள்ளன. இந்நூலைப் பாரா யணஞ் செய்வதால் அருட் செல்வம், பொருட் செல்வம், உடல் நலச் செல்வம், கல்விச் செல்வம், மக்கட் செல்வம் ஆகியவை களை அடைதலோடு பகைவர்களைவெல்லுதல், பஞ்சபாதகங்கள் நீங்கப் பெறுதல், மழையை வருவித்தல் முதலிய எல்லா வகை யான பயன்களையும் அடையலாம்.

இந்நூலில் அடங்கியுள்ள இலக்குமி தோத்திரம் இல்லத்தில் இருக்குமானல் அவ்வில்லத்தில் பிறகு ஒரு நாளும் வறுமையுண்டாக மாட்டாது. உரையாசிரியர் இந்நூலால் தாம் பயன் பெற்ற வகையை ஆறு பக்கங்கள் கொண்ட முன்னுரையில் விளக்கமாக எழுதியுள்ளார்.

சீனப் போர் தொடங்கியவுடன் தாம் இந்நூலைப் பகைவர்களாகிய சீனர்கள் தொலைய வேண்டுமென்று பாராயணஞ் செய்யத் தொடங்கியதாகவும் சில நாட்களுக்குள் சீனர்கள் போரை நிறுத்தி விட்டுப் பின்வாங்கி விட்டனர் என்றுங் குறிப்பிட்டுள்ளார். படிக்காமல் வீட்டில் வைத்திருப்பினும் பயனளிக்கக் கூடிய பெருமை வாய்ந்த இந்நூல் ஒவ்வொருவருடைய வீட்டிலும் இருக்க வேண்டியது கட்டாயமாகும்.

செங்குந்தமித்திரன், ஜனவரி 1963

விநாயக கவசம், சிவ கவசம், சக்தி கவசம், சரசுவதி தோத்திரம், இலக்குமி தோத்திரம், மக்கட் செல்வ மாலை, மழை மாலை ஆகிய நூல்கள் விளக்கவுரைகளுடன் இதன் கண் உள. கடவுள் நம்பிக்கை உடையோர்க்குப் பெரும் பயன் அளிக்க வல்ல நூல்.

குருகுலம், ஏப்ரல் 1963

———

உ

திருச்சிற்றம்பலம்

அருளுடைய பரம்பொருளே! மன்றில் ஆடும்
ஆனந்தப் பெருவாழ்வே! அன்பு ளோர்தம்
தெருளுடைய உளமுழுதுங் கோயில் கொண்ட
சிவமே!மெய் அறிவுருவாந் தெய்வ மே!இம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனும் மதித்தி யாயில்
இருளுடைய பவக்கடல்விட் டேறேன் என்னை
ஏற்றுவதற் கெண்ணுகான் இன்பத் தேவே!

திருச்சிற்றம்பலம்

உ

கணபதி துணை

செல்வத் திறவுகோல்



க. விநாயக கவசம்

மூலமும் உரையும்

[முதலில் இக்கவசத்தைக் காசிப முனிவர் முற்கல முனிவருக்கு அருளிச்செய்தார். அவர் மாண்டவிய முனிவருக்கு அருளிச்செய்தார். அவர் மரீசி முனிவருக்கு அருளிச்செய்தார். அவர் பல முனிவர்கட்குத் திருவாய் மலர்ந்தருளினர். நாட்கடன்களை முடித்துக்கொண்டு தூய்மையான ஓரிடத்தில் அமர்ந்து ஒருமையான உள்ளத்துடன் ஆனைமுகக்கடவுளை எண்ணி இக்கவசத்தைப் படிக்கவேண்டும். மனத்திற்குள்ளும் படிக்கலாம்; வெளி விட்டும் படிக்கலாம்.]

இதனை நாள் தோறும் படிப்பவர்க்கு நோயும் வறுமையும் பேய் பூதங்களால் உண்டாகின்ற பல துன்பங்களும், கவலைகளும், தீவினை முதலியவைகளும் நீங்கும். அன்றியும் பெருஞ்செல்வமும் நீண்டவாணுளும் உண்டாவதோடு மனைவிமக்கள் நண்பர்கள் முதலியோரும் அமைவர்.

பயணஞ் செல்லும் காலங்களில் இதனைப் பாடினால் எல்லா வகையான இடையூறுகளும் நீங்கிப் பயன்களெல்லாங் கைகூடும். போரிலே இதனைச் சொன்னால் வெற்றியுண்டாகும். நாள் ஒன்றுக்கு ஏழு முறை இருபத்தொருநாள் பாடினால் மாரண மந்திரத்தினால் வருஞ் சாவு நீங்குவதன்றி மந்திர தந்திரங்களும் பயனையளிக்கும். நாள் ஒன்றுக்கு இருபத்தொரு முறை இருபத்தொருநாள் பாடினால் சிறையிருப்பு விடுதலையாவதுமன்றி அரசர்களுடைய கொடுமையும் நீங்கும். அரசனைக்காணப் போகும் பொழுது அன்போடு மூன்று முறை இதனை ஓதினால் அவன் வசப்படுவான். இதனைப் படித்தாலும் ஒருவர் சொல்லக்கேட்டாலும் பூசித்தாலும் எத்தகைய துன்பமும் நீங்கும்.

[தலைமயிர், தலை, நெற்றி, புருவம், விழிகள் ஆகியவைகளைக் காக்க.]

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
அளவுபடா அதிகசவுந் தரதேக
மதோற்கடர்தாம் அமர்ந்து காக்க
விளரறநெற் றியைஎன்றும் விளங்கியகா
சிபர்காக்க புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க.

(பதவுரை) வளர்சிகையை - வளருந் தன்மையினையுடைய தலைமயிரினை, பராபரமாய் வயங்கு - மேலான கடவுளாக விளங்குகிற, விநாயகர் காக்க - விநாயகக் கடவுள் காக்கக் கடவர்; வாய்ந்த சென்னி - பொருந்திய தலையை;

அளவுபடா-அளவுக்கு உட்படாத, அதிக சவுந்தர தேகம்-மிகுந்த அழகான உடலையுடைய, மதோற்கடர் அமர்ந்து காக்க - மதச் செருக்கினையுடையவர் விருப்பத்தோடு காப்பாற்றுவாராக; விளர் அற நெற்றியை – வெளுப்பு நீங்கும் படி நெற்றியை, என்றும் – எந்நாளும், விளங்கிய காசிபர் காக்க-விளங்குகிற காசிபரானவர் காக்கக் கடவர்; புருவம் தம்மை-இரண்டு புருவங்களையும், தளர்வு இல்-தளர்ச்சி யற்ற, மகோதரர் காக்க-மகோதரரானவர் காக்கக் கடவர்; தடம் விழிகள்–அகலமான கண்களை, பாலசந்திரனர் காக்க - இளம்பிறையை அணிந்தவர் காக்கக் கடவர்.

(பொழிப்புரை) வளருகின்ற சிகையினை மேலான கடவுளாக விளங்குகிற விநாயகர் காக்கக் கடவர்; பொருந்தியதலையை அளவுக்கு உட்படாத அழகான உடலையுடைய மதோற்கடரானவர் விரும்பிக் காக்கக் கடவர்; வெளுப்பு நீங்கும்படி நெற்றியை எக்காலத்தும் விளங்குகிற காசிபரானவர் காக்கக் கடவர்; அகன்ற கண்களைப் பாலசந்திரனர் காக்கக் கடவர்.

(கருத்து) சிகை முதலியவைகளை ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(விரிவுரை) விநாயகர்; வி-நல்ல, நாயகர்-தலைவர்; நல்ல தலைவர், மேலான தலைவர், சிறந்த தலைவர் எனப் பொருள்படும் ஒரு வடசொல். கவசம்-சட்டை. துணியால் தைத்து உடலில் அணிந்து கொள்ளும் சட்டையைப் போல் இரும்பினல் சட்டை செய்து போர் வீரர்கள் தம் முடைய உடலில் அணிந்துகொள்ளுதல் மரபு. அவ்வாறு அணிந்து கொள்ளும் இரும்புச் சட்டை பகைவர்களுடைய

போர்க் கருவிகளினல் உடலுக்கு ஊறு நேராமல் பாது காப்பினைச் செய்யும்; அச்சட்டையைப்போல் விநாயகரின் புகழ்ப்பாக்களாகிய இச்சட்டை உடலுக்கும் உயிருக்கும் பாதுகாப்பினைச் செய்யும் என்னும் பொருளமையுமாறு விநாயகர் காப்பாற்ற வேண்டும் என்னும் இப்பாடல்களுக்கு விநாயக கவசம் என்று காரணப் பெயர் கொடுக்கப்பட்டது. இது ஒரு தனி நூல் அன்று; இப்பாடல்களின் சிறப்பு நோக்கித் தனியே எடுத்து அச்சிடப்பட்டது. மதோற்கடர்-மதச் செருக்கையுடையவர். மகோதரர்-பெரிய வயிற்றையுடையவர். பாலசந்திரனர்-இளந்திங்களை அணிந்தவர். இவைகளும் மேல் வருவனவும் விநாயகருடைய காரணப்பெயர்கள். (க)

[அதரம், நா, முகவாய்க்கட்டை, வாக்கு, பல், காது, மூக்கு ஆகியவைகளைக் காக்க]

கவின்வளரும் அதரங்கச முகர்காக்க
தாலங்கணக் கிரீடர் காக்க
நவில்சிபுகம் கிரிசைசுதர் காக்கனி
வாக்கைவிநா யகர்தாங் காக்க
அவிர்நகைதுன் முகர்காக்க அள்ளெழிற்செஞ்
செவிபாச பாணி காக்க
தவிர்தலுறு திளங்கொடிபோல் வளர்மணிநா
சியைச்சிந்தி தார்த்தர் காக்க.

(ப-ரை) கவின்வளரும் அதரம்-அழகு வளருகின்ற அதரத்தை, கசமுகர் காக்க-யானை முகத்தையுடையவர் காக்கக் கடவர்; தாலம்-[illegible]: கணக்கிரீடர்காக்க-கூட்டமான முடிகளையுடையவ[illegible]க் கடவர்; நவில் சிபுகம்-சொல்லப பெறுகின்ற [illegible] கட்டையை

கிரிசை சுதர் காக்க - மலைமகள் புதல்வராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர் ; வாக்கை நனி விநாயகர் காக்க— வாக்கினை நன்றாக ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர் ; அவிர்நகை - விளங்குகின்ற பல்லை: துன்முகர் காக்க - மாறுபட்ட ஆனைமுகத்தினையுடையவர் காக்க ; அள் எழில் செம்செவி - மிகுந்த அழகினையுடைய செம்மை யான காதினை; பாசபாணி காக்க - கயிற்றினைக் கையிலே யுடையவராகிய ஆனைமுகக் கடவுள் காக்க; இளங்கொடி போல் வளர்மணி நாசியை சிந்திதார்த்தர் தவிர்தல் உறாது காக்க - இளங்கொடியைப் போல் வளருகின்ற அழகிய மூக்கை, எண்ணுவோர் விரும்பியவைகளை யெல்லாம் கொடுக்கின்ற ஆனைமுகக் கடவுள் தவறாமல் காக்கக் கடவர்.

(பொ - ரை) அழகுவளருகின்ற அதரத்தை யானை முகத்தையுடையவர் காக்கக் கடவர்; நாவினைக் கூட்ட மான முடிகளையுடையவர் காக்கக் கடவர்; சொல்லப்பெறு கின்ற முகவாய்க் கட்டையை மலைமகள் புதல்வர் காக்கக் கடவர்; வாக்கினை நன்றாக ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; விளங்குகின்ற பல்லை மாறுபட்ட ஆனைமுகத்தினை யுடையவர் காக்கக் கடவர்; மிகுந்த அழகினையுடைய செம்மையான காதினைக் கயிற்றினைக் கையிலேயுடைய வராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; இளங்கொடி யைப் போல் வளருகின்ற அழகிய மூக்கை எண்ணுவோர் விரும்பியவைகளை யெல்லாம் கொடுக்கின்ற ஆனைமுகக் கடவுள் தவறாமல் காக்கக் கடவர்.

(க - து) அதரம் முதலியவைகளை ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(வி - ரை) கசம் - யானை. விநாயகர் யானை முகத்தை யுடையவ ராகையால் கசமுகர் எனப்பட்டார். தாலம்- வடசொல். கணக்கிரீடர்-கூட்டமான முடிகளையுடையவர். கிரி என்பது வடசொல். இது மலையைக் குறிக்கும்; உமா தேவியானவள் மலையரையன் மகளாகத்தோன்றியமையின் கிரிசை யெனப்பட்டாள். (உ)

[முகம், கழுத்து, தோள்கள், முலை, உள்ளம், வயிறு ஆகியவைகளைக் காக்க.]

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி
காக்ககளங் கணேசர் காக்க
வாமமுறும் இருதோளும் வயங்குகந்த
பூர்வசர்தா மகிழ்ந்து காக்க
ஏமமுறு மணிமுலைவிக் கினவிநா
சன்காக்க இதயந் தன்னைத்
தோமகலுங் கணநாதர் காக்கவகட்
டினைத்துலங்கே ரம்பர் காக்க.

(ப - ரை) காமரு பூ முகம் தன்னை - அழகிய மலரைப் போன்ற முகத்தை; குணேசர் நனி காக்க - குணேசரானவர் நன்றாகக் காக்கக் கடவர்; கணேசர் களம் காக்க - கணேசரானவர் கழுத்தைக் காக்கக் கடவர்; வாமம் உறும் இருதோளும் - அழகு மிகுந்த இரண்டு தோள்களையும்; வயங்கு - விளங்குகிற, கந்தபூர்வசர் மகிழ்ந்து காக்க - முருகக் கடவுளுக்கு முன் பிறந்தவர் ஆகிய ஆனைமுகக் கடவுள் மகிழ்ச்சியோடு காக்கக் கடவர்; ஏமம் உறு மணிமுலை-இன்பத்தைச் செய்கின்ற அழகிய முலையை; விக்கின விநாசன் காக்க-தம்மை வணங்குவார் களுடைய இடையூறுகளைப் போக்கும் ஆனைமுகக்

கடவுள் காக்கக் கடவர்; இதயம் தன்னை-உள்ளத்தை, தோம் அகலும் கணநாதர் காக்க - குற்றமில்லாத கண நாதரானவர் காக்கக் கடவர்; அகட்டினை - வயிற்றை, துலங்கு ஏரம்பர் காக்க - துலங்குகிற ஏரம்பரானவர் காக்கக் கடவர்.

(போ - ரை) அழகிய மலர் போன்ற முகத்தைக் குணேசரானவர் நன்றாகக் காக்கக் கடவர், கழுத்தைக் கணேசரானவர் காக்கக் கடவர், அழகு மிகுந்த இரண்டு தோள்களையும் விளங்குகிற முருகக் கடவுளின் தமையனார் காக்கக் கடவர்; இன்பம் மிகுந்த அழகிய முலையை விக் கிநேசுவரர் காக்கக் கடவர்; உள்ளத்தைக் குற்றம் நீங்கிய கணநாதரானவர் காக்கக் கடவர்; வயிற்றை விளங்குகின்ற ஏரம்பர் என்னும் பெயரையுடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(க - து) முகம் முதலியவைகளை ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(வி-ரை) காமர் + உ = காமரு: உ. சாரியை; குணேசர்- நல்ல குணங்களெல்லாம் மிகுதியாக அமையப் பெற்றவர். களம் கழுத்தையுணர்த்தும் வடசொல். கணேசர் - சிவ கணங்களுக்கெல்லாம் தலைமை வகிப்பவர். கந்தர் - முருகர். பூர்வசர் - முன்னுற் பிறந்தவர். விக்கிநவிநாசர் - தன்னை வணங்குபவர்க்கு நேரும் இடையூறுகளை அழிப் பவர். ஏரம்பர் என்னும் வடசொல்லுக்குப் பொருள் உருத்திர மூர்த்திக்கு அண்மையில் இருப்பவர் என்பர். இதயம் இருதயம் என்னும் வடசொல் திரிபு. (ரு)

[பக்கம், பின்பக்கம், குறி, குய்யம், தொடைப் பக்கம், தொடைகள் ஆகியவைகளைக் காக்க.]

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவம் நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை அல்லல்
உக்ககண பன்காக்க ஊருவைமங்
களமூர்த்தி உவந்து காக்க.

(ப-ரை) பக்கம் இரண்டையும் - முன் பக்கம் பின் பக்கம் என்னும் இரண்டு பக்கங்களையும், *தராதரர் காக்க*- உலகத்தைத் தாங்குபவராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; *பிருட்டத்தை*-பின் பாகத்தை, *பாவம் நீக்கும்*- தீவினையைப் போக்கும், *விக்கினகரன் காக்க*-இடையூறு களை யழிப்பவன் காக்க, *விளங்கு இலிங்கம்* - விளங்குகிற குறியை; *வியாளபூடணர் காக்க* - பாம்பணிகளையுடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; *தக்க குய்யம் தன்னை*— தகுதி வாய்ந்த குய்யத்தை, *வக்கிரதுண்டர் காக்க* - வளைந்த துதிக்கையினையுடையவர் காக்கக் கடவர்; *சகனத்தை* - தொடையின் உட்பக்கத்தை, *அல்லல் உக்க*- துன்பமற்ற, *கணபன் காக்க* -கணநாதர் காக்கக் கடவர், *ஊருவை*-தொடைகளை, *மங்களமூர்த்தி*-மங்கள மூர்த்தியானவர்; *உவந்து காக்க*-மகிழ்ந்து காக்கக் கடவர்.

(பொ-ரை) இரண்டு பக்கங்களையும் உலகத்தைத் தாங்கும் ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர். பின் பாகத்தைத் தீவினையைப் போக்கும் இடையூறுகளை யழிப்பவர்

காக்க. விளங்குகிற குறியைப் பாம்பணிகளையுடைய ஆனை முகக் கடவுள் காக்கக் கடவர். நிமிர்ந்த குய்யத்தை வளைந்த துதிக்கையினையுடையவர் காக்கக் கடவர். தொடையின் உட்பாகத்தைத் துன்பமற்ற கணநாதர் காக்கக் கடவர். தொடைகளை மங்களமூர்த்தியானவர் மகிழ்ந்து காக்கக் கடவர்.

(க–து) இரண்டு பக்கங்கள் முதலானவைகளை ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(வி – ரை) தரா-தரை; உலகம். தரர்-தாங்குப வர். ஊரு–தொடை. பாம்பணிகளை யணிபவர் சிவபெரு மானுகவும் ஈண்டு ஆனைமுகக்கடவுளை வியாள பூடணர் என் றது என்னை யெனில்; இறைவற்குரியன வெல்லாம் ஆனை முகக் கடவுளுக்கும் உண்மை பொருந்தும்; ஆனைமுகக் கடவுள் இறைவனின் ஒரு கூறேயாதலின். மங்களமூர்த்தி என்பதற்கு மங்கலந் தங்கிய வடிவத்தையுடையவரெனவும் வழிபடுவோர்க்கு மங்கலத்தைச் செய்பவரெனவும் பொரு ளுரைக்கலாம். இறைவனுடைய படைகளாகிய சிவகணங் கட்கு ஆனைமுகக் கடவுள் தலைவராதலின் கணேசர் எனவும் கணநாதர் எனவும் உரைக்கப் பெறுவர். கால் களையும் உடலையுந் தொடுக்குந் தன்மையமைந்த பகுதி யாகலின் கால்களின் மேற்பகுதி தொடையென்று பெயர் பெற்றது. காரணப் பெயர். (௪)

[முழங்கால் இருகால்கள், கைகள், முன்கை விரல்கள் ஆகியவைகளைக் காக்க.]

தாழ்முழந்தாள் மகாபுத்தி காக்கஇரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்

ஆழ்தரச்செய் ஆசாபூ ரகர்காக்க
விரல்பதும அத்தர் காக்க
கேழ்கிளரும் நகங்கள்விநா யகர்காக்க
கிழக்கினிற்புத் தீசர் காக்க.

(ப-ரை) தாழ் முழந்தாள்-நீண்ட முழங்காலை, மகாபுத்தி காக்க-பேரறி வினையுடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; இருபதம் ஏகதந்தர் காக்க-இரண்டு அடிகளையும் ஒற்றைத் தந்தத்தினையுடையவர் காக்கக் கடவர்; வாழ்கரம் - வாழ்க்கைக்கு இன்றியமையாத கைகளை, கிப்பிரப்பிரசாதனர்காக்க - விரைவிற் பயன் கொடுப்பவர் காக்கக் கடவர், முன்கையை-முன்னங் கைகளை, வணங்குவார் நோய்-வழிபடுவர்களது துன் பத்தினை, ஆழ்தரச்செய்-மறைந்து போகச் செய்கின்ற, ஆசாபூரகர் காக்க-அன்பர்களுடைய விருப்பத்தை நிறை வேற்றுகிற ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; விரல்—விரல்களை, பதும அத்தர் காக்க-தாமரை மலர் போன்ற கைகளையுடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; கேழ் கிளரும் நகங்கள்-நிறம் விளங்குகின்ற நகங்களை, விநாயகர் காக்க-நல்ல தலைவராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; கிழக்கினில் புத்தீசர் காக்க-கிழக்குத் திக்கில் அறிவுக்குத் தலைமை பூண்ட ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(போ-ரை) நீண்ட முழங்காலைப் பேரறிவினை யுடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; இரண்டு அடி களையும் ஒற்றைத் தந்தத்தினையுடையவர் காக்கக் கடவர்; வாழ்க்கைக்கு இன்றியமையாத கைகளை விரைவிற் பயன் கொடுப்பவர் காக்கக் கடவர்; முன்னங்கைகளை வழிபடு பவர்களது துன்பத்தினை மறைந்து போகச் செய்கின்ற

அன்பர்களுடைய விருப்பத்தை நிறைவேற்றுகிற ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; விரல்களைத் தாமரை மலர் போன்ற கைகளையுடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; நிறம்விளங்குகின்ற நகங்களை நல்ல தலைவராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; கிழக்குத் திக்கில் அறிவுக்குத் தலைமை பூண்ட ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(க-து) முழங்கால் முதலியவைகளை ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(வி-ரை) கால், உடலின் அரைப்பகுதியான இடம் அரையெனப்பட்டதுபோல் உடலின் காற்பகுதியான இடம் கால் எனப்பட்டது; இவை காரணப் பெயர்கள். மகாபுத்தி வடசொல்; மகா-சிறந்த, புத்தி அறிவு. ஆனைமுகக் கடவுள் சிறந்த பேரறிவினை யுடையராகலின் மகா புத்தி எனப் பெற்றார். ஏக தந்தர்; ஏகம்; தந்தர். ஏகம்-ஒன்று. தந்தர்-கொம்பினையுடையவர். ஆனைமுகக் கடவுளுடைய கொம்புகள் இரண்டினில் ஒன்று முன்னர்ப் போர்க்களத்தில் முறிவுற்றமையின் ஆனைமுகக் கடவுள் ஏக தந்தர் என்று பெயர் பெற்றார். கிப்பிரப்பிரசாதனர்-க்ஷிப்ரப்ரஸாதநர் என்னும் வடசொல்லின் திரிபு. விரைவிற் பயன் கொடுப்பவர் என்பது இதனுடைய பொருள். கிப்பிரப்பிரசாதனர் என்பதற்கு வேறுவகையானபொருள் கூறுவாரும் உளர். ஆசா பூரகர்-வடசொல், ஆசா-விருப்பம், பூரகர்-நிறைவேற்றுபவர். பதுமவத்தர்: வடசொல். பதுமம்-தாமரை. அத்தம்-கை. புத்தி ஈசர் புத்தீசர் என்றாயது. வடசொல். அறிவுக்குத் தலைமை பூண்டவர் என்பது பொருள்.

[எல்லாத் திக்குகளிலும் ஆனைமுகக் கடவுள் காக்க என்கிறது.] [ரு]

அக்கினியில் சித்தீசர் காக்கஉமா
புத்திரர்தென் ஞசை காக்க
மிகக்நிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனர்மேற் கேன்னும்
திக்கதனில் காக்கவா யுவிற்கசகன்
ணன்காக்க திகழ் உதீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கில்
ஈசநந் தனரே காக்க.

(ப-ரை) அக்கினியில் சித்தீசர் காக்க-தென் கிழக்குத் திக்கில் எல்லாச்சித்திகளுக்குந் தலைவராக விளங்கும் ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; தென் ஆசை உமாபுத்திரர் காக்க-தெற்குத் திக்கில் உமையவள் புதல்வராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; மிக்க நிருதியில்-மேலான தென்மேற்குத் திக்கில், கணேசுரர் காக்க-சிவகணங்களுக்குத் தலைவராக விளங்கும் ஆனைமுகக் கடவுள் காக்க; மேற்கு என்னும் திக்கு அதனில்-மேற்கு என்கிற திக்கிலே, விக்கினவர்த்தனர் காக்க-தம்மை வணங்காதவர்களுக்கு இடையூறுகளை மிகுவிக்கும் ஆனை முகக் கடவுள் காக்கக் கடவர்; வாயுவில்-வடமேற்குத் திக்கில், கச கன்னன் காக்க-யானைக் காதினை யுடையவர் காக்கக் கடவர்; திகழ் உதிசி-விளங்குகிற வடக்குத் திக்கில், தக்க நிதிபன் காக்க-தகுதி வாய்ந்த செல்வங்களுக்குத் தலைவனாகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; வடகிழக்கில் ஈசநந்தனர் காக்க-வடகிழக்குத் திக்கில் இறைவனுடைய புதல்வராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(போ - ரை) தென் கிழக்குத் திக்கில் எல்லாச் சித்திகளுக்குந் தலைவராக விளங்கும் ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; தெற்குத் திக்கில் உமையவள் புதல்வராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்: மேலான தென்மேற்குத் திக்கில் சிவகணங்களுக்குத் தலைவராக விளங்கும் ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; மேற்கு என்கிற திக்கிலே தம்மை வணங்காதவர்கட்கு இடையூறுகளை மிகுவிக்கும் ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; வடமேற்குத் திக்கில் யானைக் காதினையுடையவர் காக்கக் கடவர்; விளங்குகிற வடக்குத் திக்கில் தகுதிவாய்ந்த செல்வங்கட்குத் தலைவராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்; வடகிழக்கில் இறைவனுடைய புதல்வராகிய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(க-து) தென்கிழக்குத் திக்கிலும் பிற திக்குகளிலும் ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(வி - ரை) சித்தீசர் என்பதனை சித்தி ஈசர் எனவும்; சித்து ஈசர் எனவும்; பிரித்துப் பொருள் கொள்ளலாம். சித்து ஈசர் என்பதற்கு ஞானங்களுக்குத் தலைவர் எனவும் பொருள் கொள்ளலாம். சித்திகள் அணிமா முதலிய எண் வகைச்சித்திகள். தென்கிழக்குத் திக்காவது தெற்குத் திக்கும் கிழக்குத் திக்கும் ஒன்று சேருமிடம். ஆசை - திக்கு. நிதிகளுக்குத் தலைவன் குபேரனாயினும் அக்குபேரன் முதலாயினர்கட்கு இறைவனே தலைவனாதலின் அக்கூற்று ஈண்டு ஆனைமுகக் கடவுள் மேல் ஏற்றிக் கூறப்பட்டது.

[பகல், இரவு, காலை மாலை முதலிய காலங்களிலும்; இராக்கதர், பூதம் வேதாளம், மோகினி, பேய் இவைகளால் வருந் தொல்லைகளில் இருந்தும்; நோய்கள் பலவற்றி லிருந் துங் காக்க.]

ஏகதந்தர் பகல்முழுதுங் காக்க இர
 வினுஞ்சந்தி இரண்டன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கஇராக்
 கதர்பூதம் உறுவே தாளம்
மோகினிபேய் இவையாதி உயிர்த்திறத்தால்
 வருந்துயரும் முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக்குபுபா
 சாங்குசர்தாம் விரைந்து காக்க.

(ப-ரை) பகல் முழுதும் ஏகதந்தர் காக்க – பகற் காலம் முழுவதும் ஒற்றைத் தந்தத்தினையுடையவர் காக்கக் கடவர்; இரவினும் சந்தி இரண்டன் மாட்டும் - இராக் காலத்திலும் காலை மாலை வேளைகளிலும், ஓகையின் - மகிழ்ச்சியோடு, விக்கினகிருது காக்க-தன்னை வணங்காத வர்கட்கு இடையூறுகளை உண்டாக்குபவர் காக்கக் கடவர்; இராக்கதர் - அரக்கர், பூதம்-பூதங்கள், உறுவேதாளம்- வருகிற வேதாளங்கள், மோகினி-மோகினி, பேய் - பேய் கள், இவை ஆதி-இவை முதலாகிய, உயிர்த் திறத்தால் - உயிர்த் தொகையால், வரும் துயரும் – உண்டாகிற துன் பங்களையும், முடிவு இலாத – முடிவற்ற, வேகம் உறு - கடுமை மிகுந்த, பிணி பலவும்-பல நோய்களையும், பாசாங் குசர் - கயிறு தோட்டி ஆகியவைகளை உடையவர், விரைந்துகாக்க - விரைந்து காக்கக் கடவர்.

(பொ-ரை) பகற் காலம் முழுவதும் ஒற்றைத் தந்தத்தினையுடையவர் காக்கக் கடவர்; இரவினுங் காலை மாலை வேளைகளினும் மகிழ்ச்சியோடு தன்னை வணங்காதவர்கட்கு இடையூறுகளை உண்டாக்குபவர் காக்கக் கடவர்; அரக்கர், பூதங்கள், வருகிற வேதாளங்கள், மோகினிகள் பேய்கள் இவை முதலாகிய உயிர்த் தொகைகளால் உண்டாகிற துன்பங்களையும் முடிவற்ற மிகுந்த பல நோய்களையும், கயிறு தோட்டி ஆகியவைகளை உடையவர் காக்கக் கடவர்.

(க-து) பகல் முதலான காலங்களில் ஒற்றைக் கொம்பினை யுடையவர் காக்கக் கடவர்.

(வி-ரை) முன்னர் உடலின் உறுப்புக்களைக் காக்க வேண்டுமென்றவர் பின்னர் எல்லாத் திக்குகளினும் இருந்து காக்க வேண்டு மென்றார். பிறகு இப் பாடலில் பொழுதுகளிற் காக்க வேண்டுமென்றதோடு அரக்கர் பூதம் முதலியவைகளிட மிருந்தும் காப்பாற்ற வேண்டுமென்கிறார். விக்கிநகிருது என்னும் வடசொற்குப்பொருள் தம்மை வணங்காதவர்கட்கு இடையூறுகளை உண்டாக்குபவர் என்பது. ஓகை-உவகை. இராக்கதர் என்போர் இரக்கமற்ற நெஞ்சினராய்க்கொடுந் தொழில் புரியும் அரக்கர்கள். பூதம், வேதாளம், மோகினி, பேய் முதலியன சிறிது தெய்வத்தன்மை அமையப் பெற்ற ஒரு கொடிய வகுப்பைச் சேர்ந்தவை. இவைகளால் துன்பமுண்டாவது இவைகளோடு தொடர்புடையவர்கட்கே. ஆனைமுகக் கடவுள் தம் கையில் கயிறு தோட்டி முதலியவைகளை உடையவர் என்பது நூல் மரபு. (எ)

[அறிவு, தவம், தானம், மானம், புகழ், குலம், தனம், கூலம், இல்லம், மனைவி. மக்கள் நட்பினர், பேரர், உறவினர் ஆகியவைகளைக் காக்க.]

மதிஞானந் தவந்தானம் மானம்ஒளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரகம்
மனைவிமைந்தர் பயில்நட் பாதிக்
கதியாவும் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெலாம் மயூரேசர்
எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க.

(ப-ரை) மதி ஞானம்-மதித்தற்குரிய மெய்யறிவு, தவம்-புலனடக்கி நன்னெறிபற்றி யொழுகல், தானம் - கொடை, மானம்-பெருமை, ஒளி-அழகு, புகழ்-சீர்த்தி, குலம் - நற்குடிப் பிறப்பு, வண்சரீரம் - நோயற்ற நல் லுடல், முற்றும் பதிவான தனம் - எக்காலும் நீங்காத செல்வம், தானியம்-பலவகைக்கூலங்கள், கிரகம்—இல்லம், மனைவி மைந்தர் - இல்லாள் மக்கள், பயில் நட்பு ஆதி-பொருந்திய நண்பர்கள் முதலான, கதியாவும் கலந்து - எல்லா வகையான நிலைமைகளினும் பொருந்தி, சர்வாயுதர் காக்க - எல்லா வகையான படைக்கலங்களையும் உடையவர் காக்கக் கடவர்; காமர் பவுத்திரர் முன் ஆன - அழகிய பேரர் முதலான, விதி ஆரும் சுற்றம் எலாம் - ஊழ் முறைப்படி வந்தமைந்த உறவினர்களை யெல்லாம்; மயூரேசர் -மயிலூர்தியை உடையவர், எஞ்ஞான்றும் விரும்பிக் காக்க - எக்காலத்திலும் விருப்பத்தோடு காக்கக் கடவர்.

(போ-ரை) மதித்தற்குரிய அறிவு, தவம், தானம், மானம், அழகு, சீர்த்தி, குலம், நோயற்ற உடல், எக்காலும் நீங்காத செல்வம், கூலம், வீடு, மனைவி, மக்கள் பழகுகின்ற நண்பர் முதலிய எல்லா நிலைமைகளினும் பொருந்தி எல்லாவகையான படைக்கலங்களையும் உடையவர் காக்கக் கடவர்.

(க-து) அறிவு முதலியவைகளை எல்லாவகையான படைக்கலங்களையும் உடைய ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர்.

(வி-ரை) மதி ஞானம் என்பதற்கு, மதி—அறிவு (பொதுவான அறிவு) ஞானம்-மெய்யறிவு எனவும் பொருள் கொள்ளலாம். தானம்-பொருளைக் கைம்மாறு கருதாது பிறர்க்கு வழங்குதல். ஒளி என்பதற்குப் புகழ் எனப் பொருள் கொண்டு புகழ் என்பதனைக் குலத்திற்கு அடையாக்கிப் புகழ்குலம்—புகழப்படுகிற உயர் குலம் என்ப் பொருளுரைப்பினும் அமையும். உடலுக்கு வளம் நோயற்றிருத்தலாகலின் வன்சரீரம் என்பதற்கு நோயற்ற நல்லுடல் எனப் பொருள் உரைக்கப்பட்டது. அழகிய உடல் எனினுமாம். செல்வம் பலரிடமும் செல்லும் இயற்கையுடையது; அவ்வாறு பெயர்ந்து செல்லாது பொருந்துகிற செல்வம் என்று குறித்தற்குப் பதிவான தனம் என்றார். கூலங்கள் ஒன்பான் வகைப்படும். அவை உளுந்து, எள்ளு, கடலை, கொள்ளு, தினை, துவரை, நெல், பயறு கோதுமை ஆகியன. இக்கூலங்களிற் சில மாறுபாடாகவும் நூல்களிற் காணப்பெறுகின்றன. ஆனைமுகக் கடவுள் எல்லா வகையான படைக்கலங்களையும் உடையவராகலின் சர்வாயுதர் எனப்பட்டார். ஆனைமுகக் கடவுள் ஒருகால் மயிலினும் ஏறினராகலின் மயூரேசர் எனப் பட்டார்.

[வாழ்க்கை, நஞ்சு ஆகியவைகளும் பாடல்களின் பயனுங் கூறப்படுகிறது.]

வென்றிசீ விதங்கபிலர் காக்ககரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமும்ஓ
திடினும்பால் இடையூ றேன்றும்
ஒன்றுறா முனிவரர்காள் அறிமின்கள்
யார்ஒருவர் ஓதினாலும்
மன்றவாங் கவர் தேகம் பிணியறவச்
சிரதேகம் ஆகி மன்னும்.

(ப-ரை) வென்றி - வெற்றியமைந்த, சீவிதம்- வாழ்க்கையை, கபிலர் காக்க-கபில நிறமுடையவர் காக்கக் கடவர்; கரி ஆதி எலாம்-நஞ்சு முதலிய எல்லாவற்றினுமிருந்து, விகடர் காக்க-விகட விநாயகர் காக்கக் கடவர்; என்று-என்றுகூறி, இவ்வாறு-இவ்வகையாகப் பாடிய, இதுதனை-இக்கவசத்தை; முக்காலமும்-காலை நண்பகல் மாலை என்னும் மூன்று வேளைகளினும், ஓதிடின்-பாடினால், நும்பால் - உங்களிடத்தில், இடையூறு- துன்பங்கள், ஒன்றும்—ஒன்றாயினும், ஒன்றுறா-அடைய மாட்டா; முனிவரர்காள்-முனிவர்களே! அறிமின்கள்- அறிந்துகொள்ளுங்கள்; யார் ஒருவர் ஓதினாலும்-யார் ஒருவர் படித்தாலும், மன்ற-உறுதியாக, அவர் தேகம்- அவர்களுடைய உடல், பிணி அற-நோய் ஒழிய, வச்சிர தேகம் ஆகி-வச்சிரம் போன்ற கெட்டியான உறுதியமைந்த உடலாகி, மன்னும்—நிலைபெறும்.

(போ-ரை) வெற்றியமைந்த வாழ்க்கையைக் கபில நிறமுடையவர் காக்கக் கடவர்; நஞ்சு முதலிய எல்லா

வற்றினு மிருந்து விகட விநாயகர் காக்கக் கடவர் என்று கூறி இவ்வகையாகப் பாடிய இக் கவசத்தை முக்காலமும் பாடினல் உங்களிடத்தில் துன்பங்கள் ஒன்ருயினும் அடைய மாட்டா; முனிவரர்களே அறிந்து கொள்ளுங்கள். யார் ஒருவர் படித்தாலும் உண்மையாக அவர்களுடைய உடலானது நோயற்று வச்சிரம் போன்ற உறுதியுடைய தாகி விளங்கும்.

(க-து) வாழ்க்கை முதலியவைகளை ஆனைமுகக் கடவுள் காக்கக் கடவர். இக்கவசத்தைப் படிப்போர் நோயற்றவர்களாய் வச்சிரம் போன்ற உடலமைந்து வாழ்வர்.

(வி-ரை) சீவிதம்-உயிர் வாழ்க்கை; இது வாணாள் முழுவதையும் குறிக்கும். கபிலம்-கருமை கலந்த பொன்னிறம். ஆனைமுகக் கடவுள் இந்நிறமுடையவராகை யால் கபிலர் என்று பெயர் பெற்ருர். கரி-நஞ்சு. கரி என்பது யானையையுங் குறிக்குமாகலின் யானை முதலிய கொடிய விலங்குகளிடமிருந்து என்று பொருளுரைப் பினும் பொருந்தும். விநாயகர் காஞ்சியில் விகடக் கூத்து ஒன்றினைக் கொண்டாராகலின் விகடர் எனப்பட்டார். "மன்றவென் கிளவி தேற்றஞ் செய்யும்" என்பது சூத்திர மாதலின், மன்ற என்பதற்கு உறுதியாக என்று பொரு ளுரைக்கப்பட்டது. ஆங்கு: அசைநிலை. வச்சிரம்- உறுதியான பொருள்களில் ஒன்று. முக்காலமும் என் பதற்கு இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் என்னும் முக்காலமும் என்று பொருள் கூறுவாரும் உளர். காலை நண்பகல் மாலை ஆகிய மூன்று காலங்களும் என்று பொருள் கொள்ளுதலே சிறப்புடையது. (கூ)

விநாயக கவசப் பலன்

யாத்திரையில் தோத்திரஞ்சேய் தால்சகல
விக்கினமும் இரியல் போக
மூத்தபயன் கைகூடும் சமரின்மொழிந்
திடில்விசயம் முற்றும் நாளும்
ஏத்தியிரு முறைஇருபத் தோருநாள்வந்
தித்திடின்மா ரணம்ஈண் டேதம்
நீத்திடும்உச் சாடனம்ஆ கருடணம்தம்
பனமாதி நிலைபே றெய்தும்.

இரியல் போக-அழிந்து போக. மூத்தபயன்-சிறந்த பயன். சமர்-போர். விசயம் முற்றும்-வெற்றி யுண் டாகும். மாரணம்-மந்திரத்தால் ஏற்படுஞ் சாக்காடு. உச்சாடனம்-உருவேற்றிக் கூறுதல். ஆகருடணம்-இழுத்தல். தம்பனம்-கட்டுப்படுத்தி நிறுத்தல்.

நித்தலுமு வேழுமுறை செபித்திடில்கா
ராக்கிருக நீங்கு மன்னர்
பொத்துமுள நிட்டூரம் போம் அரையன்
தனைக்காணும் போது முக்கால்
பத்தியின்ஓ திடின்அவன்தான் வசப்படுவன்
இதைத்தாளிப் பனைமேல் லேட்டில்
வைத்தெழுதிப் படிப்பினுங்கேட் பினும்பூசை
வயக்கினும்வல் இடரும் தீரும்.

நித்தலும்-நாள்தோறும். காராக்கிருகம் நீங்கும்-சிறையிருத்தல் ஒழியும். பொத்தும்-வருத்தும். நிட் டூரம்-கொடுமை. வயக்குதல்-செய்தல்.

அன்புறுதி ஆசாரம் உடையார்க்கிக்
கவசத்தை அறைக அல்லார்க்கு
என்பெறினும் உரையற்க எனக்கிளந்து
மரீசிதன திருக்கை யுற்றான்.

கிளந்து—கூறி. இருக்கை—இருப்பிடம்.

உ
கணபதி துணை



உ. காரியசித்தி மாலை

மூலமும் உரையும்

நாம் இவ்வுலகிற் செய்யும் எல்லாக் காரியங்கட்கும் தெய்வத் திருவருளே துணையாக இருக்கின்றது. தெய்வத் திருவருளை நம்பாமல் தொடங்கப்பெறுங் காரியங்கள் நல்ல முறையில் நிறைவேறுவதில்லை. அவ்வாறு நம்பாமல் தொடங்குங் காரியங்கள் இனிது நிறைவேறுமானால் அதனை முற் பிறப்பிற் செய்த நல்வினைப்பயன் என்றே கூறுதல் வேண்டும். எல்லாக் காரியங்களும் இடையூறில்லாமல் இனிது நிறைவேறச் செய்பவர் ஆனைமுகக் கடவுளே. இதுபற்றியே அக் கடவுளுக்கு விக்கினேசுவரர் எனவும் பெயருண்டாகியிருக்கிறது. முன் காலத்தில் காசிப முனிவர் முதலியோர் தம்முன் அருள் செய்ய எழுந்தருளிய ஆனைமுகக் கடவுள்மீது எட்டுப் பாடல்கள் பாடினர். அப்பொழுது அவர்கட்கு அருள்செய்ய எழுந்தருளிய பிள்ளையார், "அன்பர்களே! நீங்கள் நம் மீது பாடிய இப் புகழ்ப்பாக்களை எவரேனும் காலை, நண் பகல், மாலை என்னும் மூன்று வேளைகளினும் எம்மை

நினைத்துப் பாடுவார்களாயின் அவர்களுடைய காரியங்கள் யாவும் வெற்றியடையும். எட்டு நாட்கள் பாடினால் மனம் மகிழுமாறு நன்மையை அடைவார்கள். சதுர்த்தி விரத நாளில் எட்டுமுறை பாடினால் எண்வகைச் சித்திகளுங் கைகூடும். இரண்டு மாதங்கள் நாள் தோறும் பத்து முறை பாடினால் பாடியவர்கட்கு அரசவசியம் உண்டாகும். இரண்டு மாதங்கள் நாள்தோறும் இருபத்தொரு முறை பாடுவோர், அரசாங்கம், மக்கள், சுற்றம், பொன், மணி, நெல், வாகனம், அடிமை என்னும் எண்வகைச் செல்வங் களையும் அடைவர்" என்று கூறி அருள்செய்து மறைந்தார். சில காரியங்கள் வெற்றி பெறுதலைவேண்டிய யான் நூலிற் கூறியவாறு வெற்றியுண்டாகின்றதா என்று மூன்று நாட்கள் மூன்று வேளைகளினும் பாடிப் பார்த்தேன். எனக்கு மனநிறைவு உண்டாகுமாறு எண்ணிய காரியம் இனிது நிறைவேறியது. இதனால் களிப்புற்ற யான் காரியசித்திக்கு இவ்வளவு எளிமையாக வழியிருக்கிறதே இதனை எல்லோரும் அறியுமாறு வெளிப் படுத்துவோம்; நல்வினையும் நம்பிக்கையும் உடையோர் பாடிப் பலன் பெறட்டும் என்னும் எண்ணத்தோடு இதனை முன்பு தனிச் சிறு நூலாக வெளிப்படுத்தினேன். இப்பொழுது இதனொடு ஒன்றாக இணைத்து வெளியிடப் படுகிறது.

நூல்

பந்தம் அகற்றும் அநந்தகுணப்
பரப்பும் எவன்பால் உதிக்குமோ
எந்த உலகும் எவனிடத்தில்
ஈண்டி இருந்து கரக்குமோ

சந்த மறைஆ கமங்கலைகள்
அனைத்தும் எவன்பால் தகவருமோ
அந்த இறையாம் கணபதியை
அன்பு கூரத் தொழுகின்றும்.

[உலக பந்தங்களை யெல்லாம் நீக்குவதாகிய கணக்கற்ற நற்குணப் பெருக்கங்களும் எக் கடவுளிடத்தில் இருந்து தோன்றுகின்றனவோ; எல்லா உலகங்களும் எக்கடவுளிடத்தில் பொருந்தியிருந்து மறைகின்றனவோ; இசை வடிவான மறைகளும் ஆகமங்களும் கலைகள் முதலிய யாவும் எக்கடவுளிடத்தில் இருந்து தக்கவாறு உண்டாகின்றனவோ அத்தகைய தலைமையுடைய ஆனை முகனை மிகுந்த அன்போடு வணங்குகின்றோம்.] 1

உலகம் முழுதும் நீக்கமற
ஒன்றுய் நிற்கும் பொருளேவனவ்
வுலகிற் பிறங்கும் விகாரங்கள்
உருத மேலாம் ஒளியாவன்
உலகம் புரியும் வினைப்பயனை
ஊட்டுங் களைகண் எவன்அந்த
உலக முதலைக் கணபதியை
உவந்து சரணம் அடைகின்றும்.

[எல்லா உலகங்களினும் நீக்கமில்லாமற் பொருந்தி ஒரே பொருளாக நிற்கும் கடவுள் எவனுக இருக்கின்றுனே? உலகத்திலே வெளிப்பட்டுத் தோன்றுகின்ற மாறுபாடுகள் பலவும தன்னிடத்திலே வந்து பொருந்தாமல் தான் என்றும் ஒரே நிலையுடைய மேலான ஒளியாக விளங்குகின்ற கடவுளாக இருப்பவன் எவனே?

உலகத் துயிர்கள் செய்கின்ற நல்வினை தீவினை ஆகியவை களின் பயனை நல்கும் பற்றுக் கோடாக இருப்பவன் எவனே அந்த உலக முதற்பொருளாகிய கணபதியிடத் தில் மகிழ்ச்சியோடு அடைக்கலம் புகுகின்றோம்.] 2

இடர்கள் முழுதும் எவனருளால்
எரிவீ ழும்பஞ் சேனமாயும்
தொடரும் உயிர்கள் எவனருளால்
சுரர்வாழ் பதியும் உறச்செய்யும்
கடவுள் முதலோர்க் கூறின்றிக்
கருமம் எவனுல் முடிவுறும்அத்
தடவு மருப்புக் கணபதிபொன்
சரணம் சரணம் அடைகின்றும்.

[உண்டாகின்ற துன்பங்களெல்லாம் எந்தக் கடவு ளுடைய திருவருளால் தீயிடைப்பட்ட பஞ்சைப்போல் அழிந்தொழியுமோ; பல பிறப்புக்களை அடையும் உயிர் கள் எக்கடவுளினுடைய திருவருளினுல் தேவர்கள் வாழும் உலகத்தையும் அடையுமோ; தேவர்கள் முதலியவர் கட்கு எத்தகைய இடையூறும் உண்டாகாமல் அவர்கள் தொடங்கிய காரியங்கள் எக்கடவுளுடைய திருவருளால் முடிவுபெறுமோ; அத்தன்மை பொருந்திய பெரிய தந்தங் களை யுடைய ஆனைமுகக் கடவுளின் அழகிய திருவடி களிலே அடைக்கலம் புகுகின்றோம்.] 3

மூர்த்தி யாகித் தலமாகி
முந்நீர் கங்கை முதலான
தீர்த்த மாகி அறிந்தறியாத்
திறத்தி னுனும் உயிர்க்குநலம்

ஆர்த்தி நாளும் அறியாமை
அகற்றி அறிவிப் பான்எவன்அப்
போர்த்த கருணைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றும்.

[கடவுளின் வடிவமாகியும், அக்கடவுள் எழுந்தருளிய பதியாகியும், கடல் கங்கை முதலிய புனித நீராகியும், அறியப் பெற்றும் மெய்ம்மைத் தன்மையை அளவிட்டறியப் பெருத திறத்தை யுடையவனுய், உலகத்துயிர்கட்கு நன்மைகளைக் கொடுத்து நாள்தோறும் அவ்வுயிர்த் தொகைகளின் மடமையைப் போக்கி மெய்ம்மைத் தன்மையை அறிவித் தருளுகின்றவனுகிய கடவுள் யாவனே அக்கடவுளாகிய நிரம்பிய திருவருளினையுடைய ஆனைமுகக் கடவுளை யாம் போற்றிப் புகழ்ந்து அடைக்கலமாக அடைகின்றேம்.] 4

செய்யும் வினையின் முதல்யாவன்
செய்யப் படும்அப் பொருள்யாவன்
ஐயம் இன்றி உளதாகும்
அந்தக் கருமப் பயன்யாவன்
உய்யும் வினையின் பயன்விளைவில்
ஊட்டி விடுப்பான் எவன்அந்தப்
பொய்யில் இறையைக் கணபதியைப்
புரிந்து சரணம் அடைகின்றும்.

[உலகத்தார்கள் செய்யுங் காரியக்கட்கு முதல்வனுக இருப்பவன் எவன்? செய்யப்படுகிற செயல்களெல்லாம் எவன்? ஐயப்பாடில்லாமல் உள்ளதாகின்ற காரியங்களின் பயனுக விளங்குகின்றவன் எவன்? உயிர்களை வாழச்

செய்கின்ற நல்வினையின் பயனை நடைமுறையில் ஊட்டி விடுகின்றவன் எவன்? அத்தன்மைகளெல்லாம் பொருந்திய பொய்ம்மைத் தன்மை அற்ற தலைவனாகிய ஆனைமுகக் கடவுளை விரும்பி அடைக்கலம் புகுகின்றோம்.]

வேதம் அளந்தும் அறிவரிய
விகிர்தன் யாவன் விழுத்தகைய
வேத முடிவில் நடம்நவிலும்
விமலன் யாவன் விளங்குபர
நாத முடிவில் வீற்றிருக்கும்
நாதன் எவன்எண் குணன்எவன்அப்
போத முதலைக் கணபதியைப்
புகழ்ந்து சரணம் அடைகின்றோம்.

[மறைகளானவை அளவிட்டறிய முயன்று அளவு செய்து பார்த்தும் அறிய இயலாதவாறு விளங்குகின்ற மேன்மையை உடையவன் எவன்? மேன்மைத் தன்மை பொருந்திய மறைகளின் முடிவிற் கூத்தியற்றும் மேலான கடவுள் யாவன்? விளங்குகின்ற மேலான நாத தத்துவத்தின் முடிவில் எழுந்தருளியிருக்கும் தலைவன் எவன்? எண்வகைக் குணங்களையும் உடையவன் எவன்? அத்தன்மைகளெல்லாம் அமையப் பெற்ற மெய்யறிவுக்குத் தலைவனாகிய ஆனைமுகக் கடவுளைப் புகழ்ந்து அடைக்கலம் புகுகின்றோம்.] 6

மண்ணின் ஓர்ஐங் குணமாகி
வதிவான் எவன்நீர் இடைநான்காய்
நண்ணி அமர்வான் எவன்தீயின்
மூன்றாய் நவில்வான் எவன்வளியின்
எண்ணும் இரண்டு குணமாகி
இயைவான் எவன்வான் இடைஒன்றாம்

அண்ணல் எவன்அக் கணபதியை
அன்பிற் சரணம் அடைகின்றோம்.

[மண்ணினுடைய ஐந்து குணங்களாகிப் பொருந்து கின்றவன் எக்கடவுள்? நீரினிடத்திலே நான்கு குணங்களாகித் தங்குகின்றவன் எக்கடவுள்? தீயினிடத்திலே மூன்று குணங்களாகச் சொல்லப்படுபவன் எக்கடவுள்? காற்றினுடைய நினைக்கப்பெறும் இரண்டு குணங்களாகிப் பொருந்துபவன் எக்கடவுள்? விண்ணினிடையே ஒரே தன்மையாக விளங்கும் பெருமை பொருந்தியவன் எக்கடவுள்? அத்தன்மைகளெல்லாம் அமையப்பெற்ற ஆனைமுகக் கடவுளிடம் அன்பினோடு அடைக்கலம் புகுகின்றோம்.] 7

பாச அறிவில் பசுஅறிவில்
பற்றற் கரிய பரன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பயிலப் பணிக்கும் அவன்யாவன்
பாச அறிவும் பசுஅறிவும்
பாற்றி மேலாம் அறிவான
தேசன் எவன்அக் கணபதியைத்
திகழச் சரணம் அடைகின்றோம்.

[உலகப்பற்றுள்ள அறிவினாலும், உயிர்த் தொகைகளினுடைய அறிவினாலும் கண்டுணர்தற்கரிய மேலானவன் எக்கடவுள்? உலகப்பற்றுள்ள அறிவும் உயிர் அறிவும் பொருந்துமாறு செய்கின்றவன் எக்கடவுள்? உலக அறிவையும் உயிர் அறிவையும் தன்னுடைய திருவருட்டன்மையினாலே மாற்றி மேலான மெய்யறிவைக் கொடுக்கும் ஞான ஒளி உடைய கடவுள் எவன்? அத்தன்மைகளெல்லாம் அமையப்பெற்ற ஆனைமுகக்

கடவுளை நன்கு பொருந்துமாறு அடைக்கலம் புகுகின்றேம்.] 8

நூற்பயன்

இந்த நமது தோத்திரத்தை
யாவன் மூன்று தினம்மும்மைச்
சந்தி களில்தோத் திரஞ்செயினும்
சகல கரும சித்திபெறும்
சிந்தை மகிழச் சுகம்பெறும்என்
தினம்உச் சரிக்கின் சதுர்த்தியிடைப்
பந்தம் அகல ஓர்எண்கால்
படிக்கில் அட்ட சித்தியுறும்.

(அ - ரை.) மும்மைச் சந்திகள் - காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று வேளை. சதுர்த்தி - சதுர்த்தி நாள். அட்டசித்தி - அட்டமா சித்திகள். (க)

திங்கள் இரண்டு தினந்தோறும்
திகழ ஒருபான் முறையோதில்
தங்கும் அரச வசியமாம்
தயங்க இருபத் தொருமுறைமை
பொங்கும் உழுவ லால்கிளப்பின்
பொருவின் மைந்தர் விழுக்கல்வி
துங்க வெறுக்கை முதற்பலவும்
தோன்றும் எனச்செப் பினர்மறைந்தார்.

(அ – ரை.) ஒருபான் முறை - பத்துத் தடவை. உழுவலால் கிளப்பின் - மெய்யன்போடு பாடினல். பொருவின் மைந்தர் – ஒப்பற்ற புதல்வர். துங்க வெறுக்கை – மேலான செல்வம். (உ)

உ
சிவமயம்



௩. ஆனைமுகக் கடவுளைப் போற்றுதல்

[முற்கூறிய பாடல்களைப் பாடிக் காரியசித்தி பெற்றவர்கள் தங்கள் காரியம் நிறைவேறியவுடன் அப்பெருமானை மறந்து, செய்ந்நன்றி மறந்த தீவினைக்கு உள்ளாகாமல், இப் பாடல்களால் நாள்தோறும் பிள்ளையாரைப் பாடிப் போற்றுதல் வேண்டும். அவ்வாறு போற்றினால் மேலும் பல நன்மைகள் உண்டாம்.]

தத்துவா தீத போற்றி
 தத்துவப் பொருளே போற்றி
தத்துவ முதலே போற்றி
 தத்துவ சொரூப போற்றி
தத்துவத் தியன்ற தாத்து
 விதங்களும் ஆனாய் போற்றி
தத்துவ அறிவுக் கெட்டாத்
 தயங்குபே ரறிவே போற்றி. 1

உடலினுக் குயிரே போல
 உயிர்க்குயிர் ஆனாய் போற்றி
உடலுயிர்க் கறிவு நல்கி
 உடலினைக் கழிப்பாய் போற்றி
உடலுயிர் எனப்பின் நீங்கா
 ஒற்றுமைப் பொருளே போற்றி

உடனுறை உயிர்க்கும் எட்டா
ஒளிர்பெருஞ் சோதி போற்றி. 2

விரவுதத் துவத்தின் நீங்கி
மேலென நின்ற வாவி
வரமுற உருவு கொண்டு
வந்தருள் குரவ போற்றி
பரவும்ஐங் தொழிலை நீக்கி
உயிரினைப் பணிப்பாய் போற்றி
துரியத்தின் உயிரை வாங்கும்
சுடர்ப்பெருங் கடலே போற்றி. 3

பத்தர்கள் வழங்கா நின்ற
பலவுங்கைக் கொள்வாய் போற்றி
புத்திகள் போகத் தார்க்குப்
புணர்த்தருள் போகி போற்றி
முத்தியை யோகத் தார்க்கு
முடித்தருள் யோகி போற்றி
எத்தொழி லவர்க்கும் அந்தப்
பயனருள் இறைவ போற்றி. 4

வேண்டிய அடியார்க் கெல்லாம்
விக்கினங் கெடுப்பாய் போற்றி
வேண்டிவந் தனைசெய் யார்க்கு
விக்கினங் கொடுப்பாய் போற்றி
வேண்டுவார் வேண்டிற் றெல்லாம்
விளைத்தருள் விமல போற்றி
மாண்டதுட் டர்களைக் கொல்லும்
மறமிகு மள்ள போற்றி. 5

உ

சிவமயம்

சிவாய நம:



௪. சிவ கவசம்

மூலமும் உரையும்

[இக் கவசம் பத்திராயு என்னும் இளவரசனுக்கு விடபமுனி அருளிச் செய்ததென்று நைமிசாரணிய முனிவர்களுக்குச் சூதமுனிவர் உரைத்தருளினர். இக் கவசத்தைப் பாடினுல் ஐம்பெருந் தீவினைகள் நீங்கும்; பகைகள் ஒழியும்; நமனும் அஞ்சியவனுப் பணிந்தொழுகுவான். நோய்கள் ஒழியும். வறுமை தொலையும். மற்றும் பல வகையான நன்மைகள் உண்டாகும்.]

பங்கயத் தவிசின் மேவி இருந்துடற் பற்று நீக்கி
அங்குநற் பூத சுத்தி அடைவுடன் செய்த பின்னர்க்
கங்கையைத் தரித்த சென்னிக் கற்பக தருவைச் செம்பொற்
கோங்கைவெற் பனைய பச்சைக் கொடியோடும் உளத்தில்
[வைத்தே.

(பதவுரை) பங்கயத் தவிசின் மேவி இருந்து-பத்மா சனத்திற் பொருந்தி யமர்ந்து, உடல் பற்று நீக்கி - உடலின்கண் உள்ள விருப்பத்தை யொழித்து, அங்கு நல் பூத சுத்தி- அவ்விடத்தில் நன்மையாகிய பூத சுத்தியை, அடைவுடன் செய்தபின்னர்-முறைப்படி இயற்றிய பிறகு, கங்கையை தரித்த சென்னி – கங்கையாற்றைத் தாங்கிய திருமுடியினையுடைய,கற்பக தருவை-கற்பக மரத்தைப் போன்ற சிவபெருமானை, செம்பொன் வெற்பு அனைய கொங்கை-செம்பொன் மலையைப் போன்ற கொங்கைகளையுடைய, பச்சைக் கொடியொடும் உளத்தில் வைத்து-பச்சைக் கொடி போன்றவளாகிய உமாதேவியோடும் மனத்தில் வைத்து.

(பொழிப்புரை) பதுமாசனத்தில் பொருந்தியமர்ந்து, உடலின் கண்ணுள்ள விருப்பத்தை யொழித்து, நன்மையாகிய பூத சுத்தியை முறைப்படி இயற்றிய பிறகு, கங்கையாற்றைத் தாங்கிய திருமுடியினையுடைய கற்பக மரத்தைப் போன்ற சிவபெருமானைச், செம்பொன் மலையைப் போன்ற கொங்கைகளையுடைய பச்சைக்கொடி போன்றவளாகிய உமாதேவியோடும் மனத்தில் வைத்து;

(கருத்து) பதுமாசனத்தில் அமர்ந்து பூதசுத்தி முதலியவைகளைச் செய்தபிறகு, சிவபெருமானையும் உமாதேவியையும் மனத்தில் எழுந்தருளச் செய்து கொண்டு.

(விரிவுரை) சிவ கவசம் சிவபெருமான்மீது பாடப்பட்ட பாதுகாப்பு நூல். கவசம் என்பதற்கு முன்னர் உரைத்தாம். சிவன் - மங்கல வடிவம் உடையவன்.பங்கசம்-என்னும் வடசொல் பங்கயமென்றாயது; தாமரை. சேற்றில் முளைப்பது என்று காரணப் பெயர். தவிசு -

இருக்கை. பதுமாசனம் என்பது யோகஞ் செய்வார் அமரும் நிலைகளில் ஒன்று; அஃது இரு தொடைகளின் மேலும் இரண்டு உள்ளங் கால்களையும் மாறித் தோன்ற வைத்தமர்தல். யோகஞ் செய்வாரும் இறைவழிபாடுசெய் வாரும் உடலினிடத்துப் பற்று வைத்தல் யோக நெறிக்கு இழுக்காமாகலின் பற்று நீக்கி என்றார். பூதசுத்தி- தூய்மையின் பொருட்டுச் செய்யப் பெறும் தூயசெயல் களில் ஒன்று அச் செயல் ஐவகையினை யுடையதென்பர். கற்பகதரு என்னும் தெய்வத்திருமரம் தேவருலகில் உள் ளது. அது வேண்டுவார் வேண்டியவைகளை யெல்லாம் வழங்கும் மேதகு தன்மையமையப் பெற்றது. சிவபெரு மானும் வேண்டுவார் வேண்டுவதை வழங்கும் வள்ளலா னமையின் கற்பகதரு என்று குறிக்கப்பெற்றார்.

"தூண்டு சுடரனைய சோதி கண்டாய்
தொல்அமரர் சூளாமணி தான் கண்டாய்
காண்டற் கரிய கடவுள் கண்டாய்
கருதுவார்க் காற்ற எளியன் கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே ஈவன் கண்டாய்
மெய்ந்நெறி கண்டாய் விரதமெல்லாம்
மாண்ட மனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக்காட் டுறையும் மணாளன் தானே".

என்னுந் தேவாரப் பாடலும் ஈண்டு எண்ணத் தக்கது. கொடி சுற்றிப் படர்தற்கு ஏதுவானது மரம். "தருவைக் கொடியொடும் உளத்தில் வைத்தே" என்னும் நயம் பாராட்டத் தக்கது. (க)

அகிலநா யகனாய் ஞான ஆனந்த ரூபி யாகித் (லாம்)
துகடரும் அணுவாய் வெற்பின் தோற்றமாய் உயிரை யெல்

தகவுடன் அவனி யாகித் தரிப்பவன் எம்மை இந்த
மகிதலம் அதனில் தீமை மருவிடா தருளில் காக்க.

(ப-ரை) அகிலம் நாயகன் ஆய்-உலகங்களெல்லா வற்றிற்குந் தலைவனாகி, ஞான ஆனந்த ரூபி ஆகி - அறிவின்ப வடிவத்தை யுடையவனாகி, துகள் தரும் அணுவாய்-துகளாகிய அணு வடிவமாகி, வெற்பின் தோற்றம் ஆய்-மலையின் காட்சியை உடையதாகி, உயிரை எல்லாம்-உயிர்த் தொகைகளை யெல்லாம், தகவுடன் அவனி ஆகி தரிப்பவன் - தகுதியோடு நிலவுலகமாகித் தாங்குபவன் எம்மை இந்த மகிதலம் அதனில் - எங்களை இந்த நிலவுலகத்தில், தீமை மருவிடாது—தீங்குகள் சேராதபடி, அருளின் காக்க—தம்முடைய திருவருளால் காக்கக் கடவர்.

(போ-ரை) உலகங்களுக்குத் தலைவராகி, அறிவின்ப வடிவரா யிருக்கின்ற கடவுளாகித், துகளாகிய அணுவடிவமாகி மலையின் காட்சியோடு கூடி எல்லா உயிர்களையும் தகுதியோடு நிலமாகித் தாங்குகிறவர், எங்களை யிந்த நிலவுலகத்தில் தீமைகள் நேராதபடி தம்முடைய திருவருளால் காக்கக் கடவர்.

(க-து) உலகநாதராகவும் அறிவின்ப வடிவராகவும் இருக்கின்ற சிவபெருமான், இந் நிலவுலகத்தில் ஒரு தீமையும் அணுகாதபடி எங்களைக் காக்கக் கடவர்;

(வி-ரை) அகிலம்-உலகம்; ஞானம்-மெய்யறிவு; ஆநந்தம்-இன்பம்; அவநி-நிலம். அவநி என்பதற்கு மக்களைக் காப்பது என்றும் அரசர்களால் காக்கப்படுவது என்றும் பொருள். மகி—நிலம், வடசொல்; வழிபடப் பெறுவது என்பது இதன் பொருள். (உ)

குரைபுனல் உருவங் கொண்டு கூழ்தோறும்பயன்கள்நல்கித்
தரையிடை உயிர்கள் யாவும் தளர்ந்திடா வண்ணங்
[காப்போன்
நிரைநிரை முகில்கள் ஈண்டி நெடுவரை முகட்டில் பெய்யும்
விரைபுனல் அதனுள் வீழ்ந்து விளிந்திடா தெம்மைக்காக்க.

(ப-ரை) குரைபுனல் உருவங் கொண்டு-ஒலிக்கின்ற தண்ணீரின் வடிவத்தைக் கொண்டு, கூழ்தொறும் பயன்கள் நல்கி-பயிர்கள் தோறும் பயன்களைக் கொடுத்து, தரையிடை உயிர்கள் யாவும்-நிலவுலகில் இருக்கின்ற எல்லா உயிர்த் தொகைகளும், தளர்ந்திடா வண்ணம் காப்போன்-தளர்ச்சி யடையாதபடி காத்து அருள் செய்கின்றவன், நிரை நிரை முகில்கள் ஈண்டி-வரிசை வரிசையாகக் கொண்டல்கள் நெருங்கி, நெடுவரை முகட்டில் பெய்யும்-நெடிய மலை உச்சியிற் பெய்கின்ற, விரைபுனல் அதனுள் வீழ்ந்து-விரைந்து செல்லும் தண்ணீருக்குள் வீழ்ந்து, விளிந்திடாது எம்மை காக்க-இறந்துபோகாமல் எங்களைக் காக்கக் கடவர்.

(போ-ரை) ஒலிக்கின்ற தண்ணீரின் வடிவத்தைக் கொண்டு,பயிர்கள்தோறும் அவ்வவற்றிற்குரியபயன்களைக் கொடுத்து நிலவுலகில் இருக்கின்ற எல்லா உயிர்களும் தளராதபடி காத்தருள் செய்கின்ற சிவபெருமான், வரிசை வரிசையாக முகில்கள் நெருங்கி நெடிய மலையுச்சியிற் பெய்கின்ற மழையினாற் பெருகிவரும் விரைவினையுடைய தண்ணீருக்குள் வீழ்ந்து இறந்துபோகாமல் எங்களைக் காக்கக் கடவர்.

(க-து) நீர் வடிவங்கொண்டு இவ்வுலகில் பயிர்களுக்கெல்லாம் பயன் கொடுத்து, எல்லா உயிர்களையுங்

காத்தருள் செய்கின்ற சிவபெருமான் மலையருவி நீரில் வீழ்ந்து இறந்து போகாதபடி எங்களைக் காப்பாற்றக் கடவர்.

(வி-ரை) கூழ் - பயிர்கள். பயிர்களுக்குத் தண்ணீர் வடிவங்கொண்டு விளைவினைக் கொடுப்பவர் சிவபெருமான். அப்பயன்கள் உயிர்த்தொகைகளின் பொருட்டே உண்டாக்கப்படுகின்றன. அவ்வாருகத் தண்ணீர் வடிவமாகவும் விளங்குஞ் சிவபெருமான் அவருடைய வடிவமாக வரும் மலையருவி நீரில் வீழ்ந்து யாங்கள் இறந்து போகாமல் காக்கக் கடவர் என்னும் இச்செய்யுள் மலைகளில் தவஞ்செய்துகொண்டிருக்கும் முனிவர்களுக்காகவே பாடப்பெற்றது. மலைகளில் மலையருவிகள் மிகுதி, அதில் வீழ்ந்து மாண்டு போகிறவர்களும் பலர் உள்ளனர். நிலத்தில் ஓடும் ஆற்றில் வீழ்ந்து இறந்துபோகாமல் என உரைப்பினும் பொருந்தும்; என்னை? ஆறுகள் பெரும்பாலும் மலையிற் பெய்கின்ற மழையினாலேயே தோன்றுதலின் என்க. (கூ)

கடையுகந் தன்னில் எல்லா உலகமுங் கடவுட் டீயால்
அடலைசெய் தமலை தாளம் அறைதர நடிக்கும் ஈசன்
இடைநெறி வளைதா பத்தில் எறிதரு சூறைக் காற்றில்
தடைபடா தெம்மை இந்தத் தடங்கடல் உலகில் காக்க.

(ப-ரை) கடையுகம் தன்னில்-யுகத்தின் முடிவில், எல்லா உலகமும்-எல்லா உலகங்களையும்; கடவுள் தீயால்-தெய்வத் தீயினால், அடலை செய்து—சாம்பலாக்கி, அமலை தாளம் அறைதர-உமாதேவியானவள் தாளம் அடிக்க, நடிக்கும் ஈசன்-கூத்தாடுதலைச் செய்கின்ற சிவபெருமான்,

இடைநெறி—இடைவழியே, வளை தாபத்தில்—வளைந்து கொண்ட தாபத்தீயாலும். எறிதரு சூறைக் காற்றில்-பலமாக வீசுகின்ற சுழற் காற்றினாலும், தடை படாது-தடைபடாமல், எம்மை-எங்களை, இந்த தடம் கடல் உலகில் காக்க-இந்தப் பெரிய கடல் சூழ்ந்த உலகத்தில் காப்பாற்றக் கடவர்.

(போ - ரை) யுகமுடிவுக் காலத்தில் எல்லா உலகங்களையும் தெய்வத் தீயினால் சாம்பலாக்கி, உமாதேவியானவள் தாளமடிக்கத் திருக்கூத்தாடுதலைச் செய்கின்ற சிவபெருமான், இடைவழியில் வளைந்துகொண்ட தாபத் தீயாலும் எறிகின்ற சுழற்காற்றினாலும் தடைபடாமல், எங்களை இந்தப் பெரிய கடல் சூழ்ந்த உலகத்தில் காப்பாற்றக் கடவர்.

(க-து) யுகமுடிவில் நடிக்கின்ற சிவபெருமான் தாபத்தீ சூறைக்காற்று ஆகியவைகளில் இருந்து எம்மைக் காக்கக் கடவர்.

(வி - ரை) ஊழிக் காலத்தில் எல்லா உலகங்களையும் சிவபெருமான் எரித்தழித்து அச்சுடலையில் நின்று திருக்கூத்தாடுகின்றார் என்பது நூன்முடிபு. அதனால் இவ்வாறு கூறினார். இடைநெறி வளை தாபத்தீ-இடைநெறியில் வளைத்துக்கொள்ளும் துன்பத்தை யுண்டுபண்ணும் தீ. சூறைக் காற்று - இது மேலுங் கீழுமாகப் பலமாகச் சுழன்றடிப்பது. சிறிய சூறைக் காற்று மக்களுக்குத் தொல்லை செய்யாவிடினும் பெருஞ் சூறைக் காற்று மக்களைத் தூக்கிச் சுழற்றியடித்து மாய்த்துவிடுந்தன் மையுடைய தாகையால் அக்காற்றில் இருந்துங் காப்பாற்ற வேண்டு மென்றார்.

சூறைக் காற்றிற் சிறிது மாறுபட்டது புயற்காற்று. புயற் காற்று, சூறைக்காற்று இரண்டுமே மக்களைத் துன்புறுத்திக் கொல்லக் கூடியன. (ச)

தூயகண் மூன்றி ஞேடு சுடரும்பொன் வதன நான்கும்
பாயுமான் மழுவி ஞேடு பகர்வர தாப யங்கண்
மேயதிண் புயங்கள் நான்கு மிளிருமின் னனைய தேசும்
ஆயதற் புருடன் எம்மைக் குணதிசை அதனில் காக்க.

(ப-ரை) தூய கண் மூன்றி ஞேடு - தூய்மை யமைந்த மூன்றுகண்களோடும், சுடரும் பொன் வதன நான்கும்-ஒளிசெய்கின்ற அழகிய நான்கு முகங்களும், பாயும் மான் மழுவி ஞேடு - பாய்கின்ற மானிஞேடும் மழுவிஞேடும், பகர் - சொல்லப் பெறுகின்ற, வரத அப யங்கள் மேய - வரதத்தோடும் அபயத்தோடும் கூடிய, திண்புயங்கள் நான்கும் – உறுதியாகிய நான்கு தோள் களும், மிளிரும் - விளங்குகின்ற, மின் அனைய தேசும்- மின்னலையொத்த ஒளியும், ஆயதற்புருடன் - உடையவ ராகிய தற்புருடம் என்னும் முகத்தையுடைய சிவபெரு மான், எம்மைக் குணதிசை அதனில் காக்க - எங்களைக் கிழக்குத் திக்கிலே காக்கக் கடவர்.

(பொ - ரை) தூய்மை யமைந்த மூன்று திருக்கண்க ளோடும், ஒளிசெய்கின்ற அழகிய நான்கு முகங்களோடும், பாய்கின்ற மானிஞேடும் மழுவிஞேடும் சொல்லப்பெறுகிற வரதத்தோடும் அபயத்தோடும் கூடிய உறுதியாகிய நான்கு தோள்களும் விளங்குகின்ற மின்னலையொத்த ஒளியும் உடையவராகிய தற்புருடம் என்னும் முகத்தையுடைய சிவபெருமான், எங்களைக் கிழக்குத் திக்கிலே காக்கக் கடவர்.

(க - து) முக்கண்களை யுடையவராகிய சிவபெருமான் எங்களைக் கிழக்குத் திக்கிலே காக்கக் கடவர்.

(வி-ரை) தூயகண் மூன்று என்று சிறப்பித்துக் கூறியது, திங்கள், கதிரவன், தீ என்னும் மூன்று கண்களை. வதனம் நான்கு-சத்தியோசாதம், வாமதேவம், ஈசானம், தற்புருடம் என்பன. அபயக்கை - அஞ்ச வேண்டாம் என்னும் குறிப்பினையுடைய கை. வரதக்கை - அன்பர்களுக்கு வரங்களைக் கொடுத்துக் காக்குங் கை. (ரு)

மான்மழு சூலந் தோட்டி வனைதரும் அக்க மாலை
கூன்மலி அங்கு சந்தீத் தமருகங் கொண்ட செங்கை
நான்முக முக்கண் நீல நள்ளிருள் வருணங் கொண்டே
ஆன்வரும் அகோர மூர்த்தி தென்திசை அதனில் காக்க.

(ப-ரை) மான் மழு சூலம் தோட்டி - மானும் மழுவும், சூலமும் தோட்டியும், வனைதரும் அக்கமாலை - அழகு செய்யப் பெற்ற சிவகண் மணிமாலையும், கூன்மலி அங்குசம்-வளைவு பொருந்திய அங்குசமும், தீ, தமருகம்-நெருப்பும் தமருகமும் (ஆகிய இவைகளெல்லாவற்றையும்) கொண்ட-அணிந்த, செம் கை - சிவந்த திருக்கைகளையும், நான்முகம்-நான்கு முகங்களையும், முக்கண்-மூன்று கண்களையும், நீலம் நள் இருள் வருணம்-நீலமாகிய நடு இரவின் இருள் நிறத்தையும், கொண்டு - மேற்கொண்டு, ஆன்வரும்-காளையின் மேல் ஏறி வருகின்ற, அகோர மூர்த்தி-அகோரம் என்னும் முகத்தையுடைய சிவபெருமான், தென்திசை அதனில் காக்க-தெற்குத் திக்கில் என்னைக் காக்கக் கடவர்.

(பொ-ரை) மானையும் மழுவையும் சூலத்தையும தோட்டியையும் அழகு செய்யப்பெற்ற கண்மணிமாலையை

யும் வளைவு பொருந்திய அங்குசத்தையும் நெருப்பையும், உடுக்கையையும் தாங்கியவரும், சிவந்த திருக்கைகளையும், நான்கு முகங்களையும், மூன்று கண்களையும் நீலமாகிய நள்ளிரவின் நிறத்தையுங் கொண்டு காளையின்மேல் ஏறிவருகின்றவரும் ஆகிய அகோர மூர்த்தியானவர் தெற்குத் திக்கில் என்னைக் காக்கக் கடவர்.

(க - து) மான் மழு முதலியவைகளை யுடையவராய்க் காளை யூர்தியிலேறி வருகின்ற அகோர மூர்த்தியானவர் தெற்குத் திக்கில் என்னைக் காக்கக் கடவர்.

(வி-ரை) மான்-தாருகாவன முனிவர்கள் வேள்வியில் தோன்றி அவர்களால் செலுத்தப்பட்ட மான். மழு-இரும்பினாலாகிய இஃது எப்பொழுதும் எரிந்துகொண்டிருக்கும். தோட்டி-யானையைக் குத்தி யோட்டுங் கருவி. அங்குசம்-இதுவுந் தோட்டியைப் போன்றதே. கண்மணி மாலைக்கு வினை தல்; பொற்றகடு வேய்ந்து வில்லையிடுதல் முதலியன. சிவபெருமான் நிறம் செம்மையாயினும் அகோர மூர்த்தியாகுஞ் சமயத்தில் உடல் கறுத்துவிடுமாகையால் 'நள்ளிருள் வருணங்கொண்டே' என்றார். (சு)

திவண்மறி அக்க மாலை செங்கையோர் இரண்டுந் தாங்க
அவிர்தரும் இரண்டு செங்கை வரதத்தோ டபயந் தாங்கக்
கவினிறை வதனம் நான்கும் கண்ணுேந மூன்றுங் காட்டுந்
தவளமா மேனிச் சத்தியோ சாதன்மேல் திசையில் காக்க.

(ப - ரை) திவள்மறி-மெலிந்த மான்கன்று, அக்க மாலை-கண்மணிமாலை, செம் கை ஒர் இரண்டும் தாங்க - (இவைகளைச்) சிவந்த கைகளிரண்டும் ஏந்தவும், அவிர் தரும் இரண்டு செங்கை-விளங்குகின்ற இரண்டு சிவந்த

கைகள், வரதத்தோடு அபயம் தாங்க - வரதத்தடனே அபயத்தையுந் தாங்கவும், கவின்நிறை வதனம் நான்கும்- அழகுநிறைந்த திருமுகங்கள் நான்கையும், கண் ஒரு மூன்று-கண்கள் ஒரு மூன்றையும், காட்டும் - வெளியே தெரியச் செய்கிற, மா - பெருமைபொருந்திய, தவளம் மேனி - வெண்மையாகிய உடலினையுடைய, சத்தியோ சாதன் - சத்தியோசாதர் என்னும் பெயரையுடைய சிவ பெருமான், மேல்திசையில் காக்க - மேற்குத் திக்கில் (என்னைக்) காக்கக் கடவர்.

(பொ-ரை) மெலிந்த மான்கன்று கண்மணிமாலை இவைகளை ஒர் இரண்டு சிவந்த கைகளுந்தாங்கவும், விளங்கு கின்ற இரண்டு சிவந்த கைகள் வரதத்தையும் அபயத்தை யுந்தாங்கவும், அழகுநிறைந்த நான்கு திருமுகங்களையும் ஒருமூன்று கண்களையுங் காட்டுகின்ற பெருமைபொருந்திய வெண்மையாகிய உடலினையுடைய சத்தியோசாதர் என் னும் பெயரையுடைய சிவபெருமான் மேற்குத் திக்கில் என்னைக் காக்கக் கடவர்.

(க - து) மான்கன்று அக்கமாலை அபயவரதம் முதலியவற்றையுடைய வெள்ளைநிறத்தினராகிய சத்தியோ சாதர் மேற்குத்திக்கில் என்னைக் காக்கக் கடவர்.

(வி - ரை) அக்கமாலை-உருத்திராக்கமாலை. உருத் திரமூர்த்தியினுடைய கண்ணில் இருந்து ஒருகாலத்தில் தோன்றியநீர் மணிகளாக மாறியமையின் உருத்திராக்க மணிகளென்று பெயர்பெற்றன. சிவபெருமானே அம்மணி களாலாகிய மாலையைக் கையிற்கொண்டு தம் அருமறை யாகிய திருவைந்தெழுத்தைத் தாமே உருவேற்றுகின்றார்

என்பது நூன்முடிபாகலின் அக்கமாலை தாங்குதலைக் குறிப்பிட்டார். இறைவன் உயிர்த்தொகைகளை இயக்கு வதற்கு உருவேற்றல் இன்றியமையாதது. முதல்வன் புரியுஞ் செயல்களை உயிர்களும் புரியலாகும். "தென்பா லுகந்தாடுந் தில்லைச்சிற்றம்பலவன் பெண்பால் உகந்தான் பெரும்பித்தன் காணேடி, பெண்பால் உகந்திலனேல் பேதாய்! இருநிலத்தோர் விண்பால் யோகெய்தி வீடுவர் காண் சாழலோ" என்றதுங் காண்க. (எ)

கறைகெழு மழுவும் மானும் அபயமுங் கண்ணின் நாமம்
அறைதரு தொடையுஞ் செய்ய அங்கைகள் நான்கும் ஏந்திப்
பொறைகோள்நான் முகத்து முக்கண் பொன்னிற மேனி
[யோடும்
மறைபுகழ் வாம தேவன் வடதிசை அதனில் காக்க.

(ப - ரை) கறை கெழு மழுவும்-கறைபொருந்திய மழுப்படையினையும், மானும் - மானையும், அபயமும் - அபயத்தையும், கண்ணின் நாமம் அறைதரு தொடையும்- கண்ணினதுபெயரால் கூறப்படுகின்ற மாலையையும், (உருத் திராக்கமாலை என்னுஞ் சிவகண்மணிமாலை) செய்ய- சிவந்த, அங்கைகள் நான்கும் ஏந்தி-அழகிய கைகள் நான்கிலேயுந் தாங்கி, பொறைகொள்-பொறுமையைக் கொண்ட, நால்முகம் - நான்குமுகங்களையும், முக்கண்- மூன்று கண்களையும் (உடையவராய்) பொன் நிற மேனி யோடு-பொன்னிறத்தையுடைய உடலோடு, மறைபுகழ் - மறைகளால் புகழ்ந்தோதப்பட்ட, வாமதேவன் - வாம தேவர் என்னும் பெயரையுடைய சிவபெருமான், வடதிசை அதனில் காக்க-வடக்குத் திக்கிலே என்னைப் பாதுகாக்கக் கடவர்.

(பொ-ரை) கறைபொருந்திய மழுவையும் மானை யும் அபயத்தையும் சிவகண்மணிமாலையையும் அழகிய கைகள் நான்கினிடத்திலேயுந் தாங்கிப் பொறுமையைக் கொண்டவராய், நான்கு திருமுகங்களும் மூன்றுகண்களும் பொன்னிறமும் அமையப்பெற்று; மறைகளால் புகழப் பட்ட வாமதேவர் என்னும் பெயரினையுடைய சிவபெரு மான் என்னை வடக்குத்திக்கில் காக்கக் கடவர்.

(க - து) மழு மான் முதலியவைகளையுடையவரும் வாமதேவர் என்னும் பெயரினையுடையவரும் ஆகிய சிவபெருமான் என்னை வடக்குத்திக்கில் காக்கக் கடவர்.

(வி - ரை) மழு - படைகளில் ஒன்று. அதற்குக் கறை அரக்கர் முதலிய கொடியவர்களைக் கொன்றொழித் தமையான் உண்டாகியது. கண்ணின்-நினைக்குமிடத்து, நாமம் அறைதரு தொடை - திருப்பெயரைச் சொல்லுங் கால் உருட்டுகின்ற செபமாலை எனப்பிரித்துப் பொருள் கூறுவாரும் உளர். வாமம் என்னுந் திருமுகம் வடக்கு நோக்கியதாகலின் வடக்குத்திக்கில் காப்பதற்கு வேண்டப் படுவதாயிற்று. (அ)

அங்குசம் கபாலம் சூலம் அணிவர தாப யங்கள்
சங்குமான் பாசம் அக்கம் தமருகம் கரங்க ளேந்தித்
திங்களிற் றவள மேனி திருமுகம் ஐந்தும் பெற்ற
எங்கள்ஈ சான தேவன் இருவிசும் பெங்குங் காக்க.

(ப - ரை) அங்குசம் கபாலம் சூலம்-அங்குசம் மண்டையோடு சூலம், அணி வரத அபயங்கள் - அழகிய வரத அபயங்கள், சங்கு மான் பாசம் அக்கம் தமருகம்- சங்கு, மான், கண்மணிமாலை, உடுக்கை; (ஆகியவைகளை)

கரங்கள் ஏந்தி-கைகளில் தாங்கி, திங்களில் தவளமேனி-திங்களைப்போன்ற.வெள்ளிய உடலையும், திருமுகம் ஐந்தும் பெற்ற-திருமுகங்கள் ஐந்தையும் படைத்தருளிய, எங்கள் ஈசானதேவன்-எங்களுடைய ஈசானதேவராகிய சிவபெருமான், இருவிசும்பு எங்கும் காக்க-பெரிய விண்முழுவதிலும் எம்மைக் காக்கக் கடவர்.

(போ - ரை) அங்குசம் மண்டையோடு சூலம் அழகிய வரத அபயங்கள் சங்கு மான் பாசம் கண்மணி மாலை உடுக்கை ஆகியவைகளைக் கைகளிலே ஏந்திக் கொண்டு, திங்களைப்போல் வெள்ளிய உடலையும் ஐந்து திருமுகங்களையும் படைத்திருக்கின்ற எங்களுடைய ஈசான தேவராகிய சிவபெருமான் பெரியவிண்ணிடமெலாமிருந்து எம்மைக் காக்கக் கடவர்.

(க-து) அங்குசம் முதலியவைகளையுடைய ஈசான தேவர் பெரிய விண்முழுதும் இருந்து எம்மைக் காக்கக் கடவர்.

(வி - ரை) தலையோடு : இஃது ஆணவங் கொண்டெழுந்த நான்முகனுடையது. இறைவன் தம்முடைய முழுமுதற் றன்மையை உலகிற்குப் புலப்படுத்துவான் இதனைத் தாங்குகின்றார். பாசம் என்பது கயிற்றைப் போல் உள்ள ஒரு படைக்கலம். இறைவன் ஐம்முகங்கட்கும் ஏற்ப ஐவகை நிறங்களைப் படைத்தருளுகின்றார். ஈசான முகம் ஈசான திக்கைநோக்கி அமைந்தது. முன்பாடல்களில் நான்கு திக்குகளினுங் காக்க என்றவர் இப்பாடலில் விண்ணிடமெலாமிருந்து காக்கவேண்டினர். திக்குகளில் இருந்து தீமைநேர்தலன்றி விண்ணில் இருந்து இடி முதலி

யவைகளாலுந் தீமை நேரக்கூடுமாதலின் விண்ணிடத்தை யுக் குறிப்பிட்டார். (௬)

சந்திர மவுலி சென்னி; தனிநுதற் கண்ணன் நெற்றி;
மைந்துறு பகன்கண் தோட்டோன் வரிவிழி; அகில நாதன்
கோந்துணர் நாசி; வேதங் கூறுவோன் செவி;க பாலி
அந்தில்செங் கபோலம்; தூய ஐம்முகன் வதனம் முற்றும்.

(ப-ரை) சந்திரமவுலி சென்னி-திங்களைமுடியில் அணிந்த சிவபெருமான் தலையையும், தனிநுதல்கண்ணன் நெற்றி—ஒப்பற்ற நெற்றிக்கண்களையுடையவன் நெற்றியை யும், மைந்து உறுபகன் கண்தொட்டோன் வரிவிழி-பலம் பொருந்திய கதிரவனுடைய கண்ணைப் பிடுங்கியவன் கோடுகள் பொருந்திய விழியையும், அகிலநாதன் கொந்து உணர்நாசி-உலகத்திற்குத் தலைவனாக இருப்பவன் பூங் கொத்துக்களின் மணத்தையறிகிற மூக்கினையும், வேதம் கூறுவோன் செவி-மறைகளையியம்புபவன் காதுகளையும், கபாலி செங்கபோலம்-கையிலே மண்டையோட்டை யுடையவன் சிவந்த கன்னங்களையும், தூய ஐம்முகன் வதனம் முற்றும்-தூய்மைமிக்க ஐந்து திருமுகங்களை யுடையவன் முகம் முழுவதையும்;

(பொ-ரை) திங்களை முடியிலணிந்த சிவபெருமான் தலையையும், நெற்றிக்கண்ணையுடையவன் நெற்றியையும், பலம்பொருந்திய கதிரவனுடைய கண்ணைப் பிடுங்கியவன் கோடுகள் பொருந்திய விழியையும், உலகத்தலைவன் பூங் கொத்துக்களின் மணத்தையறிகிற மூக்கையும், மறை களைக் கூறுவோன் காதுகளையும், மண்டையோட்டை யுடையவன் சிவந்த கன்னங்களையும், தூய்மையான ஐந்து

திருமுகங்களையுடையவன் முகம் முழுவதையும். இச்செய் யுள் முடிவுறாது அடுத்த செய்யுளைத் தொடர்கிறது.

(க - து) திங்களையணிந்த இறைவன் தலை முதலி யவைகளைக் காக்கக் கடவன்.

(வி - ரை) சந்திரமவுலி: சினையாகுபெயர். கதிர வன்கண் பிடுங்கப்பட்டது தக்கனது வேள்வியில், அந்தில்: அசையிடைச்சொல். நெற்றிக்கண்ணோடு கூடியிருத்தல், கதிரவன் கண்ணைப் பிடுங்குதல், உலகத் தலைவனாக இருத் தல், மறைகூறுதல் மண்டையோட்டோடிருத்தல், தூய ஐம்முகங்களோடிருத்தல் ஆகியயாவும் இறைவன் செயலே. இறைவனுடைய பல பண்புகளையுஞ் சுட்டவேண்டி இவ்வாறு பிரித்துக் கூறினார். (௧0)

வளமறை பயிலும் நாவன்நா;மணி நீல கண்டன்
களம்;அடு பிநாக பாணி கையிணை; தரும வாகு
கிளர்புயம்; தக்கன் யாகங் கேடுத்தவன் மார்பு; தூய
ஒளிதரு மேரு வில்லி உதரம்; மன்மதனைக் காய்ந்தோன்.

இடை;இப முகத்தோன் தாதை உந்தி; நம்ஈசன் மன்னும்
புடைவளர் அரை;கு பேர மித்திரன் போருவில் வாமம்;
படர்சக தீசன் சானு; பாய்தரும் இடப கேது
மிடைதரு கணைக்கால்; எந்தை விமலன்சேம் பாதம் காக்க.

(ப - ரை) வளமறை பயிலும் நாவன் நா-வளப்பம் பொருந்திய மறைகளைப் பயிலும் நாவினையுடையவன் நாவையும்; மணிநீலகண்டன் களம் - நீலமணி போன்ற கரிய கழுத்தினையுடையவன் கழுத்தையும்; அடு பிநாக பாணி கைஇணை - பகைவரை வெல்லுகின்ற பிநாகம்

என்னும் வில்லினைக் கையிலேயுடையவன் இரண்டு கைகளையும்; தரும வாகு கிளர்புயம்-அறத்தையே தோளாகவுடையவன் மேலெழுந்தோங்குகின்ற தோள்களையும்; தக்கன் யாகம் கெடுத்தவன் மார்பு - தக்கனுடைய வேள்வியை அழித்தவன் மார்பையும்; தூய ஒளிதரு மேரு வில்லி உதரம் - சிறந்த ஒளியைக் கொடுக்கின்ற மேரு மலையை வில்லாகவுடையவன் வயிற்றினையும்; மன்மதனைக் காய்ந்தோன் இடை - காமனைச் சினந்து அழித்தவன் இடையையும்; இப முகத்தோன் தாதை உந்தி - யானை முகக் கடவுளுக்குத் தந்தையாக விருப்பவன் நாபியையும்; நம் ஈசன் மன்னும் புடைவளர் அரை - நம்முடைய ஈசுவரனானவன் நிலைபெற்ற பக்கத்தில் வளர்கின்ற அரையையும்; குபேரமித்திரன் பொருவு இல் வாமம் - குபேரனுக்கு நண்பனாக இருப்பவன் ஒப்பற்ற இடப்பாகத்தையும்; படர் சகநீசன் சானு - எங்கும் பரவியுள்ள உலகத் தலைவன் முழங்கால்களையும்; பாய் தரும் இடப கேதுமிடைதரு கணைக்கால் - பாய்தலைச்செய்கின்ற இடபக் கொடியை உடையவன் நெருங்கிய கணைக்கால்களையும்; எந்தை விமலன் செம்பாதம் - எம்முடைய தந்தையாகிய தூயோன் சிவந்த கால்களையும், காக்க - காப்பாற்றியருள்க.

(போ - ரை) வளப்பத்தினையுடைய மறையைப் பயிலும் நாவினையுடையவன் நாவையும், நீலமணிபோன்ற கரிய கழுத்தினையுடையவன் கழுத்தையும், போர் செய்கின்ற பினாகம் என்னும் வில்லைக் கையிலேந்தியவன் கைகளையும், அறத்தையே தோளாக உடையவன் விளங்குகின்ற தோள்களையும், தக்கனுடைய வேள்வியை அழித்தவன் மார்பினையும், சிறந்த ஒளியைக் கொடுக்கின்ற மேரு

மலையை வில்லாக உடையவன் வயிற்றையும், காமனைச் சினந்து எரித்தவன் இடையையும், யானைமுகத்தையுடைய ஆனைமுகக் கடவுளுக்குத் தந்தையானவன் நாபியையும், நம்முடைய இறைவனாக விருப்பவன் நிலைபெற்ற பக்கத்தில் வளருகின்ற அரையையும், குபேரனுக்கு நண்பனாக உள்ளவன் ஒப்பற்ற இடப்பாகத்தையும், எங்கும் நிறைந்த உலகத் தலைவனானவன் முழங்கால்களையும், பாய்கின்ற இடபக்கொடியை உடைய இறைவன் நெருங்கிய கணைக் கால்களையும், எந்தையாகிய மலமற்ற தூயோன் சிவந்த கால்களையுங் காப்பாற்றியருள்க.

(க - து) வளமறை பயிலும் நாவன் முதலிய தன்மைகளையுடைய இறைவன் நா முதல் அடிவரை உள்ள உறுப்புக்களைக் காத்தருள்க.

(வி - ரை) மறை மிகுந்த சிறப்பினையுடையதாகை யால் வளமறை என்றார். மணிநீலகண்டன் என்பதற்கு அழகிய கரிய கழுத்தையுடையவன் என்று பொருள் கூறினும் அமையும். இறைவனுடைய கழுத்துக்குக் கரிய நிறம் நஞ்சினையுண்ணத் தொடங்கி அதனைத் தேவர்களின் வேண்டுகோளின்படி கண்டத்திலேயே நிறுத்தியபடியால் உண்டாகியது. சிவபெருமானுடைய வில்லின் பெயர் பினாகம் என்பர். இறைவனுக்கு அறமே தோள்களாக விளங்குகின்றன என்பது நூன்முடிபாகலின் தருமவாகு என்றார். பாகு என்னும் வடசொல் திரிந்து வாகு என்றா யது. சந்திரமவுலி என்னும் பாட்டு முதல் இடையிப முகத்தோன் தாதை என்னும் பாட்டுவரை ஒருதொடராக நின்று முடிந்தன. இவ்வாறு பல பாடல்கள் தொடர்ந்து நின்று ஒருமுடிபைக் கொள்ளுதலைக் குளகம் என்பர்.

"குளகம் பலபாட் டொருவினைகொள்ளும்" என்பது இலக்கணவிதி. இபம் – யானை. இடை - உடலின் மேலிடத்திற்குங் கீழிடத்திற்கும் இடைப்பட்டு நின்றமையால் எய்திய காரணப்பெயர். அரை – இடைக்குச் சிறிது கீழ்ப்பகுதி; இஃது உடலின் நடுவில் செம்பாதியாக அமைந்த இடமாகலின் அரையெனக் காரணப்பெயர். கால் - உடலின் முழுப் பகுதியில் நான்கில் ஒரு பகுதியாக அமைந்தமையால் போந்த காரணப்பெயர். தொடை - உடலின் மேற்பகுதியையுங் காலையும் ஒன்றுபடத் தொடுத்து நிற்குமிடமாதலால் தொடையெனப்பட்டது.

வருபகன் முதல்யா மத்து மகேசன்பின் னிரண்டாம் யாமம்
பொருவறு வாம தேவன் புகன்றிடும் மூன்றும் யாமம்
செருமலி மழுவாள் அங்கைத் திரியம்பகன் நாலாம் யாமம்
பெருவலி இடப ஊர்தி பிணியற இனிது காக்க.

(ப - ரை) வருபகல் முதல் யாமத்து - வருகின்ற பகற்காலத்தின் முதல் யாமத்திலே, மகேசன் - மகேசனானவனும், பின் இரண்டாம் யாமம் – பிறகு இரண்டாம் யாமத்திலே, பொருவு அறு வாமதேவன் - ஒப்பில்லாத வாமதேவன் ஆனவனும், புகன்றிடும் மூன்றும் யாமம் - சொல்லப்பெறுகிற மூன்றும் யாமத்திலே, செருமலி மழு வாள் அங்கை திரியம்பகன் - போர்த்தொழில் மிகுந்த மழுப்படையையும் வாட்படையையும் அழகிய கைகளிலே தாங்கிய முக்கண்ணன் ஆனவனும், நாலாம் யாமம்-நான்காவது யாமத்திலே, பெருவலி-பேராற்றலையுடைய, இடப ஊர்தி-காளையை ஊர்தியாகக் கொண்டோன் ஆனவனும், பிணி அற இனிது காக்க– நோயில்லாமல் நன்கு காக்கக் கடவர்.

(பொ-ரை) வருகின்ற பகற் காலத்தின் முதல் யாமத்திலே மகேசனுனவனும், பிறகு இரண்டாம் யாமத்திலே ஒப்பில்லாத வாமதேவனுனவனும், சொல்லப் பெறுகிற மூன்ரும் யாமத்திலே போர்த் தொழில் மிகுந்த மழுப்படையையும் வாட்படையையும் அழகிய கைகளிலே தாங்கிய முக்கண்ணனுனவனும், நான்காவது யாமத்திலே பேராற்றலேயுடைய காளேயை ஊர்தியாகக் கொண்ட கடவுளாகத் திகழ்பவனுமாகிய இறைவன் இனிது காக்கக்கடவன்.

(க—து) பகற் காலத்தின் முதல் யாமம் முதலியவைகளில் இறைவன் காக்கக் கடவன்.

(வி — ரை) இப் பாட்டில் யாமங்கள் நான்கினும் சிவபெருமான் காக்கக் கடவன் என்ருர். யாமம் என்பது ஏழரை நாழிகை கொண்ட கால அளவு. மகேசன் என்பதற்குப் பெருஞ் செல்வத்தை யுடையவன் என்று பொருள் கூறுவர். வாமதேவன்-மேலான கடவுள். இடப் பக்கத்திலே இறைவியைக் கொண்ட கடவுள் எனினுமாம். திரியம்பகன் : வடசொல். திரி-மூன்று. அம்பகம்—கண்; அம்பகன் - கண்களேயுடையவன். திரியம்பகன் என்பதற்கு மூன்றுலகங்களுக்குந் தந்தை யெனவும் பொருள் கூறலாம். இடப ஊர்தி - காளேயாகிய ஊர்தி; இவ்விடபத்தைத் திருமால் என்பர்.

“ கடகரியும் பரிமாவுந் தேருமுகந் தேருமல்
இடபமுகந் தேறியவா றெனக்கரிய இயம்பேடி
தடமதில்கள் அவைமூன்றும் தழலெரித்த அந்நாளில்
இடபமதாய்த் தாங்கினுன் திருமால்காண் சாழலோ.”

என்பது திருவாசகம். (கரு)

கங்குலின் முதல்யா மத்துக் கலைமதி முடித்தோன் காக்க
தங்கிய இரண்டாம் யாமம் சானவி தரித்தோன் காக்க
பொங்கிய மூன்றும் யாமம் புரிசடை அண்ணல் காக்க
பங்கமில் நாலாம் யாமம் கௌரிதன் பதியே காக்க.

(ப - ரை) கங்குலின் - இராப்பொழுதின், முதல் யாமத்து - முதல் யாமத்திலே, கலைமதி முடித்தோன் காக்க - கலையினையுடைய திங்களை முடியிற் றாங்கியவனாக விளங்கும் இறைவன் காக்க, தங்கிய இரண்டாம் யாமம் - தங்கப்பெற்ற இரண்டாவது யாமத்திலே, சானவி தரித்தோன் காக்க-கங்கையைத் தாங்கியவனாக விளங்கும் இறைவன் காக்க, பொங்கிய மூன்றும் யாமம் -மேலோங்கும் மூன்றுவது யாமத்திலே, புரி சடை அண்ணல் காக்க-முறுக்கப்பட்ட சடையினையுடைய தலைவனாக விளங்கும் இறைவன் காக்க, பங்கம் இல் நாலாம் யாமம்-பழுதில்லாத நான்காவது யாமத்திலே, கௌரி தன் பதி காக்க-கௌரி யென்னும் பெயரினையுடைய இறைவிக்குத் தலைவராக விளங்கும் இறைவன் காக்கக் கடவர்.

(பொ - ரை) இராப்பொழுதின் முதல் யாமத்திலே கலையினையுடைய திங்களை முடியில் தாங்கியவனாக விளங்கும் இறைவன் காக்க, தங்கப்பெற்ற இரண்டாவது யாமத்திலே கங்கையைத் தாங்கியவனாக விளங்கும் இறைவன் காக்க, மேலோங்கிய மூன்றுவது யாமத்திலே முறுக்கப்பட்ட சடையினையுடைய தலைவனாக விளங்கும் இறைவன் காக்க, பழுதில்லாத நான்காவது யாமத்திலே கௌரி யென்னும் பெயரினையுடைய இறைவிக்குத் தலைவராக விளங்கும் இறைவன் காக்க.

(க - து) இராப்பொழுதின் முதல் யாமம் முதலியவைகளில் இறைவன் காக்கக் கடவர்.

(வி-ரை) முன்பாட்டிற் பகல் காலத்து யாமங்களில் காக்க என்றவர் இப்பாட்டில் இராக் காலத்து யாமங்களில் காக்க வென்றார். கலை-திங்களின் ஒளிக்கூறு. மதி என்பதற்கு அமுதத்தையுடையது என்பது பொருள். கங்கை, சந்து முனிவரின் காது வழியாக வெளிப்பட்டமையின் சானவி என்று பெயர் பெற்ற தென்பர். புரிசடை-புரியாகத் திரண்டு விட்ட சடையெனினுமாம். கௌரி-கௌர நிறமுடையவள்; கௌர நிறம் என்பது பச்சை. (கச)

அனைத்துள காலம் எல்லாம் அந்தகற் கடிந்தோ னுள்ளும்
தனிப்பெரு முதலாய் நின்ற சங்கரன் புரமுந் தாணு
வனப்புறு நடுவுந் தூய பசுபதி மற்றும் எங்கும்
நினைத்திடற் கரிய நோன்மைச் சதாசிவ நிமலன் காக்க.

(ப-ரை) அனைத்து உள காலம் எல்லாம்-மற்றும் உள்ள எல்லாக் காலங்களினும், அந்தகன் கடிந்தோன் (காக்க) - நமனைச் சினந்தவன் (காக்கக்கடவன்), உள்ளும் — உட்புறத்திலும், தனிப்பெரு முதலாய்நின்ற சங்கரன்(காக்க) - ஒப்பற்ற முதற்பொருளாக விளங்கும் இறைவன் (காக்கக்கடவன்), புறமும் தாணு (காக்க) - வெளிப்புறத்திலும் தாணு என்னும் பெயரினையுடைய இறைவன்(காக்கக்கடவன்), வனப்புறு நடுவும் தூயபசுபதி (காக்க) - அழகுமிகுந்த நடுப்பக்கத்திலும் தூய்மையினையுடைய பசுபதியாகிய இறைவன் (காக்கக்கடவன்), நினைத்திடற்கு அரிய நோன்மை சதாசிவநிமலன் - நினைத்தற்கு அரியதாகிய பெருமையினையுடைய சதாசிவ நிமலனானவன், மற்றும் எங்கும் காக்க-வேறு எல்லாவிடங்களினும் காக்கக்கடவன்.

(போ - ரை) மற்றும் உள்ள எல்லாக்காலங்களினும் நமனைச் சினந்தவன் (காக்கக்கடவன்) உட்புறத்திலும் ஒப்பற்ற முதற்பொருளாக விளங்கும் இறைவன் (காக்கக் கடவன்; வெளிப்புறத்திலும் தாணு என்னும் பெயரினை யுடைய இறைவன் (காக்கக்கடவன்) அழகுமிகுந்த நடுப் பக்கத்தினும் தூய்மையினையுடைய பசுபதியாகிய இறை வன் (காக்கக்கடவன்) நினைத்தற்கு அரிதாகிய பெருமை யினையுடைய சதாசிவ நிமலனானவன் வேறு எல்லாவிடங் களினுங் காக்கக்கடவன்.

(க - து) எல்லாக் காலங்களினும் இடங்களினும் இறைவன் காக்கக்கடவன்.

(வி-ரை) முன்பாடல்களிற் பகற்காலத்து யாமங்கள் இராக்காலத்து யாமங்கள் ஆகியவைகளைக் கூறியவர் இப் பாடலில் மற்றும் கூறாது விடப்பட்ட காலங்களினும் இடங்களாகிய உள்ளும் புறமும் நடுவும் எங்கும் காக்க வேண்டுமென்றார். அந்தகன் - நமன். கடிந்தோன் - சினந்தவன். நமனைச் சிவபெருமான் சினந்து உதைத்தது மார்க்கண்டேயருக்காக. உயிர்கட்கு நன்மையைச் செய்வ தாலும் பிறகு அவைகளை அழிப்பதாலும் இறைவனுக்குச் சங்கரன் என்னும் பெயரும் உண்டாகியது. தாணு- ஊழிக்காலத்தினும் அழியாது நிலைபெற்றிருப்பவன். பசுபதி-உலகில் உள்ள உயிர்கட்குத் தலைவன். சதாசிவன்- எப்பொழுதும் மங்கல வடிவமாக விளங்குபவன். (கரு)

நிற்புழிப் புவன நாதன் ஏகுழி நிமல மேனிப்
போற்பிரம ஞாதி நாதன் இருப்புழிப் பொருவி லாத
அற்புத வேத வேத்தியன் அருந்துயில் கொள்ளும் ஆங்கண்
தற்பர சிவன்வ ழிக்குச் சாமள ருத்திரன் காக்க.

(ப-ரை) நிற்புழி-நிற்குங்காலத்தில், புவனநாதன்-உலகங்கட்குத் தலைவனாக விளங்கும் இறைவனும், ஏகுழி-நடக்கும்பொழுது, நிமலமேனிபொன் பிரமனாதிநாதன் - தூய்மையான உடலினையுடைய அழகிய பிரமன் முதலியோர் தலைவனும்; இருப்புழி - இருக்குங் காலத்தில், பொருவு இலாத அற்புத வேதவேத்தியன் - ஒப்பில்லாத வியக்கத்தக்க மறைகளால் போற்றப்படுகிற இறைவனும், அரும்துயில் கொள்ளும் ஆங்கண் - அரிய உறக்கத்தினைக் கொள்ளுகிற சமயத்தில், தற்பரசிவன் – மேலான மங்கலத்தையுடையவனாகிய இறைவனும், வழிக்கு - வழிநடை செல்லுங்காலத்தில், சாமள ருத்திரன் - பச்சை நிறத்தை யுடைய உருத்திரமூர்த்தியாகிய இறைவனும், காக்க - காத்தருள்க.

(போ-ரை) நிற்குங்காலத்தில் உலகங்கட்குத் தலைவனாக விளங்கும் இறைவனும், நடக்கும்பொழுது தூய்மையான உடலினையுடைய அழகிய பிரமனாதி தேவர் தலைவனும், இருக்குங்காலத்தில் ஒப்பில்லாத வியக்கத் தக்க மறைகளால் போற்றப்படுகிற இறைவனும்; அரிய உறக்கத்தினைக் கொள்ளுகிற சமயத்தில் மேலான மங்கலத்தையுடையவனாகிய இறைவனும், வழிநடை செல்லுங் காலத்தில் பச்சைநிறத்தையுடைய உருத்திரமூர்த்தியாகிய இறைவனும் காத்தருள்க.

(க - து) நிற்குங்காலம் முதலியவைகளில் இறைவன் காக்க

(வி - ரை) இப்பாடலில் நிற்கும்பொழுதும் நடக்கும்பொழுதும் இருக்கும்பொழுதும் உறங்கும்பொழுதும் இறைவன் காக்கவேண்டும் என்கிறார். புவனம் - உலகம்.

பிரமனாதிநாதன் - பிரமன் முதலியோர்க்குத் தலைவன். வேதவேத்யன் - மறைகளாற் போற்றப்படுகின்றவன். சாமளருத்திரன் — பச்சை நிறத்தையுடைய உருத்திரன். பச்சைநிறம் இடப்பாகத்தில் உள்ள உமாதேவியின் நிழல். உருத்திரன் என்பதற்குப் பகைவரை வருத்துவோன். அழச் செய்வோன் எனப் பலவாறு பொருள் உரைப்பர்.
(கசு)

மலைமுதல் துருக்கந் தம்மில் புராரிகாத் திடுக மன்னும்
சிலைவலி வேட ரூபன் செறிந்தகா னகத்தில் காக்க
கொலையமர் கற்பத் தண்ட கோடிகள் குலுங்க நக்குப்
பலபடி நடிக்கும் வீர பத்திரன் முழுதுங் காக்க.

(ப - ரை) மலைமுதல் துருக்கம் தம்மில் - மலைமுதலாகிய காவலான இடங்களில், புராரி காத்திடுக - முப்புரங்களையும் எரித்தழித்தவர் காக்கக்கடவர், மன்னும் சிலைவலி வேடரூபன் — நிலைபெற்ற வில்லாற்றலையுடையவனுய் வேட்டுவக் கோலங்கொண்டவன், செறிந்தகானகத்தில் காக்க - நெருங்கிய காட்டினிடத்தே காக்கக்கடவன்; கொலைஅமர் கற்பத்து - கொலைத்தொழிலமைந்த யுக முடிவில், அண்ட கோடிகள் குலுங்க நக்கு - கோடிக் கணக்கான உலகங்களெல்லாங் குலுங்குமாறு நகைத்து, பலபடி நடிக்கும் வீரபத்திரன் முழுதம் காக்க-பலவாருக நடித்தலைச் செய்கின்ற வீரபத்திரக் கோலங்கொண்டவர் முழுவதும் காக்கக்கடவர்.

(போ - ரை) மலையரண் முதலாகிய இடங்களில் முப்புரத்தை யெரித்தழித்த கடவுள் காத்திடுக; நிலை பெற்ற வில்லாற்றலையுடையவனுய் வேட்டுவக் கோலங் கொண்ட இறைவன் நெருங்கிய மரங்களடர்ந்த காட்டினிடத்தே காக்கக்கடவன்; கொலைத்தொழில் மிகுந்த

யுகத்துமுடிவில் கோடிக்கணக்கான உலகங்களெல்லாம் குலுங்குமாறு நகைத்துப் பலவாருகக் கூத்தாடுதலைச் செய்கிற வீரபத்திரக் கோலங்கொண்ட கடவுள் என்னை முழுதுங் காக்கக்கடவர்.

(க-து) மலையரண் முதலாகிய இடங்களில் இறைவன் எம்மைக் காக்கக்கடவர்.

(வி - ரை) துருக்கம்-பாதுகாப்பான இடம். இது மலை முதலிய இடங்களால் மலையரணுகவும், காடு முதலிய இடங்களால் காட்டரணுகவும் அமையும். பெரும்பாலும் மலைமேல் அமைந்த கோட்டையைத் துருக்கம் என்பர். புராரி-புர அரி, புரங்களை எரித்து அழித்தவன். அருச்சுனன் பாசுபதக்கணை பெறற்குத் தவஞ்செய்த ஞான்று இறைவன் வேட்டுவக் கோலத்தோடு சென்று அவனுக்கு அருள்புரிந்தார். ஊழிக்காலத்தில் உயிர்த்தொகைகள் ஒன்றும் எஞ்சலின்றி யாவும் அழிந்தொழியுமாகலின் கொலையமர் கற்பம் என்ருர். வீரபத்திரக்கோலம் இறைவன்கொண்ட கோலங்களில் ஒன்று. இக்கோலத்தில் இறைவன் வீரவெறியுடையவராகத் திகழ்வார். (கஎ)

பல்லுளைப் புரவித் திண்டேர்; படுமதக் களிறு; பாய்மா;
வில்லுடைப் பதாதி; தோக்கு மிடைந்திடும் எண்ணில் [கோடி
கொல்லியன் மாலை வைவேல் குமகலர் குறுகுங் காலை
வல்லியோர் பங்கன் செங்கை மழுப்படை துணித்துக் காக்க.

(ப-ரை) பல்உளை புரவித் திண்தேர் - பலவாகிய புறமயிரினையுடைய குதிரைகள் பூட்டப்பட்ட தேர், படுமதக்களிறு - உண்டாகிற மதத்தையுடைய யானைகள்;

பாய்மா-பாய்ந்து செல்லுங் குதிரைகள்; வில் உடைப் பதாதி - வில்லைத்தாங்கிய காலாட்படைகள் ஆகியவை, தொக்கு - ஒன்றுகூடி, மிடைந்திடும் - நெருங்குகின்ற, (போரில்) எண் இல் கோடி-எண்ணற்ற பலகோடிகளாகிய, கொல் இயல் மாலை வைவேல் குறுகலர் குறுகுங் காலை - கொல்லுகின்ற இயற்கையமைந்த மாலைசூடிய கூரிய வேற்படையை உடைய பகைவர்கள் நெருங்குகிற சமயத்தில், வல்லி ஓர் பங்கன் செங்கை மழுப்படை- கொடி போல்பவளாகிய உமாதேவியை ஒரு பாகத்திலேயுடைய சிவபெருமானது சிவந்த கையிலே உள்ள மழுப் படை, துணித்து காக்க—பகைவர்களை வெட்டி எங்களைப் பாதுகாக்கக் கடவது.

(போ - ரை) பலவாகிய புறமயிரினையுடைய குதிரைகள் பூட்டப்பட்ட தேர், உண்டாகிற மதத்தையுடைய யானைகள், பாய்ந்து செல்லுங் குதிரைகள், வில்லைத்தாங்கிய காலாட்படைகள் ஆகியவைகள் ஒன்றுகூடி நெருங்குகின்ற (போரில்) எண்ணற்ற பல கோடிகளாகிய கொல்லுகின்ற இயற்கையமைந்த மாலைசூடிய வேற்படையை உடைய பகைவர்கள் நெருங்குகிற சமயத்தில், கொடி போல்பவளாகிய உமாதேவியை ஒரு பாகத்திலேயுடைய சிவபெருமானது சிவந்த கையிலே உள்ள மழுப்படை பகைவர்களை வெட்டியழித்து எங்களைக் காக்கக்கடவது.

(க - து) நால்வகைப் படையுடன் பகைவர்கள் நெருங்கி வருகிற சமயத்தில் மழுப்படை பகைவர்களையழித்து எங்களைக் காக்கக்கடவது.

(வி—ரை) தேர், யானை, குதிரை, காலாள் ஆகியன நால்வகைப் படைகளாகும். வல்லி-கொடி. இஃது

உவமையாகுபெயராய் உமாதேவியை உணர்த்தி நின்றது. வேற்படை முதலிய படைக்கலங்களுக்கு மாலைசூட்டி மகிழ்தல் போர்வீரர்களின் செய்கையாதலால் மாலை வைவேல் என்றார். (கஅ)

தத்துநீர்ப் புணரி யாடைத் தரணியைச் சுமந்து மானப்
பைத்தலை நெடிய பாந்தட் பஃறலை அனைத்துந் தேய்ந்து
முத்தலை படைத்த தோக்கு மூரிவெங் கனல்கோள் சூலம்
பொய்த்தொழிற் கள்வர் தம்மைப் பொருதழித் தினிது
[காக்க.

(ப — ரை) தத்தும்நீர் புணரி ஆடை தரணியை—தாவுகின்ற நீரையுடைய கடலை ஆடையாகவுள்ள உலகத்தை, சுமந்து-தாங்கி, மானம்-பெருமையுள்ள, பைதலை நெடிய பாந்தள் பஃறலை அனைத்தும் தேய்ந்து - படத்தோடுகூடிய தலைகளையுடைய நீண்ட ஆதிசேடப் பாம்பின் பல தலைகள் முழுவதுந் தேய்ந்து, முத்தலை படைத்தது ஒக்கும்-மூன்று தலைகளை மட்டும் படைத்திருந்ததைப் போன்ற, மூரி வெங்கனல் கொள் சூலம் - பலம் பொருந்திய வெவ்விய நெருப்பைத் தன்னிடத்தே கொண்டிருக்கிற சூலப்படையானது, பொய்த் தொழில் கள்வர் தம்மை-பொய்த் தொழிலையுடைய கள்வர்களை, பொருது அழித்து - போர்செய்து தொலைத்து, இனிது காக்க-இனிதாக (எங்களைக்) காக்கக் கடவது.

(போ - ரை) தாவுகின்ற நீரையுடைய கடலை ஆடையாகக் கொண்ட உலகத்தைத் தாங்கி (அதனால்) பெருமையுள்ள படத்தோடு கூடிய தலைகளையுடைய நீண்ட ஆதிசேடப் பாம்பின் பல தலைகள் முழுவதுந் தேய்ந்து மூன்று

தலைகளை மட்டும் படைத்திருந்ததைப் போன்ற பலம் பொருந்திய வெவ்விய நெருப்பைத் தன்னிடத்தே கொண்டிருக்கிற சூலப்படையானது பொய்த் தொழிலையுடைய கள்வர்களைப் போர்செய்து தொலைத்து இனிதாக எங்களைக் காக்கக் கடவது.

(க - து) சிவபெருமானுடைய சூலப் படையானது கள்வர்களைப் போர்செய் தழித்து (எங்களை) இனிதாகக் காக்கக் கடவது.

(வி-ரை) கடல்நீர் அலைகளால் அடிக்கடி மேலெழுந் தன்மையுடைய தாகையால் தத்துநீர்ப் புணரி என்றார். கடலை நிலமகளின் ஆடையாகக் கூறுவது ஆன்றோர் மரபு. உலகத்தைத் தாங்கியபடியினால் ஆதிசேடனின் தலைகளெல்லாந் தேய்ந்துபோக மூன்று தலைகளோடு மட்டுங் கூடியிருந்தாற் போன்றது என்று முத்தலைச் சூலத்தைப் புனைந்துரைத்தார். கள்ளர்களை வென்றொழிப்பதற்குக் கொடிய தன்மையை உடைய சூலப்படை ஏற்றதாகலின் இங்கு இறைவனுடைய படைக்கலமாகிய அதனைக் கூறினார். (கக)

முடங்குளை முதலாய் உள்ள முழுவலிக் கொடிய மாக்கள்
அடங்கலும் பிணுகங் கொல்க என்றிவை அனைத்தும் [உள்ளம்
திடம்பட நினைந்து பாவஞ் செயுஞ்சிவ கவசந் தன்னை
உடன்படத் தரிப்பை யானல் உலம்பொரு குவவுத் தோளாய்.

(ப-ரை) முடங்கு உளை முதலாய் உள்ள-வளைந்த பிடரி மயிரினையுடைய சிங்கம் முதலான, முழுவலி

கொடிய மாக்கள் அனைத்தும்-முழுப்பலமுள்ள கொடிய விலங்குகள் எல்லாவற்றையும், பினகம் கொல்க—இறைவனுடைய வில்லாகிய பினகமானது கொல்லக் கடவது, என்று இவை அனைத்தும் திடம்பட நினைந்து-இவ்வாறு கூறப்பட்ட இப் பாடல்கள் எல்லாவற்றையும் மனம் உறுதிப்படுமாறு எண்ணி, பாவம் செயும் சிவகவசம் தன்னை—பாவனை செய்து போற்றுதற் குரிய இந்தச் சிவ கவசப் பாடல்களை, உடன்படத் தரிப்பையானல்-உள்ளன்போடு பாடி வணங்குவாயானல், உலம்பொரு குவவு தோளாய்!-திரண்ட கல்லையொத்த பெருத்த தோள்களையுடையவனே!

(போ-ரை) ‘வளைந்த பிடரி மயிரினையுடைய சிங்கம் முதலான முழுப்பலமுள்ள கொடிய விலங்குகள் எல்லாவற்றையும் இறைவனுடைய வில்லாகிய பினகமானது கொல்லக்கடவது’ என்று இவ்வாறு பாடப்பட்ட இப் பாடல்கள் எல்லாவற்றையும் மனம் உறுதிப்படுமாறு எண்ணிப் பாவனை செய்து போற்றுதற்குரிய இந்தச் சிவகவசப் பாடல்களை உள்ளன்போடு பாடி வணங்குவாயானல், திரண்ட கல்லையொத்த பெருத்த தோள்களையுடையவனே!

(க-து) சிங்கம் முதலாகிய கொடிய விலங்குகளையெல்லாம் சிவனுடைய பினக வில்லானது கொல்லக் கடவது என்று இவ்வாறு பாடப்பட்ட கவசத்தைப் பாடினல்.

(வி-ரை) முடங்கு உளை-இது சினையாகு பெயராய்ச் சிங்கத்தை யுணர்த்திற்று பாய்மாவும் பிடரி மயிரினை யுடையதேயாயினும் முதலாய் உள்ள முழுவலிக் கொடிய மாக்கள் என்று பின்னர்க் கூறுகிறபடியால் முடங்குளை யென்பதற்குச் சிங்கம் என்று பொருள் உரைக்கப்

பட்டது. தீய விலங்குகளை யழிப்பதற்கு வில் ஏற்றதாக லின் இங்கு வில்லினைக் குறிப்பிட்டார். பாவஞ் செய்தல்—பாவனை செய்தல்; அஃதாவது அது தானுமாறு எண்ணுதல். குவவுத் தோளாய்! என்னும் விளி அடுத்த செய்யுளைத் தொடர்ந்து நின்றது. (உo)

சிவ கவசப் பலன்

வேறு

பஞ்சபா தகங்கள்போம் பகைகள் மாய்ந்திடும்
அஞ்சலில் மறலியும் அஞ்சி ஆட்செயும்
வஞ்சநோய் ஒழிந்திடும் வறுமை தீர்ந்திடும்
தஞ்சமேன் றிதனைநீ தரித்தல் வேண்டுமால்.

(ப - ரை) பஞ்ச பாதகங்கள் போம்-ஐந்து வகையான கொடிய தீவினைகள் நீங்கும், பகைகள் மாய்ந்திடும்-பகைகள் ஒழிந்து போகும், அஞ்சல் இல் மறலியும்-யாருக்கும் அஞ்சாத நமனும், அஞ்சி ஆள் செயும்-அச்சத்தோடு அடிமைத் தொழில் செய்வான், வஞ்ச நோய் ஒழிந்திடும்-வஞ்சகத் தன்மை பொருந்திய நோய்கள் யாவும் ஒழிந்து போகும், வறுமை தீர்ந்திடும்-வறுமையானது இல்லாமற் போகும், தஞ்சம் என்று-இதுவே பற்றுக்கோடு என்று, இதனை நீ தரித்தல் வேண்டும்-இக்கவசம் பாடிப் பரவுதலை நீ மேற்கொள்ளுதல் வேண்டும்.

(போ - ரை) ஐந்து வகையான கொடிய தீவினைகள் நீங்கும், பகைகள் ஒழிந்து போகும், யாருக்கும் அஞ்சாத நமனும் அச்சத்தோடு அடிமைத் தொழில் செய்வான்.

வஞ்சகத் தன்மை பொருந்திய நோய்கள் யாவும் ஒழிந்து போகும், வறுமையானது இல்லாமற் போகும். இதுவே பற்றுக்கோடு என்று இக்கவசத்தை நீ பாடிப் பரவுதலை மேற்கொள்ள வேண்டும்.

(க - து) ஐம்பெருந் தீவினைகள் நீங்குதல் முதலிய நன்மைகள் உண்டாகும், இக் கவசத்தை நீ பாடுதல் வேண்டும்:

(வி - ரை) ஐம்பெருந் தீவினைகள், கொலை, களவு, பொய், கள்ளுண்டல், ஆசிரியனை இகழ்தல் ஆகியன. மறலி அஞ்சி ஆட்செய்தலாவது பாடிப் பரவினார் பக்கல் சேராது விலகிப் போதல். வஞ்ச நோய் என்பதனை, வஞ்சமும் நோயும் எனப் பிரித்துப் பிறர் செய்யும் வஞ்சனைகள் பொருந்தாமல் ஒழிந்துபோகும் என்றும் உரைக்கலாம். செய்யுளாகிய கவசத்தைத் தரித்தலாவது உள்ளத்திலே அன்புகொண்டு பாராட்டிப் பாடிப் பரவுதல்.



சிவமயம்

ஓம் உமாதேவ்யை நம:



ரு. சத்தி கவசம்

மூலமும் உரையும்

[துர்க்கன் என்னும் பெயருடைய அவுணன் தேவர்களுக்கு நெடுநாள் துன்பஞ் செய்துகொண்டிருந்தான். உமாதேவி துர்க்கனைக் கொன்று தேவர்களுடைய துன்பத்தைப் போக்கினள். அப்பொழுது தேவர்கள் இப்பாடல்களைப் பாடி இறைவியைப் போற்றினர்கள். இப்பாடல்கள் வச்சிரபஞ்சரம் எனவும் சத்திகவசம் எனவும் பெயர் பெற்று விளங்குகின்றன. இப்பாடல்களை யார் பாடித்

தேவியைப் போற்றினாலும் அவர்களுடைய உடலில் உண்டாகிய காய்ச்சல் நோய் ஒழியும். எட்டுமுறை நீரி லோதி அதனை உட்கொண்டால் வயிற்றிலே பொருந்திய குன்மம், சூலை முதலிய நோய்களெல்லாம் நீங்கும். இரவில் வழி நடக்கும்போது ஓதினால் பேய், பூதம் முதலியவைகள் பின்தொடரமாட்டா. பிள்ளையைப் பெற முடியாமல் துன்பப்படுகின்ற பெண்களுடைய அண்மையி லிருந்து ஓதினாலும் அல்லது நீரிலே ஓதி உட்கொள்ளக் கொடுத் தாலும் துன்பம் நீங்கி விரைவிலே பிள்ளைகளைப் பெறு வார்கள். போரிலே இதனை ஓதினால் பகைவர்கள் தோல்வி யடைவார்கள். நீரிலே ஓதி உட்கொள்ளக் கொடுத்தால் சிறுபிள்ளைகளுடைய நோய்கள் நீங்கும். இக்கவசத்தினை யாவர் பாடினாலும் அவர்களை உமாதேவி காப்பாற்று வாள்.]

அங்கையில் கரகந் தாங்கும் பிரமாணி அருளி னேடும்
துங்கமேன் சென்னி காக்க வயிணவி துகளி லாகம்
எங்கணுங் காக்க செய்ய ஏந்தெழில் உருத்தி ராணி
தங்கும்எண் திசையும் அன்பு தழைத்திட இனிது காக்க.

(ப - ரை) அங்கையில் கரகம் தாங்கும் பிரமாணி—அழகிய கையினிடத்திலே கமண்டலத்தைத் தாங்குகிற பிரமாணி என்னும் பெயரினையுடைய இறைவி, அருளி னேடும்-அருளோடு, துங்கம்என் சென்னி காக்க-உயர்வு பொருந்திய என்னுடைய தலையினைக் காக்கக்கடவள்; வயிணவி—வயிணவி என்னும் பெயரினையுடையவள், துகள் இல் ஆகம் எங்கணும் காக்க-குற்றமற்ற உடல் முழுவதும் காக்கக்கடவள், செய்ய-செம்மை வாய்ந்து, ஏந்து எழில்-மிகுந்த பேரழகைக்கொண்ட, உருத்திராணி - உருத்தி ராணி என்னும் பெயரினையுடையவள், தங்கும் எண்திசை

யும் - பொருந்திய எட்டுத்திக்குகளினும், அன்பு தழைத்திட இனிது காக்க - அன்புமிகுமாறு இனிதாகக் காக்கக்கடவள்.

(போ - ரை.) அழகிய கையினிடத்தில் கமண்டலத்தைத் தாங்குகிற பிரமாணி அருளோடு உயர்வு பொருந்திய என்னுடைய தலையினைக் காக்கக்கடவள்; வயிணவி என்னும் பெயரினையுடையவள் குற்றமற்ற உடல் முழுதுங் காக்கக்கடவள்; செம்மைவாய்ந்து மிகுந்த பேரழகைக் கொண்ட உருத்திராணி பொருந்திய எட்டுத்திக்குகளினும் அன்புமிகுமாறு இனிதாகக் காக்கக்கடவள்.

(க - து.) பிரமாணி முதலிய பெயர்களைக்கொள்ளும் இறைவி என்னுடைய தலை முதலியவைகளைக் காக்கக்கடவள்.

(வி-ரை.) வச்சிரம்-வயிரம்; மிகு உறுதிவாய்ந்தது. இதனை எதனாலும் துகளாக்க வியலாது. பஞ்சரம் - கூடு. வயிரக் கூட்டைப்போல் இக்கவசமும் அமைந்து தன்னை ஓதினாரைக் காக்கும் இயல்புடையது. பிரமாணி - பிரமனுடைய மனைவி. வயிணவி - விட்டுணுவினுடைய மனைவி. உருத்திராணி - உருத்திரனுடைய மனைவி. எல்லாமாக அமைந்து விளங்குபவள் இறைவி ஒருத்தியேயாகலின் இவ்வாறு கூறினார்.

கொன்னுனைச் சூலி சென்னி மயிரினைக் குறித்துக் காக்க
மன்னுவெண் பிறைதாழ் சென்னி வயங்கொளி நெற்றிகாக்க
பன்மயிர்ப் புருவம் நாளும் பரிவோடும் உமையாள் காக்க
என்னையாள் முக்கண் ஈசன்இறைவிகண் ணிணைகள்காக்க.

(ப - ரை.) கொல் நுனை சூலி - கொல்லுகின்ற நுனியை உடைய சூலப்படையைத் தாங்கியவள், சென்னி மயிரினைக் குறித்துக்காக்க - தலைமயிரினைக் குறிக்கொண்டு

காக்கக்கடவள், மன்னு வெண்பிறை தாழ்சென்னி - நிலை பெற்ற வெள்ளிய பிறைதங்கிய தலையை உடையவள், வயங்கு ஒளி நெற்றி காக்க - விளங்குகின்ற ஒளியினை யுடைய நெற்றியைக் காக்கக்கடவள், பல் மயிர் புருவம் - பல மயிர்களுடைய புருவத்தை, நாளும் - நாள்தோறும், பரிவொடும் உமையாள் காக்க — அன்பினோடும் உமை யவள் காக்கக்கடவள், என்னை ஆள்முக்கண் ஈசன் இறைவி- என்னையாண்டருளுகின்ற மூன்று கண்களையுடைய சிவ பெருமானின் தேவியாக விளங்குபவள், கண் இணைகள் காக்க - இரண்டு கண்களையும் காக்கக்கடவள்.

(போ - ரை.) கொல்லுகின்ற நுனியை உடைய சூலப் படையைத் தாங்கியவள் தலைமயிரினைக் குறிக் கொண்டு காக்கக்கடவள், நிலைபெற்ற வெள்ளிய பிறை தங்கிய தலையை உடையவள் விளங்குன்ற ஒளியினையுடைய நெற்றியைக் காக்கக்கடவள், பலமயிர்களையுடைய புரு வத்தை நாள்தோறும் அன்பினோடும் உமையவள் காக்கக் கடவள், என்னையாண்டருளுகின்ற மூன்று கண்களை யுடைய சிவபெருமானுடைய தேவியாக விளங்குபவள் இரண்டு கண்களையுங் காக்கக்கடவள்.

(க - து.) தலைமயிர் முதலியவைகளை இறைவி காக்கக்கடவள்.

(வி - ரை.) சூலி — சூலப்படையை உடையவள். இறைவனும் இறைவியும் வேறுபாடில்லாதவர்களாகையால் இறைவனுக்குரியவைக ளெல்லாம் இறைவிக்கும் உரியன வாகக் கூறப்பட்டன. (உ)

வயமிகும் இமய வல்லி மூக்கினை மகிழ்ந்து காக்க
சேயையோடு விசயை மேல்கீழ் இதழினைச் சிறந்து காக்க

அயிலுடைச் சுருதி தூய அஞ்செவி காக்க தண்ணேன்
பயின்மலர் உறையுஞ் செல்வி பல்லினை உவந்து காக்க.

(ப - ரை.) வயம் மிகும் இமயவல்லி - வெற்றி மிகுந்த இமயவல்லியானவள், மூக்கினை மகிழ்ந்து காக்க - மூக்கை மகிழ்ச்சியோடு காக்கக்கடவள், செயையொடு விசயை – செயை விசயை என்னும் பெயரினைத் தாங்கியவள், மேல் கீழ் இதழினை சிறந்து காக்க - மேலுதட்டையுங் கீழுதட்டையுஞ் சிறப்பாகக் காத்தருள்க, அயில் உடை சுருதி - வேற்படையை உடைய சுருதியாக விளங்குபவள், தூய அம் செவி காக்க - தூய்மைபொருந்திய அழகிய காதுகளைக் காத்தருள்க. தண்என் பயின் மலர் உறையும் செல்வி - குளிர்ச்சியாகிய நெருங்கிய மலரில் வாழ்கின்ற திருமகளாக விளங்குபவள், பல்லினை உவந்து காக்க – பற்களை மகிழ்ச்சியோடு காத்தருள்க.

(போ - ரை.) வெற்றி மிகுந்த இமயவல்லியானவள் மூக்கை மகிழ்ச்சியோடு காக்கக்கடவள், செயை விசயை என்னும் பெயரினைத் தாங்கியவள் மேலுதட்டையுங் கீழுதட்டையுஞ் சிறப்பாகக் காத்தருள்க, வேற்படையை உடைய சுருதியாக விளங்குபவள் தூய்மை பொருந்திய அழகிய காதுகளைக் காத்தருள்க, குளிர்ச்சியாகிய நெருங்கிய மலரில் வாழ்கின்றவள் பற்களை மகிழ்ச்சியோடு காக்கக் கடவள்.

(க – து.) இமயவல்லி முதலிய பல பெயர்களைத் தாங்கியவள் மூக்கு முதலியவைகளைக் காக்கக்கடவள்.

(வி – ரை.) இமயவல்லி - இமயமலையில் தோன்றிய கொடியைப் போன்றவள். செயை - வெற்றியை உடை

யவள். விசயை மிகுந்த வெற்றியை உடையவள். சுருதி - மறைவடிவானவள். மலர் - தாமரைமலர். செல்வி - திருமகள். பலவகையான பெயர்களேயுந் தாங்கியவள் இறைவி ஒருத்தியே யாகலின் இவ்வாறு கூறினர். (ரு)

சண்டிமேன் கபோலங் காக்க தவளநாண் மலரின் வைகும்
ஒண்டோடி நன்னுக் காக்க விசயைமங் கலைமற் றேவ்வாக்
கண்கவர் நாடி காக்க காத்தியா யனிஎஞ் ஞான்றும்
மூண்டக மலரில் தூய முகத்தினைச் சிறந்து காக்க

(ப - ரை.) சண்டி மென் கபோலம் காக்க - சண்டி யென்கின்ற பெயரையுடைய இறைவியானவள் மெல்லிய கன்னத்தைக் காக்க; தவள நாள் மலரில்வைகும் - வெண்மையாகிய புதிய மலரில் வீற்றிருக்கும் ஒள்தொடி நல் நா காக்க - ஒள்ளிய வளையல்களை யணிந்த கலைமா தானவள் நல்ல நாவினைக் காக்க; விசயை மங்கலை-விசயை மங்கலை என்னும் பெயரையுடைய இறைவி, மற்று ஒவ்வா- வேறு ஒப்பில்லாத, கண்கவர் நாடி காக்க - கண்களைக் கவர்ந்து கொள்ளத்தக்க நாடியைக் காத்தருள்க; காத்தி யாயனி - காத்தியாயனி என்னும் பெயரினையுடையவள், எஞ்ஞான்றும் - எக்காலத்திலும், முண்டக மலரில் தூய- தாமரை மலரைப்போன்ற தூய்மையாகிய, முகத்தினைச் சிறந்து காக்க - முகத்தைச் சிறப்பாகக் காக்கக்கடவள்.

(போ - ரை.) சண்டியென்கின்ற பெயரையுடைய இறைவியானவள் மெல்லிய கன்னத்தைக் காக்க; வெண்மையாகிய புதிய மலரில் வீற்றிருக்கும் ஒள்ளிய வளையல்களையணிந்த கலைமகளானவள் நல்ல நாவினைக் காக்க, விசயைமங்கலை என்னும் பெயரையுடைய இறைவி, வேறு ஒப்பில்லாத கண்களைக் கவர்ந்து கொள்ளத்தக்க

நாடியைக் காத்தருள்க; காத்தியாயனி என்னும் பெயரினை யுடையவள் எக்காலத்திலும் தாமரைமலரைப் போன்ற தூய்மையாகிய முகத்தைச் சிறப்பாகக் காக்கக்கடவள்.

(க - து.) இறைவி கன்னம் முதலியவற்றைக் காக்கக் கடவள்.

(வி - ரை.) சண்டி இறைவியின் திருக்கோலங்களுள் ஒன்று. இக்கோலத்தில் இறைவி விரைவான செயல்களை யும் செலவையும் உடையவளாக இருப்பாள். தவள நாள் மலர் – அன்றலர்ந்த வெண்டாமரை. மங்கலை - மங்கல மான செயல்களையெல்லாம் உடையவள். இறைவி ஒரு காலத்தில் கத்யயநன் என்னும் முனிவனுடைய வழி முறையில் தோன்றியபடியால் காத்யாயநி என்னும் பெய ரினைப் பெற்றாள். இச்செய்யுளும் தெய்வம் ஒன்றே என் பதை வலியுறுத்துகின்றது. (ச)

காளமுண் டிருண்ட நீல கண்டிமேன் கழுத்துக் காக்க
கோளில்பூ தார சத்தி சுவல்புறம் காக்க கூர்மி
நீளொளிச் சந்தி காக்க அயிந்திரி நெறியி னேடும்
தோளிணை காக்க பத்மை துணைமலர் அங்கை காக்க.

(ப - ரை.) காளம் உண்டு - நஞ்சை உண்டு, இருண்ட - கறுத்திருக்கின்ற, நீலகண்டி - கருமையான கழுத்தையுடையவள், மென்கழுத்து காக்க - மெல்லிய கழுத்தைக் காக்கக்கடவள், கோள் இல் பூதார சத்தி - துன்பமில்லாத பூதாரசத்தி என்னும் பெயரினையுடை யவள், சுவல் புறம் காக்க - பிடரிப்புறத்தைக் காக்கக் கடவள், கூர்மி - கூர்மியென்னும் பெயரினையுடையவள், நீள் ஒளி சந்தி காக்க - பேரொளியையுடைய சந்திகளைக் காக்கக்கடவள், அயிந்திரி-இந்திராணியாக விளங்குபவள்,

நெறியினேடும் - முறைமையுடனே, தோள் இணை காக்க - இருதோள்களையும் காக்கக்கடவள், பத்மை - பத்மை என்னும் பெயரினையுடையவள், துணைமலர் அம் கை காக்க - இரண்டு மலர்களைப் போன்ற அழகிய கைகளைக் காக்கக்கடவள்.

(பொ-ரை.) நஞ்சையுண்டு கறுத்திருக்கின்ற கருமையான கழுத்தையுடையவள் மெல்லிய கழுத்தைக் காக்கக் கடவள், துன்பமில்லாத பூதார சத்தி என்னும் பெயரினையுடையவள் பிடரிப்புறத்தைக் காக்கக்கடவள், கூர்மியென்னும் பெயரினையுடையவள் பேரொளியையுடைய சந்திகளைக் காக்கக்கடவள், இந்திராணியாக விளங்குபவள் முறைமையுடனே இருதோள்களையும் காக்கக்கடவள், பத்மை என்னும் பெயரினையுடையவள், இரண்டு மலர்களைப் போன்ற அழகிய கைகளைக் காக்கக்கடவள்.

(க - து.) நீலகண்டியாகிய இறைவி கழுத்து முதலியவைகளைக் காக்கக்கடவள்.

(வி - ரை.) காள முண்டிருண்ட நீலகண்டமுடைமை இறைவனுக்குரியது; இறைவனுடைய செயல் இறைவி மேல் ஏற்றப்பட்டது. பூதாரம் – பன்றி. பூதார சத்தி - வாரகி. கூர்மி - பத்மை - தாமரை மலரில் எழுந்தருளிய திருமகள். (ரு)

கமலைகை விரல்கள் காக்க விரசைகை உகிர்கள் காக்க
திமிரமுண் டொளிரும் வெய்யோன் மண்டலத் துறையுஞ் [செல்வி
எமதிரு வாகு மூலம் காக்கவா னவர்கள் ஏத்த
அமிர்தல கரிநாள் நாளும் அகன்மணி மார்பங் காக்க.

(ப - ரை.) கமலை கை விரல்கள் காக்க - கமலையென்னும் பெயரைத் தாங்கும் இறைவி கைவிரல்களைக் காக்

கக் கடவள், விரசை கை உகிர்கள் காக்க-விரசை யென்னும் பெயரைத் தாங்கும் இறைவி கை நகங்களைக் காக்கக் கடவள், திமிரம் உண்டு ஒளிரும்-இருளை உண்டு விளங்குகிற, வெய்யோன் மண்டலத்து உறையும் செல்வி-கதிரவன் மண்டலத்தில் வசிக்கின்ற செல்வியானவள், எமது இரு வாகு மூலம் காக்க-எம்முடைய இரண்டு தோளடிகளையுங் காக்கக் கடவள், வானவர்கள் ஏத்த—தேவர்கள் போற்ற, அமிர் தலகரி—அமிருதலகரி என்னும் பெயரையுடையவள், நாள் நாளும்-நாள்தோறும், அகல் மணி மார்பம் காக்க-அகன்ற அழகாகிய மார்பைக் காக்கக் கடவள்.

(போ - ரை.) கமலையென்னும் பெயரைத் தாங்கும் இறைவி கை விரல்களைக் காக்கக் கடவள், விரசை யென்னும் பெயரைத் தாங்கும் இறைவி கை நகங்களைக் காக்கக் கடவள், இருளையுண்டு விளங்குகிற கதிரவன் மண்டலத்தில் வசிக்கின்ற செல்வியானவள் எம்முடைய இரண்டு தோளடிகளையுங் காக்கக் கடவள், தேவர்கள் போற்ற அமிர் தலகரி என்னும் பெயரையுடையவள் நாள்தோறும் அகன்ற அழகிய மார்பைக் காக்கக் கடவள்.

(க - து.) கமலை முதலிய பெயரையுடைய இறைவி கை விரல்கள் முதலியவைகளைக் காக்கக் கடவள்.

(வி - ரை.) கமலை—திருமகள். வெய்யோன் மண்டலத்துறையுஞ் செல்வி-மார்த்தாண்டி. அமிர் தலகரி-அமிர் தப்பெருக்கை யுடையவள். (சு)

தரித்திரி இதயங் காக்க தயித்தியர்ச் செகுப்போள் மிக்க
கருத்தோடும் முலைகள் காக்க சகத்தினில் இறைமை
பூண்டோள்

திருத்தகு வயிறு காக்க திகழ்தபோ கதிதன் னுள்ளத்
தருத்தியின் உந்தி காக்க அசைவளர் முதுகு காக்க.

(ப - ரை.) தரித்திரி இதயம் காக்க-தரித்திரி யென் பவள் இருதயத்தைக் காக்கக் கடவள், தயித்தியற் செகுப் போள் - அசுரர்களைக் கொல்பவள், மிக்க கருத்தொடும் முலைகள் காக்க-மிகுந்த கருத்துடனே முலைகளைக் காக் கக் கடவள், சகத்தினில் இறைமை பூண்டோள்-உலகத்தில் தலைமை பூண்டவள், திருத்தகு வயிறு காக்க - அழகு பொருந்திய வயிற்றைக் காக்கக் கடவள், திகழ் தபோகதி- விளங்குகிற தபோகதி யென்பவள், தன் உள்ளத்து அருத் தியின் – தன்னுடைய உள்ளத்தின் அவாவினல், உந்தி காக்க-நாபியைக் காக்கக் கடவள், அசை-அசை யென் பவள், வளர் முதுகு காக்க-வளரா நின்ற முதுகைக் காக் கக் கடவள்.

(பொ-ரை.) தரித்திரி என்பவள் இருதயத்தைக் காக் கக் கடவள், அசுரர்களைக் கொல்பவள் மிகுந்த கருத் துடனே முலைகளைக் காக்கக் கடவள், உலகத்தில் தலைமை பூண்டவள் அழகு பொருந்திய வயிற்றைக் காக்கக் கடவள், விளங்குகிற தபோகதி யென்பவள் தன்னுடைய உள்ளத்து அவாவினல் நாபியைக் காக்கக் கடவள், அசை யென்பவள் வளரா நின்ற முதுகைக் காக்கக் கடவள்.

(க - து.) தரித்திரி முதலிய பெயர்களையுடைய இறைவி இதயம் முதலியவைகளைக் காக்கக் கடவள்.

(வி-ரை.) தரித்திரி என்பதற்கு உலகத்தைத் தாங்கு பவள் என்பது பொருள். தயித்தியர்-அசுரர். தபோகதி– தவஞ் செய்பவர்கள் எல்லோருக்குங் கதியாக இருப்பவள். தரித்திரி, தயித்தியர்ச் செகுப்போள், சகத்தினில்

இறைமை பூண்டோள், தபோகதி, அசை முதலிய பெயர்களையெல்லாம் இறைவி யொருத்தியே தொழில்களின் மாறுபாட்டால் அடைகின்றனள். (எ)

கருதரு விகடை காக்க கடிதடம் பாமை வாய்ந்த
குருமணிச் சகனங் காக்க குகாரணி குய்யங் காக்க
அருள்தர வரும்அ பாய கந்தினி அபானங் காக்க
தெருளுடை விபுலை என்றும் சிறப்புடைக் குறங்கு காக்க.

(ப-ரை.) கருதரு விகடை கடிதடம் காக்க-நினைத்தற்கரிய விகடை யென்னும் இறைவி இடைப் பக்கத்தைக் காக்கக் கடவள், பாமை - பாமை யென்னும் பெயரினையுடைய இறைவி, வாய்ந்த குருமணி சகனம் காக்க, பொருந்திய நிறமமைந்த மணிகளையணிந்த தொடையின் உட்பக்கத்தைக் காக்கக் கடவள், குகாரணி-குகாரணி யென்னும் பெயரினையுடைய இறைவி, குய்யம் காக்க - குறிகளைக் காக்கக் கடவள், அருள்தரவரும் அபாயகந்தினி — அருள்செய்ய வருகின்ற அபாயகந்தினி என்னும் பெயரினையுடைய இறைவியானவள், அபானம் காக்க-அபானத்தைக் காக்கக் கடவள், தெருளுடை விபுலை-தெளிவையுடைய விபுலையென்பவள், சிறப்பு உடை குறங்கு காக்க— மேன்மையை உடைய தொடைகளைக் காக்கக் கடவள்.

(பொ - ரை.) நினைத்தற்கரிய விகடை யென்னும் இறைவி இடைப்பக்கத்தைக் காக்கக் கடவள், பாமை யென்னும் பெயரினையுடைய இறைவி பொருந்திய நிறமமைந்த மணிகளையணிந்த தொடையின் உட்பக்கத்தைக் காக்கக் கடவள், குகாரணி என்னும் பெயரினையுடைய இறைவி குறிகளைக் காக்கக் கடவள், அருள் செய்ய வருகின்ற அபாயகந்தினி என்னும் பெயரினையுடைய

இறைவி அபானத்தைக் காக்கக் கடவள், தெளிவையுடைய விபுலை யென்பவள் மேன்மையை உடைய தொடைகளைக் காக்கக் கடவள்.

(க - து.) விகடை முதலிய பெயர்களை யுடைய இறைவி கடிதடம் முதலியவைகளைக் காக்கக் கடவள்.

(வி - ரை.) விகடை - மிகுந்த களிப்புப் பொருந்தி யவள். பாமை - பெண்மையிற் சிறந்தவள், அழகிற் சிறந் தவளெனினுமாம். குய்யம்-ஆண்குறி பெண்குறி இரண் டையுங் குறிக்கும். விபுலை-பெருமை யுடையவள்; இமய மலையிற் பிறந்தவளெனினுமாம். (அ)

லளிதைமேன் முழந்தாள் காக்க இயற்சபை கணைக்கால்
களிதரு கோரை வாய்ந்த பரட்டினைக் காக்க மிக்க [காக்க
அளிகோள்பா தலத்தில் செல்வோள் அணிகெழு புறந்தாள்
ஒளிர்நகம் விரல்கள் சந்திரி உக்கிரி உவந்து காக்க. [காக்க

(ப - ரை.) லளிதை—இலளிதை யென்பவள், மென் முழந்தாள் காக்க-மெல்லிய முழங்காலைக் காக்கக் கட வள், இயற்சபை - இயற்கையாகிய சபை யென்பவள், கணைக்கால் காக்க-கணைக்கால்களைக் காக்கக் கடவள், களி தரு கோரை-களிப்பை யுண்டாக்குகிற கோரை யென் னும் பெயரினையுடைய இறைவி, வாய்ந்த பரட்டினைக் காக்க-பொருந்திய பரடுகளைக் காக்கக் கடவள், மிக்க அளிகொள் பாதலத்தில் செல்வோள்-மிகுந்த அருளைக் கொண்ட பாதாளத்திற் செல்லுகின்றவள், அணிகெழு புறந்தாள் காக்க-அழகு பொருந்திய புறங்கால்களைக் காக்கக் கடவள், ஒளிர்நகம் விரல்கள்—விளங்குகின்ற நகங் கள் விரல்கள் ஆகியவைகளை, சந்திரி உக்கிரி உவந்து காக்க-

சந்திரி உக்கிரி என்னும் பெயர்களையுடைய இறைவி மகிழ்ந்து காக்கக் கடவள்.

(போ-ரை.) இலளிதை யென்பவள் மெல்லிய முழங் காலைக் காக்கக் கடவள், இயற்கையாகிய சபை யென்பவள் கணைக்கால்களைக் காக்கக் கடவள், களிப்பை யுண்டாக்கு கிற கோரை யென்னும் பெயரினையுடைய இறைவி பொருந் திய பரடுகளைக் காக்கக் கடவள், மிகுந்த அருளைக்கொண்ட பாதாளத்திற் செல்லுகின்றவள் அழகு பொருந்திய புறங் கால்களைக் காக்கக் கடவள், விளங்குகின்ற நகங்கள் விரல் கள் ஆகியவைகளைச் சந்திரி உக்கிரி என்னும் பெயர்களை யுடைய இறைவி மகிழ்ந்து காக்கக் கடவள்.

(க - து.) இலளிதை முதலிய பெயர்களையுடைய இறைவி முழங்கால் முதலியவைகளைக் காக்கக் கடவள்.

(வி - ரை.) இலளிதை-இறைவியின் சக்தி பேதங்க ளுள் ஒருத்தி. இலளிதை என்னுஞ் சொல்லுக்கு அழ குள்ளவள் என்பது பொருள். சபை - சபத்திற்கு (அஃ தாவது எண்ணுதற்கு) உரியவள். கோரை - கோர வடிவமாக இருக்கும் இறைவி. பாதலத்தில் செல்வோ ளுடைய பெயர் நாகி என்று கூறப்பெறும்; இந்நாகியும் இறைவியின் ஒரு கூறே. சந்திரி—பிறையணிந்தவள். உக் கிரி—கடுமையாக விளங்குபவள். (கூ)

தலத்துறை மடந்தை உள்ளங் காலிணை காக்க தண்ணேன்
மலர்த்திரு மனையைக் காக்க வயங்குகேத் திரதை யோங்கி
உலப்பில்கேத் திரங்கள் காக்க பிரியகரை ஒழிவருது
நலத்தகு மக்கள் தம்மை நன்குறக் காக்க அன்றே.

(ப - ரை.) தலத்து உறை மடந்தை-நிலத்தில் வாழு கின்ற மடந்தை யென்பவள், உள்ளங்கால் இணை காக்க—

உள்ளங்கால்கள் இரண்டையும் காக்கக்கடவள், தண் என் மலர் திரு-குளிர்ச்சி பொருந்திய மலரில் எழுந்தருளிய திரு என்பவள், மனையைக் காக்க—வீட்டினைக் காக்கக் கடவள், வயங்கு கேத்திரதை ஓங்கி-விளங்குகிற க்ஷேத்ரதை என்னும் பெயரினையுடைய இறைவி உயர்ந்து, உவப்பு இல் கேத்திரங்கள் காக்க - கெடுதலில்லாத பதிகளைக் காக்கக் கடவள், பிரியகரை-பிரியகரை என்னும் பெயரினையுடைய இறைவி, ஒழிவு அருது-ஒழியாமல், நலத் தகு மக்கள் தம்மை-நன்மை பொருந்திய மக்களை, நன்கு உற காக்க - நன்ருகக் காக்கக் கடவள். அன்று, ஏ : அசைகள்.

(போ - ரை.) நிலத்தில் வாழுகின்ற மடந்தை யென்பவள் உள்ளங்கால்கள் இரண்டையும் காக்கக் கடவள், குளிர்ச்சி பொருந்திய மலரில் எழுந்தருளிய திரு என்பவள் வீட்டினைக் காக்கக் கடவள். விளங்குகிற க்ஷேத்ரதை யென்னும் பெயரினையுடைய இறைவி உயர்ந்து கெடுதலில்லாத பதிகளைக் காக்கக் கடவள், பிரியகரை யென்னும் பெயரினையுடைய இறைவி ஒழியாமல் நன்மை பொருந்திய மக்களை நன்ருகக் காக்கக் கடவள்.

(க - து.) தலத்துறை மடந்தையாகிய இறைவி உள்ளங்கால் முதலியவைகளைக் காக்கக் கடவள்.

(வி - ரை.) தலத்துறை மடந்தை-நிலமகள். மலர்த் திரு - பூமகளாகிய இலக்குமி. க்ஷேத்ரதை - பதிகட்குத் தலைவி. பிரியகரை - அன்பர்களிடத்தில் அன்பு செய்பவள். (௧௦)

உயர்சன தனியேன் ஞான்றும் ஒழிவறும் ஆயுள் காக்க
மயர்வறு சீர்த்தி யாவும் மாதேவி காக்க மிக்க
செயிரறு தருமம் யாவும் தனுத்திரி சிறந்து காக்க
இயல்புடைக் குலத்தை வாய்ந்த குலதேவி இனிது காக்க.

(ப - ரை.) உயர் சனாதனி-உயர்ந்த சநாதனி யென்பவள், எஞ்ஞான்றும்-எந்நாளும், ஒழிவு அறும் ஆயுள் காக்க-நீங்குதலில்லாத ஆயுளைக் காக்கக் கடவள், மயர்வு அறு சீர்த்தி யாவும் - மயக்கமற்ற புகழ்கள் எல்லாவற்றையும், மாதேவி காக்க - பெருந்தேவியானவள் காக்கக் கடவுள்; மிக்க செயிர் அறு தருமம் யாவும் - மேலான குற்றமற்ற அறங்களெல்லாவற்றையும், தனுத்திரி சிறந்து காக்க-தனுத்திரி யென்பவள் சிறப்பாகக் காக்கக் கடவள்; இயல்பு உடை குலத்தை-பெருந்தன்மை யமைந்த குலத்தினை, வாய்ந்த குலதேவி இனிது காக்க-பொருந்திய குலதேவியானவள் இனிதாகக் காக்கக் கடவள்.

(போ-ரை.) உயர்ந்த சநாதனி என்பவள் எந்நாளும் நீங்கலில்லாத ஆயுளைக் காக்கக் கடவள், மயக்கமற்ற புகழ்கள் எல்லாவற்றையும் பெருந்தேவியானவள் காக்கக் கடவள்; மேலான குற்றமற்ற அறங்கள் எல்லாவற்றையும் தனுத்திரி யென்பவள் சிறப்பாகக் காக்கக் கடவள், பெருந்தன்மையமைந்த குலத்தினை, பொருந்திய குலதேவியானவள் இனிதாகக் காக்கக் கடவள்.

(க – து.) சநாதனி முதலிய பெயர்களையுடைய இறைவி ஆயுள் முதலியவைகளைக் காக்கக் கடவள்.

(வி - ரை.) சனாதனி என்றது துர்க்கையை. இயல்புடைக் குலமாவது சிறப்புவாய்ந்த குலம். (கக)

சற்கதி பிரதை நல்லோர் இயைபினைத் தயாவிற் காக்க
விற்கோடும் போரில் நீரில் வெளியினில் வனத்தில் சூதில்
இற்புறம் அதனில் ஓங்கு சர்வாணி காக்க என்னுப்
போற்றரு மலர்கள் தூவிப் புங்கவர் ஏத்தி னாரே.

(ப - ரை.) சற்கதி பிரதை - நற்கதியைத் தருகிற பிரதை யென்னும் பெயரினையுடைய இறைவி, நல்லோர் இயைபினை-நல்லோருடைய தொடர்பை, தயாவில் காக்க-அருளோடு காக்கக் கடவள், வில்கொடும் போரில் - வில்லைக்கொண்டு செய்கின்ற கொடிய போரிலும், நீரில் - நீரிலும், வெளியினில்-வெளியிலும், வனத்தில் காட்டினிடத்திலும், சூதில் – சூதாட்டத்திலும், இல்புறம் அதனில் - வீட்டின் புறத்திலும், ஓங்கு சர்வாணி காக்க என்று - உயர்ந்த சர்வாணி என்னும் பெயரினையுடையவள் காப்பாற்றக் கடவள் என்று, பொன் – பொன்னுலகத்தில் உள்ள, தருமலர்கள் தூவி - கற்பக மரத்தின் மலர்களை இறைத்து, புங்கவர் ஏத்தினர்-தேவர்கள் போற்றினர்கள்.

(போ-ரை.) நற்கதியைத் தருகிற பிரதை யென்னும் பெயரினையுடைய இறைவி நல்லோருடைய தொடர்பை அருளோடு காக்கக் கடவள், வில்லைக்கொண்டு செய்கின்ற கொடிய போரிலும், நீரிலும், வெளியிலும், காட்டினிடத்திலும், சூதாட்டத்திலும், வீட்டின் புறத்திலும் உயர்ந்த சர்வாணி என்னும் பெயரினையுடையவள் காப்பாற்றக் கடவள் என்று பொன்னுலகத்தில் உள்ள கற்பக மரத்தின் மலர்களைத் தூவித் தேவர்கள் போற்றினர்கள்.

(க - து.) பிரதை யென்னும் பெயரினையுடைய இறைவி நல்லோருடைய தொடர்பு முதலியவைகளைக் காக்கக் கடவள் என்று தேவர் யாவரும் போற்றினர் என்பதாம்.

(வி - ரை.) பிரதை யென்னுந் தேவியை ஈகையிற் சிறந்தவள் என்பர். சர்வாணி - எல்லாம் ஆகியவள். பொன் தரு மலர்கள் என்பதற்கு அழகிய கற்பக மரத்தின் மலர்கள் என்று பொருள் கூறினும் பொருந்தும். (கஉ)

வச்சிர பஞ்சர கவசப் பலன்

அந்தளிர் புரையுஞ் செய்ய அடிமலர் இறைஞ்சி ஏத்தும்
இந்திரன் முதலி னோரை எழுகென நோக்கி நீவிர்
சிந்தையுற் றுரைத்த வச்சிர பஞ்சரஞ் செபிக்கில் ஆகம்
வெந்திடக் கனற்றும் தீய வெப்புநோய் ஒழியும் அன்றே.

ஆகம் - உடல். கனற்றும் - வருத்தும். வெப்புநோய்-சுரம்.

இனிதின்இக் கவசம் தன்னை எட்டுரு முறையின் ஓதிப்
புனிதநீர் அருந்தில் உந்தி பொருந்தும்நோய் அனைத்தும் தீரும்
கனைஇருள் கங்குல் போதில் கவசம்நன் கோதி ஏகில்
துனைவுறு குறத்தாட் பூதம் பேயிவை தொடர்ந்தி டாவால்.

புனிதநீர் - தூயநீர். உந்தி - வயிறு. கனை இருள் - மிகுந்த இருள். கங்குல்போது - இராக்காலம், துனைவு - துன்பம்.

பொறைஉயிர்த் திடாத நோயில் புலம்புவோர்க் கினிதுநீவிர்
அறையும்இக் கவசம் தன்னை அருகிருந் தோதித் தூய்தாய்
நறியதண் புனலை ஓதி அளித்திடில் நவைஇ லாத
சிறுவரை விரைவின் மிக்க சிறப்பொடும் உயிர்ப்பர்மாதோ.

பொறை உயிர்த்திடாது – பிள்ளையைப் பெறுமல் நறிய – நல்ல. புனல் - நீர். உயிர்ப்பர் - பெறுவர்.

களிறுவீழ் ஞாட்பிற் கூறும் கவசம்ஓர்ந் தினிதின் ஓதின்
ஒளிரும்வேற் பகைஞர் தானை உடைந்துவெங் கொடுத்து [நீங்கும்
வெளிறில்இக் கவசம்ஓதி மென்புனல் அளிக்கில் தீஞ்சொல்
தளர்நடைப் புதல்வர்க் கென்றும் உறுபிணி சார்ந்தி டாவால்.

களிறு - யானை. ஞாட்பு - போர். தானை – படை. உடைந்து - தோற்று. வெங்கொடுத்து - புறங் காட்டி. வெளிறு இல் - வெளிப்படுதல் இல்லாத. உறுபிணி – வரக்கூடிய நோய்கள்.

இனையநல் கவசம் தன்னை யாரெடுத் தியம்பு கின்றார் [ப்
அனையவர் தமையென் னோடும் சத்திகள் அளிக்கும் என்னா
புனையிழை அமரர் வேட்ட நல்வரம் அளித்துப் போங்கும்
கனையிருட் பிழம்பு சீக்கும் தன்னுழைக் கரந்து போனாள்.

அளிக்கும் - காக்கும், புனை இழை - அழகு செய்யப் பட்ட அணிகலன்களையுடையவள். அமரர் வேட்ட - தேவர்கள் விரும்பிய. கனை இருள்-மிகுந்த துயர். பிழம்பு- தொகுதி. சீக்கும்-போக்கும். உழை-இடம்.

[இக் கவசம் காசி கண்டத்தில் எழுபத்திரண்டாவது வச்சிர பஞ்சர கவச அத்தியாயம் என்னும் பெயரோடு அமைந்துள்ளது. மேற்படி காசி கண்டம் அதிவீர ராம பாண்டியரால் தமிழில் மொழி பெயர்க்கப்பட்டது. நூறு அத்தியாயங்களையும் இரண்டாயிரத்து ஐந்நூற்று இருபத் தைந்து பாடல்களையுங் கொண்டது.]

உ

சிவமயம்



சகலகலாவல்லி மாலை என்னும்

௯. சரசுவதி தோத்திரம்

மூலமும் உரையும்

[பாண்டிவள நாட்டிலே திருவைகுண்டத்தில் தோன்றிய குமரகுருபர அடிகள் என்னும் பெரியார் ஐந்தாண்டளவும் ஊமையாக விருந்தார். பிறகு திருச்செந்தூரை யடைந்தபொழுது முருகக் கடவுளுடைய திருவருளால் ஊமைத்தன்மை நீங்கிப் பேசும் ஆற்றலை அடைந்து, 'கந்தர் கலி வெண்பா' என்னும் நூலைப் பாடியருளினார். பிறகு பல சிவப்பதிகட்குச் சென்று நூல்கள் பாடினார். காசியை அடைந்தபொழுது அங்கு அப்பொழுது அரசாட்சி செய்து கொண்டிருந்த முகமதிய மன்னனைக்கண்டு உரையாடி மடம் ஒன்று அமைக்க எண்ணினார். அம்முகமதிய மன்னனுடைய மொழி இந்துத்தானி. அம்மொழியைத் தமக்கு உணர்த்தியருள வேண்டுமென்று கலைமகளை

நோக்கி அடிகள் இப்பாடல்கள் பத்தையும் பாடியருளினர். கலைமகள் அருளால் இந்துத்தானி மொழி அடிகட்கு நன்கு விளங்கியது. முகமதிய மன்னனைக் கண்டு உரையாடி நிலம்பெற்று அங்கு குமாரசாமி மடத்தை ஏற்படுத்தியருளினர். இப் பாடல்களைப் பாடிக் கலைமகளைப் போற்றுவோர் சிறந்த புலமை நலம்பெற்று உலகில் பெருமையோடு விளங்குவார்கள்.]

வெண்டா மரைக்கன்றி நின்பதந் தாங்கவென் வெள்ளையுள்
தண்டா மரைக்குத் தகாதுகொ லோசக மேழுமளித் [ளத்
துண்டா னுறங்க வொழித்தான்பித் தாகவுண் டாக்கும்
[வண்ணங்
கண்டான் சுவைகொள் கரும்பே சகல கலாவல்லியே.

(பதவுரை.) சகம் ஏழும் அளித்து - உலகங்கள் ஏழையுங் காப்பாற்றி, உண்டான் - (ஊழிக்காலத்தில்) அவற்றை உண்டவனாகிய திருமால், உறங்க - உறங்கிக் கொண்டிருக்கவும், ஒழித்தான் - அவ்வுலகங்களை அழிப்பவனாகிய சிவபிரான், பித்து ஆக - பித்தமுடையவனாகவும், உண்டாக்கும் வண்ணம் கண்டான் - படைக்கும் விதத்தை அறிந்தவனாகிய நான்முகன், சுவை கொள் கரும்பே-சுவையாகக் கொண்டு நுகருகின்ற கரும்பைப் போன்றவளே!, சகல கலாவல்லியே - சகல கலாவல்லி என்னும் பெயரை யுடையவளே!, நின்பதம் தாங்க - உன்னுடைய திருவடியைச் சுமப்பதற்கு, வெண் தாமரைக்கு அன்றி - வெள்ளைத் தாமரை மலருக்கு அல்லாமல், என் வெள்ளை உள்ளம் - என்னுடைய வெள்ளை மனமாகிய, தண் தாமரைக்கு தகாதுகொல் - குளிர்ந்த தாமரை மலருக்குத் தகாதோ?

(பொழிப்புரை.) உலகங்கள் ஏழையுங் காப்பாற்றி ஊழிக்காலத்தில் அவைகளை உண்டவனாகிய திருமால் உறங்கிக் கொண்டிருக்கவும் அவ்வுலகங்களை அழிப்பவனாகிய சிவபிரான் பித்துக்கொள்ளவும் படைக்கும் விதத்தை அறிந்தவனாகிய நான்முகன் சுவையாகக் கொண்டு நுகருகின்ற கரும்பைப் போன்றவளே! சகல கலாவல்லி என்னும் பெயரையுடையவளே! உன் திருவடிகளைச் சுமப்பதற்கு வெண்தாமரை மலருக்கே யல்லாமல் என்னுடைய வெள்ளை மனமாகிய குளிர்ந்த தாமரை மலருக்குத் தகாதோ?

(கருத்து.) நான்முகன் சுவைக்குங் கரும்பைப்போன்றவளே! உன் திருவடிகளை வெண்டாமரை மலரேயன்றி என்னுடைய வெள்ளை மனமாகிய தாமரை மலரால் சுமக்க முடியாதோ?

(விருத்தியுரை.) சகல கலாவல்லி - எல்லா வகையான கலைகளையும் உணர்ந்த கொடி போன்றவள். சகம் ஏழு - மேலுலகம் ஏழு, கீழுலகம் ஏழு. மேலுலகம் - பூலோகம், புவலோகம், சுவலோகம், சனலோகம், தபோலோகம், மகாலோகம், சத்தியலோகம் என ஏழாகும். கீழுலகம் — அதலம், விதலம், சுதலம், தராதலம், இரசாதலம், மகாதலம், பாதலம் என ஏழாகும். (க)

நாடும் பொருட்சுவை சொற்சுவை தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள் வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கோடியே கனதனக் குன்றும்ஐம்பால்
காடுஞ் சுமக்குங் கரும்பே சகல கலாவல்லியே.

(ப - ரை.) பங்கய ஆசனத்தில்-தாமரை மலராகிய இருக்கையில், கூடும் பசும்பொன் கொடியே - சேர்ந்திருக்

கின்ற பசுமையாகிய பொன் கொடியைப் போன்றவளே !, கன தனக்குன்றும் - பருத்த கொங்கையாகிய குன்றினை யும், ஐம்பால் காடும் - ஐந்து பகுப்பாகச் செய்யப்பட்ட கூந்தற் காட்டினையும், சுமக்கும் கரும்பே-தாங்கிக்கொண் டிருக்கின்ற கரும்பைப் போன்றவளே !, சகல கலா வல்லியே -, நாடும் பொருள்சுவை சொற்சுவை தோய்தர - (அறிஞர்களால்) ஆராயப்படுகின்ற பொருட் சுவையும் சொற் சுவையும் அமைந்திருக்க, நால்கவியும் பாடும் பணியில் - நால்வகையான செய்யுட்களையும் பாடுதற்குரிய திருத்தொண்டில், பணித்து அருள்வாய் - அடியேனை இருத்தி யருள்வாயாக !

(போ - ரை.) தாமரையாகிய இருக்கையில் சேர்ந் திருக்கின்ற பசுமையாகிய பொன் கொடியைப் போன்ற வளே! பருத்த கொங்கையாகிய குன்றினையும், ஐந்து பகுப்பாகச் செய்யப்பட்ட கூந்தற் காட்டினையும் தாங்கிக் கொண்டிருக்கின்ற கரும்பைப் போன்றவளே ! சகல கலா வல்லியே ! ஆராயப்படுகின்ற பொருட் சுவையும் சொற் சுவையும் அமைந்திருக்க நால்வகையான செய்யுட்களையும் பாடுதற்குரிய திருத்தொண்டில் அடியேனை இருத்தி யருள் வாயாக!

(க - து.) எல்லாக் கலைகளையும் அறிந்தவளே ! நாற் கவியினால் உன்னைப் பாடும்படியான பணியில் என்னை இருத்தி யருள்வாயாக !

(வி-ரை.) பொருட்சுவை ஒன்பான் வகை இனிமை களும் பொருந்தித் திகழ்வது. சொற்சுவை - இனிமை யான சொற்கள் அமைந்திருப்பது. நால்வகைச் செய்யுட் கள் ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்பன. ஆசு விரைவாகப் பாடப்படுவது. மதுரம் இனிமை யமையப்

பாடப்பெறுவது. சித்திரம் ஓவியங்கள் வரைந்து எழுத்துக்களை அதிற் செறிப்பது. வித்தாரம் விரிவாகப் பாடப் பெறுவது. பங்கசம் - பங்கயம். சேற்றில் முளைப்பது. பெண்களுடைய கூந்தல் கொண்டை, சுருள், குழல், பனிச்சை, முடி என்று ஐந்து வகையாகச் சேர்க்கப்படும் தொழில்கள் அமையப் பெற்றது. ஒரு பக்கம் செருகப் படுவது கொண்டை யெனவும், பின்னே செருகப்படுவது சுருள் எனவும், சுருட்டி முடிக்கப் பெறுவது குழல் எனவும், பின்னி முடிக்கப் பெறுவது பனிச்சை யெனவும், உச்சியிற் சேர்த்து முடிக்கப் பெறுவது முடியெனவும் பெயர் பெறும். (உ)

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ லோவுளங்
கொண்டுதெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர் கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே சகல கலாவல்லியே !

(ப-ரை.) உளம் கொண்டு தெள்ளித் தெளிக்கும்-மனங்கொண்டு கொழித்துத் தெளிவிக்கின்ற, பனுவல் புலவோர்-நூலாராய்ச்சியை உடைய அறிஞர்கள், கவி மழை சிந்தக் கண்டு-செய்யுள் மாரி பெய்தலைப் பார்த்து, களிக்கும் கலாப மயிலே-களிக்கின்ற தோகையினையுடைய மயிலைப் போன்றவளே !, சகல கலாவல்லியே - எல்லாக் கலைகளையும் உணர்ந்த கொடியைப் போன்றவளே!, அளிக்கும்-உன்னாலே கொடுத்தருளப்பட்ட, செழும் தமிழ் தெள் அமுது-செழுந் தமிழாகிய தெளிவான அமுதத்தை, ஆர்ந்து-உண்டு, உன் அருட் கடலில்-உன்னுடைய அருளாகிய கடலில், குளிக்கும்படிக்கு-மூழ்குவதற்கு, என்று கூடுங்கொலோ-எந் நாள் எனக்கு இயலுமோ ?

(போ-ரை.) மனங்கொண்டு கொழித்துத் தெளிவிக்கின்ற நூலாராய்ச்சியை உடைய அறிஞர்கள் செய்யுள் மாரி பெய்தலைப் பார்த்துக் களிக்கின்ற தோகையினை யுடைய மயிலைப் போன்றவளே! எல்லாக் கலைகளையும் உணர்ந்த கொடியைப் போன்றவளே! உன்னாலே கொடுத் தருளப்பட்ட செழுந் தமிழாகிய தெளிவான அமுதத்தை உண்டு உன்னுடைய அருளாகிய கடலில் மூழ்குவதற்கு எனக்கு எந்நாள் இயலுமோ ?

(க-து.) புலவர்கள் செய்யுள் மாரி பெய்யக் கண்டு களிக்கும் மயிலைப் போன்றவளே! செழுந் தமிழாகிய அமுதத்தை உண்டு உன்னருட் கடலில் குளிப்பதற்கு எனக்கு என்று முடியுமோ ?

(வி - ரை.) செந்தமிழ் எல்லா வகையான சிறப்புக்களும் அமையப் பெற்றதாதலின் 'செழுந்தமிழ்' என்றார். தமிழ்த் தெள்ளமுது ஆர்தலாவது கலையறிவு சிறந்தோங்கப் பெறுதல். அருட் கடலில் குளித்தல் அருளை மிகுதியாகப் பெறுதல். (ரு)

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த கல்வியுஞ்
சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள் வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந் தொண்டர்செந்
நாவினின்று
காக்குங் கருணைக் கடலே சகல கலாவல்லியே.

(ப-ரை.) வடநூல் கடலும்-வட நூலாகிய கடலையும், தேக்கும் செழுந்தமிழ்ச் செல்வமும் - நிறைந்த செழுந்தமிழாகிய செல்வத்தையும், தொண்டர் செந் நாவில் நின்று - அடியார்களுடைய செவ்விய நாவினிடத்

திலே யிருந்து, காக்கும் கருணைக் கடலே - காப்பாற்று கின்ற அருட் கடலே!, சகல கலாவல்லியே-; தூக்கும் பனுவல் துறை தோய்ந்த கல்வியும் - சீர்தூக்கப் பெறு கின்ற பல நூற்றுறைகளிலேயும் படிந்த கல்வியையும், சொற்சுவை தோய் வாக்கும் - சொற்சுவை பொருந்திய வாக்கையும், பெருக பணித்து அருள்வாய் - எனக்கு மிகுதியாக உண்டாகுமாறு ஏற்படுத்தி யருள்வாயாக !

(போ-ரை.) வட நூலாகிய கடலையும் நிறைந்த செழுந்தமிழாகிய செல்வத்தையும் அடியார்களுடைய செவ்விய நாவிடத்திலே யிருந்து காப்பாற்றுகின்ற அருட் கடலே! சகல கலாவல்லியே ! சீர்தூக்கப் பெறுகின்ற பல நூற்றுறைகளிலேயும் படிந்த கல்வியையும், சொற்சுவை பொருந்திய வாக்கையும் எனக்குப் பெருகுமாறு ஏற் படுத்தி யருள்வாயாக !

(க - து.) அருட் கடலே! எனக்கு நல்ல கல்வியை யும் வாக்கையும் கொடுத்தருள்வாயாக ?

(வி-ரை.) தூக்கு என்பதற்குப் பாட்டு எனவும் பொருளுண்மையால் தூக்கும் என்பதற்குச் செய்யுள் பாடுந் திறமும் எனப் பொருளுரைப்பினும் பொருந்தும். கலைகள் அறுபத்து நான்கு வகைப் படுதலின் 'துறை தோய்ந்த' என்றார். சொற்சுவை தோய் வாக்காவது கேட் போர் இன்புறுமாறு சுவை மிக அமைந்து நிற்பது. தமிழ் மொழியைப்போல் வட மொழியும் பல இலக்கண இலக்கி யங்கள் அமையப் பெற்றுச் சிறந்து திகழ்தலின் வடநூற் கடலும் என்றார். தொண்டர் செந்நாவினின்று காத்த லாவது மறந்தொழியாமலும் குற்றமுடைய சொற்கள் பொருந்தாமலும் பாதுகாத்தல். (௪)

பஞ்சப் பிதந்தரு செய்யபொற் பாதபங் கேருகமேன்
நேஞ்சத் தடத்தல ராததேன் னேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்த்தோன்செந் நாவும் அகமும்வெள்ளைக்
கஞ்சத் தவிசோத் திருந்தாய் சகல கலாவல்லியே.

(ப-ரை.) நெடும் தாள் கமலத்து-நீண்ட நாளத்தை யுடைய தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட, அஞ்சம் துவசம் உயர்த்தோன்-அன்னக் கொடியை உயர்த்தியவனாகிய நான்முகனது, செந் நாவும் அகமும் - செவ்விய நாவி னிடத்திலும் உள்ளத்திலும், வெள்ளை கஞ்சம் தவிசு ஒத்து இருந்தாய் - வெண்டாமரை மலராகிய இருக்கையைப்போல் எண்ணி அமர்ந்தவளே, சகல கலாவல்லியே!-; பஞ்சு அப்பு இதம் தரு-செம்பஞ்சு ஊட்டப்பெற்ற நன்மையைத் தருகிற, செய்ய பொன் பாத பங்கேருகம் - சிவந்த அழகிய நின் திருவடியாகிய தாமரை மலர், என் நெஞ்சம் தடத்து—என் உள்ளமாகிய தடாகத்திலே, அலராதது என்னே-மலராமைக்குக் காரணம் யாதோ ?

(பொ - ரை.) நீண்ட நாளத்தை யுடைய தாமரை மலரை இருக்கையாகக் கொண்ட அன்னக் கொடியை உயர்த்தியவனாகிய நான்முகனது செவ்விய நாவினிடத்திலும் உள்ளத்திலும் வெண் தாமரை மலராகிய இருக்கையைப்போல் எண்ணி அமர்ந்தவளே! சகல கலாவல்லியே! செம்பஞ்சு ஊட்டப்பெற்ற நன்மையைத் தருகிற சிவந்த அழகிய நின் திருவடியாகிய தாமரை மலர் என் உள்ளமாகிய தடாகத்திலே மலராமைக்குக் காரணம் யாதோ?

(க - து.) சகல கலாவல்லியே உன்னுடைய திருவடித் தாமரை என்னுடைய உள்ளமாகிய தடாகத்திலே மலராமைக்குக் காரணம் யாதோ !

(வி-ஶ்ரை.) தேவ மகளிரும் செல்வச் சிறப்புடை யோரும் தம்முடைய அடிகட்குச் செம் பஞ்சுக் குழம்பூட் டுதல் இயற்கை. இதத்தைத் தருதல் போற்றி வழிபடுதலை யுடைய அடியார்கட்காம். தாமரை மலரையும் நான்முக னுடைய நாவையும் இருப்பிடமாகக் கொண்டதைப்போல் உன்னுடைய அடிமலர்களைப் போற்றும் என்னுடைய உள் ளத்திலேயும் எழுந்தருளி யிருக்கவேண்டு மென்பது குறிப்பு. (ரு)

பண்ணும் பரதமுங் கல்வியுந் தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல் காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங் கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய் சகல கலாவல்லியே.

(ப - ரை.) எழுதா மறையும் - எழுதுவதற்கு இய லாமல் ஒலிவடிவமாக விளங்கும் மறையிலும், விண்ணும் புவியும் - விண்ணிலும் மண்ணிலும், புனலும் கனலும் - நீரிலும் நெருப்பிலும், வெம்காலும் - விரைவான காற்றி லும், அன்பர் கண்ணும் கருத்தும்-அன்பர்களுடைய கண் களிலும் கருத்திலும், நிறைந்தாய் - நிறைந்திருப்பவளே !, சகல கலாவல்லியே-; பண்ணும் — பண்களும், பரதமும் - பரத நூலும், கல்வியும் - கல்வி யறிவும், தீம்சொல் பனு வலும்—இனிய சொற்களையுடைய நூலும், யான் எண்ணும் பொழுது - நான் நினைக்குங் காலத்தில், எளிது எய்த நல் காய் - எளிதிலடையும்படி நீ அருள் செய்வாயாக !

(போ - ரை.) எழுதுவதற்கு இயலாமல் ஒலிவடிவ மாக விளங்கும் மறையிலும் விண்ணிலும் மண்ணிலும் நீரிலும் நெருப்பிலும் விரைவான காற்றிலும் அன்பர்க ளுடைய கண்களிலும் கருத்திலும் நிறைந்திருப்பவளே ! சகலகலாவல்லியே-; பண்களும் பரதநூலும் கல்வி யறிவும்

இனிய சொற்களையுடைய நூலும் நான் நினைக்குங் காலத்தில் எளிதிலடையும்படி நீ அருள் செய்வாயாக.

(க – து.) மறை முதலியவைகளில் நிறைந்திருப்பவளே! பண், பரதம், கல்வியறிவு முதலியன நான் எண்ணும்பொழுது எளிதிலடையும்படி நீ அருள் செய்வாயாக.

(வி - ரை.) இசை; இது பாலை, குறிஞ்சி, மருதம், செவ்வழி என நான்கு. பரதம் - கூத்து. எளிது எய்தல்- மிகு முயற்சி யில்லாமலே அடைதல். மறை எழுத வியலாமல் ஒலி வடிவமாகவே கடவுளால் அருளப்பட்டமையின் எழுதாமறை என்றார். மறை - மற்றைய வருணத்தார்க்கு மறுக்கப்பட்டமையின் மறையென்று பெயர் வந்ததென்று சிலரும், மறைவாக இருக்கிறபடியினால் மறையென்று பெயர் வந்ததென்று சிலரும் கூறுப. இச்செய்யுளால் சகலகலாவல்லி யாண்டும் நிறைந்தவளென்று கூறினர். (கூ)

பாட்டும் பொருளும் பொருளாற் பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கண்நல் காய்உளங் கொண்டு
[தொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பால் அமுதம் தெளிக்கும்வண்ண
காட்டும்வெள் ளோதிமப் பேடே சகல கலாவல்லியே! [ம்

(ப - ரை.) தொண்டர் உளம் கொண்டு - அடியார்கள் உள்ளத்திலே கொண்டு, தீட்டும் கலைத்தமிழ் - எழுதுகிற தமிழ் நூல்களாகிய, தீம் பால் அமுதம் தெளிக்கும் வண்ணம் - இனிமையாகிய பாலமுதத்தைத் தெளியும்படி செய்து, காட்டும் வெள் ஓதிமப் பேடே - காட்டுகின்ற வெண்மையாகிய பெட்டை யன்னமே!, சகல கலாவல்லியே -; பாட்டும் பொருளும் - பாட்டையும் அதனுடைய உரையையும், பொருளால் பொருந்தும் பயனும் - உரை

யால் உண்டாகின்ற பயனையும், என்பால் கூட்டும்படி - என்னிடத்திலே சேர்க்குமாறு, நின் கடைக்கண் நல்காய் - நின் கடைக்கண் நோக்கத்தினைச் செய்தருள்வாயாக!

(போ - ரை.) அடியார்கள் உள்ளத்திலே கொண்டு எழுதுகிற தமிழ் நூல்களாகிய இனிய பாலமுதத்தைத் தெளியும்படி செய்து காட்டுகின்ற வெண்மையாகிய பெட்டை யன்னமே; சகல கலாவல்லியே! பாட்டையும் அதனுடைய உரையையும் உரையால் உண்டாகின்ற பயனையும் என்னிடத்திலே சேர்க்குமாறு நின் கடைக்கண் நோக்கத்தினைச் செய்தருள்வாயாக!

(க - து.) சகல கலாவல்லியே! பாட்டாலும் பொருளாலும் உண்டாகின்ற பயன் என்னிடத்திற் சேருமாறு அருள் செய்வாயாக.

(வி-ரை.) பொருளாற் பொருந்தும் பயனுவது நடைமுறையிற் கண்டறிவது, தொண்டர் - தமிழறிஞர்கள். கலைத் தமிழ்த் தீம்பால் அமுதத்தைத் தெளிக்கும் வண்ணம் காட்டுதலாவது, பாட்டின் பொருள் நன்கு விளங்குமாறு செய்து அதன் பயனையும் அடையச் செய்தல். (எ)

சொல்விற் பனமும் அவதான முங்கல்வி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள் வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே சகல கலாவல்லியே.

(ப - ரை.) நளின ஆசனம் சேர் - தாமரை மலராகிய இருக்கையில் பொருந்தி யிருக்கிற, செல்விக்கு அரிது என்று - திருமகளுக்கு அரியது என்று கூறப்பெற்று, ஒரு காலமும் சிதையாமை நல்கும் - ஒரு காலத்தினும் அழியாதிருக்கும்படி அருள் செய்கின்ற, கல்வி பெரும் செல்வப்

பேறே - கல்வியாகிய பெரிய செல்வத்தின் பயனே!, சகல கலாவல்லியே-; சொல் விற்பனமும் - சிறந்த சொல்லாற்றலும், அவதானமும் - அவதானம் செய்கிற ஆற்றலும், கல்வி சொல்லவல்ல நல்வித்தையும் - கல்வியைப் பிறருக்குக் கற்பிக்கத்தக்க சிறந்த புலமைத் திறமும், தந்து அடிமை கொள்வாய் - (ஆகியவைகளைக்) கொடுத்து அடியேனை ஆட்கொண்டருள்வாய்.

(போ - ரை.) தாமரை மலராகிய இருக்கையில் பொருந்தி யிருக்கிற திருமகளுக்கு அரியது என்று கருதி ஒரு காலத்தினும் அழியாதிருக்கும்படி அருள் செய்கின்ற கல்வியாகிய பெரிய செல்வத்தின் பயனே! சகல கலாவல்லியே! சிறந்த சொல்லாற்றலும் அவதானம் செய்கிற ஆற்றலும், கல்வியைப் பிறருக்குக் கற்பிக்கத்தக்க புலமைத்திறமும் ஆகியவைகளைக் கொடுத்து அடியேனை ஆட்கொண்டருள்வாய்.

(க-து.) சகல கலாவல்லியே அவதான ஆற்றல் முதலியவைகளை அடியேனுக்குத் தந்தருள்வாயாக.

(வி - ரை.) அவதானம்-பற்றுதல். ஒரே சமயத்தில் பலவகையான செய்திகளை உள்ளத்தில் பற்றிக்கொண்டு நினைவாற்றலால் செயல் புரிதல் அவதானம் எனப்பெறும். இதனைச் செய்வோர் ஒரே சமயத்தில் எட்டு, பத்து, பதினாறு, நூறுவரை செய்திகளை உள்ளத்தில் பற்றிக்கொண்டு செயல் புரிதலை, அட்டாவதானம், தசாவதானம், சோடசாவதானம், சதாவதானம், என்று கூறுவர். இவ்வாறு செய்தற்குத் தெய்வத் திருவருளும் மிகுந்த அறிவாற்றலும் நினைவாற்றலும் வேண்டும். திருமகளால் கொடுக்கப் பெறுஞ் செல்வம் விரைவில் அழிந்துபோகக்கூடிய தன்மையுடையது. அழியாச் செல்வத்தை அருளுதல் திருமக

ளுக்கு அரிய செயலாகும். கலா வல்லியாகிய கலைமகளால் அளிக்கப் பெறுகிற கல்விச் செல்வமோ இப்பிறவியில் மட்டு மன்றி எழுமையுந் தொடர்ந்து செல்லும் விழுமிய சிறப் புடையதாகும். திருவள்ளுவரும், "ஒருமைக்கட் டான் கற்ற கல்வி யொருவற் கெழுமையு மேமாப் புடைத்து" என்றார். (அ)

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ் ஞானத்தின்
தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே சகல கலாவல்லியே.

(ப - ரை.) நிலம் தோய் புழைக்கை-நிலத்திற் படி கின்ற துதிக்கையினையுடைய, நல் குஞ்சரத்தின் பிடியோடு- நல்ல பெண் யானையோடு, அரச அன்னம் நாண - அரச அன்னமும் நாணத்தை யடையுமாறு, நடைகற்கும் பத அம்புயத்தாளே-நடை பழகுகின்ற திருவடித் தாமரையை உடையவளே!, சகல கலாவல்லியே-; சொற்கும் பொருட் கும் உயிர் ஆம்-சொல்லுக்கும் பொருளுக்கும் உயிராகிய, மெய் ஞானத்தின் தோற்றம் என்ன-மெய்யறிவின் காட்சி யென்று சொல்லுமாறு, நிற்கின்ற நின்னை நினைப்பவர் யார்?-நிற்கின்ற உன்னை நினைக்க வல்லவர் எவருளர்?

(பொ - ரை.) நிலத்திற் படிகின்ற துதிக்கையினை யுடைய நல்ல பெண் யானையோடு அரச அன்னமும் நாணத்தை அடையுமாறு நடை பழகுகின்ற திருவடித் தாமரையை உடையவளே! சகல கலாவல்லியே! சொல் லுக்கும் பொருளுக்கும் உயிராகிய மெய்யறிவின் காட்சி யென்று சொல்லுமாறு நிற்கின்ற நின்னை நினைக்கவல்லவர் எவருளர்?

(க - து.) சகல கலாவல்லியே! மெய்யறிவின் தோற்ற மாக விளங்கும் உன்னை நினைக்கக் கூடியவர் எவருளர்?

(வி - ரை.) சொற்கும் பொருட்கும் உயிர் நாடியாக விளங்குவது மெய்யறிவாகலின், "சொற்கும் பொருட்கும் உயிராம் மெய்ஞ்ஞானம்" என்றார். மெய்யறிவு நிலையை யாரும் நினைக்க முடியாதாகலின் "நின்னை நினைப்பவர் யார்?" என்றார். புழை கை-துளையுள்ள கை. நற் குஞ்சரம் – அரசயானை. (சு)

மண்கண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய் வாய்படைப்
போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண் டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வம் உளதோ சகல கலாவல்லியே.

(ப - ரை.) படைப்போன் முதலாம் - படைக்குந் தொழிலைச் செய்யும் நான்முகன் முதலாகிய, விண்கண்ட தெய்வம்-விண்ணுலகத்திலுள்ள தெய்வங்கள், பல்கோடி உண்டேனும்-கோடிக் கணக்கில் இருந்தாலும், விளம்பில் உன்போல் - சொல்லுமிடத்திலே நின்னைப்போல், கண் கண்ட தெய்வம் உளதோ - கண்ணினல் பார்க்கப்படுந் தெய்வம் வேறு ஏதேனும் இருக்கின்றதோ?, சகல கலா வல்லியே -; மண்கண்ட - நிலவுலக ஆட்சியைச் செய்யும், வெண்குடைக் கீழாக மேற்பட்ட மன்னரும் - வெண் கொற்றக் குடை நிழலிலே அமர்ந்த அரசர்களும், என் பண்கண்ட அளவில் - என்னுடைய பண்ணமைந்த பாக்களைப் பார்த்த அளவில், பணியச் செய்வாய்–வணங்கு மாறு செய்தருள்வாயாக !

(போ - ரை.) படைக்குந் தொழிலைச் செய்யும் நான் முகன் முதலாகிய விண்ணுலகத்திலுள்ள தெய்வங்கள் பல கோடிக் கணக்கில் இருந்தாலும் சொல்லுமிடத்திலே உன்னைப் போலக் கண்ணினால் பார்க்கப்பட்ட தெய்வம் வேறு ஏதேனும் இருக்கின்றதோ? சகல கலாவல்லியே! நிலவுலக ஆட்சியைச் செய்யும் வெண் கொற்றக் குடை நிழலிலே அமர்ந்த அரசர்களும் என்னுடைய பண்ணிறைந்தபாடலைப் பார்த்தஅளவில் வணங்குமாறு செய்தருள்வாயாக !

(க - து.) சகல கலாவல்லியே! உலகத்தை அரசாட்சிசெய்கின்ற அரசர்களும் என்னுடைய பண்ணமைந்த பாக்களைப் பார்த்தவுடன் வணங்குமாறு செய்வாயாக!

(வி - ரை.) மேற்பட்ட மன்னர்– யானை முதலியவைகளின் மேலமர்ந்த அரசர்கள். கீழாக மேற்பட்ட மன்னர் என்பதிற் சொன்னயம் அமைந்துள்ளது. பண்கண்ட அளவில் - என்னுடைய பண்பைப் பார்த்தவுடன் எனப் பொருள் கூறினும் பொருந்தும். விண்கண்ட தெய்வம் பல்கோடி என்றது முப்பத்து முக்கோடி தேவர்கள் முதலாயினாரை. கல்வியின் தெய்வத் தன்மை எல்லோராலும் நன்குணரப்பட்டமையின் 'கண்கண்ட' என்றார்.

[குமரகுருபர அடிகளார் இப்பாடல்களை இயற்றிய அளவில் முகமதிய மன்னனுடைய மொழி அடிகளார்க்கு விளக்கமாகியது. முகமதிய மன்னனோடு உரையாடி அவனைத் தன் வழிப்படுத்தி யருளினார்கள். காசியிற் குமாரசாமி மடத்தை ஏற்படுத்துவதற்கு வழியுண்டாயிற்று. அடிகள் இச் செய்யுளிற் கேட்டுக்கொண்டபடி மண்கண்ட வெண்குடைக் கீழாகமேற்பட்ட மன்னன் அடிகளார்க்குப் பணிந்தவனாயினான். வேறு எத் தெய்வத்தாலும் அச் சமயத்தில் இவ்வாறு எளிதில் உதவி செய்தல் இயலாது. ஆகவே, "விண்கண்ட தெய்வம் பல்கோடி யுண்டேனும் விளம்பி லுன்போற் கண்கண்ட தெய்வம் உளதோ?" என்றனர்.] (க0)

உ

சிவமயம்



எ. இலக்குமி தோத்திரம்

மூலமும் உரையும்

[அகத்திய முனிவர் தம்முடைய மனைவியோடு கொல்லாபுரம் என்னும் ஊருக்குச் சென்றார். அங்குத் திருமகள் திருக்கோயில் கொண்டிருக்கும் இடத்திற்குச் சென்றபோது திருமகள் மீது இப் பாடல்களைப் பாடிப் போற்றினர். அப்போது திருமகள் அகத்தியருக்குக் காட்சிகொடுத்து, "உன்னுடைய போற்றிப் பாடல்களுக்கு நான் மனமகிழ்ந்தேன். இப் பாடல்களைப் பாடிப் போற்றினோர் எவரும் கெடுதற்கு அரிய பெரிய இன்பங்களை நுகர்வார்கள். இப்பாடல்களை எழுதப் பெற்ற ஏடானது இல்லத்திலே இருக்குமானல் வறுமையைக் கொடுக்கின்ற தவ்வையானவள் அவ்வில்லத்தை யடைய மாட்டாள்" என்று திருவாய் மலர்ந்தருளினள். இப் பாடல்களை நாள் தோறும் படிப்பவர்கள் பெருஞ் செல்வத்தை யடைந்து

அச் செல்வத்தாலாம் பயனையும் நுகர்வர். இந் நூலானது வீட்டிலே இருக்குமானால் செல்வ நலஞ் சிறந்தோங்கும். இது நடைமுறையிற் கண்டறிந்த உண்மை. ஆகவே அன்பர்கள் இந் நூலைப் பொன்னெனப் போற்றிப் பாதுகாக்கக் கடவர்.]

மூவுலகும் இடரியற்றும் அடலவுணர்
உயிரொழிய முனிவு கூர்ந்த
பூவைஉறழ் திருமேனி அருட்கடவுள்
அகன்மார்பில் பொலிந்து தோன்றித்
தேவர்உல கினும்விளங்கும் புகழ்க்கொல்லா
புரத்தினிது சேர்ந்து வைகும்
பாவைஇரு தாள்தொழுது பழமறைதேர்
குறுமுனிவன் பழிச்சு கின்றான்.

(பதவுரை.) மூவுலகும் இடர் இயற்றும்-மூன்று உலகங்களுக்குந் துன்பத்தைச் செய்த, அடல் அவுணர் உயிர் ஒழிய-வலிமை பொருந்திய அசுரர்களுடைய உயிரானது உடலை விட்டு ஒழியுமாறு, முனிவு கூர்ந்த பூவை உறழ் திருமேனி-சினங்கொண்ட காயா மலரை யொத்த அழகிய உடலினையுடைய, அருள் கடவுள் அகன் மார்பில் பொலிந்து தோன்றி - அருள் மிக்க திருமாலின் பரந்த மார்பினிடத்திலே விளங்கித் தோன்றி, தேவர் உலகினும் விளங்கும் - தேவர்களுடைய உலகத்தைப் பார்க்கினும் பெருமையிற் சிறந்து திகழும், புகழ் - புகழினையுடைய, கொல்லாபுரத்து இனிது சேர்ந்து வைகும்-கொல்லாபுரம் என்னும் ஊரில் இனிதாகச் சேர்ந்து வீற்றிருக்கின்ற, பாவை இரு தாள் தொழுது - பாவையைப் போல்வாளாகிய திருமகளின் இரண்டு திருவடிகளையும் பணிந்து, பழமறை தேர்-பழைமையான மறைகளை யெல்லாம் ஆராய்ந்

துணர்ந்த, குறுமுனிவன் பழிச்சுகின்றான்-அகத்திய முனிவர் புகழ்ந்து பாடலானார்.

(பொழிப்புரை.) மூன்று உலகங்களுக்கும் துன்பத்தைச் செய்கிற வலிமை பொருந்திய அசுரர்களுடைய உயிரானது உடலைவிட்டு ஒழியுமாறு, சினங்கொண்ட காயாமலரை யொத்த அழகிய உடலையுடைய அருள்மிக்க திருமாலின் பரந்த மார்பினிடத்திலே விளங்கித் தோன்றித் தேவர்களுடைய உலகத்தைப் பார்க்கினும் பெருமையிற் சிறந்து திகழும் புகழினையுடைய கொல்லாபுரம் என்னும் ஊரில் இனிதாகச் சேர்ந்து வீற்றிருக்கின்ற பாவையைப் போல்வாளாகிய திருமகளின் இரண்டு திருவடிகளையும் பணிந்து பழைமையான மறைகளை யெல்லாம் ஆராய்ந்துணர்ந்த அகத்திய முனிவர் புகழ்ந்து பாடலானார்.

(கருத்து) அகத்திய முனிவர் திருமகளின் திருவடிகளைப் புகழ்ந்து பாடுகின்றார்.

(விருத்தியுரை) மூவுலகம்-சுவர்க்கம் மத்தியம் பாதாளம் என்னும் மூன்று உலகம் அடலவுணர்-சோமுகாசுரன், இரணியாக்கன், இரணியகசிபன், இராவணன், கும்பகருணன் முதலிய திருமாலால் கொல்லப்பெற்ற அசுரர்கள். பூவை-காயாம்பூ; இது நீல நிறமுடையதாகையால் திருமாலின் நிறத்திற்கு உவமையாயிற்று. கடவுள் என்னுஞ் சொல்லுக்குப் பொருள் எல்லாவற்றையுங் கடந்து நிற்பது என்பதாம். கொல்லாபுரம்-யாதோருயிரையுங் கொலை செய்யாதவர்கள் வாழ்ந்திருக்கும் ஊர்; (க)

கொழுதியிசை அளிமுரலும் தாமரைமேன்
போகுட்டிலுறை கோள்கை போல
மழையுறழுந் திருமேனி மணிவண்ணன்
இதயமலர் வைகு மானே

முழுதுலகும் இனிதீன்ற அருட்கொம்பே
கரகமலம் முகிழ்த்தெந் நாளும்
கழிபெருங்கா தலில்தொழுவோர் வினைதீர
அருள்கொழிக்குங் கமலக் கண்ணாய்.

(ப-ரை.) அளி கொழுதி இசை முரலும் - வண்டுகள் கிண்டிப் பண்களைப் பாடுதலுக்கு இடமாக விருக்கும், தாமரை மெல் பொகுட்டில் உறை கொள்கைபோல - தாமரை மலரின் மென்மையாகிய கொட்டையின் மீது வாழுந் தன்மையைப்போல், மழை உறழும் - கருமுகிலை யொத்த, திருமேனி-அழகிய உடலினையுடைய, மணி வண்ணன் இதயமலர் வைகும் மானே - மணிவண்ணனாகிய திருமாலின் உள்ளத் தாமரை மலரில் எழுந்தருளி யிருக்கிற திருமகளே!, முழுது உலகும்இனிது ஈன்ற அருள் கொம்பே - எல்லா உலகங்களையும் இனிதாகப் பெற்ற அருட்கொடியே, கர கமலம் முகிழ்த்து - கையாகிய தாமரை மலரைக் குவித்து, எந்நாளும் - எந்த நாளிலும்' கழிபெரும் காதலில் - மிகுந்த பேரன்பினோடு, தொழுவோர் வினைதீர-வணங்குபவர்களுடைய தீவினை யொழியுமாறு, அருள் கொழிக்கும் கமலக் கண்ணாய் - அருளைப் பொழியுந் தாமரை மலர்போலுங் கண்களையுடையவளே!

(பொ - ரை.) வண்டுகள் கிண்டிப் பண்களைப் பாடுதலுக்கு இடமாக விருக்கும் தாமரை மலரின் மென்மையாகிய கொட்டையின் மீது வாழுந் தன்மையைப் போல், கருமுகிலை யொத்த அழகிய உடலினையுடைய மணிவண்ணனாகிய திருமாலின் உள்ளத்தாமரை மலரில் எழுந்தருளி யிருக்கிற திருமகளே! எல்லா உலகங்களையும் இனிதாகப் பெற்ற அருட் கொடியே! கையாகிய தாமரை மலரைக்

குவித்து எந்த நாளிலும் மிகுந்த பேரன்பினோடு வணங்குபவர்களுடைய தீவினை யொழியுமாறு அருளைப் பொழியுந் தாமரை மலர் போலுங் கண்களை யுடையவளே !

(க - து.) உள்ளத் தாமரை மலரில் எழுந்தருளியிருக்கிற திருமகளே ! அருட் கொடியே ! தாமரை மலர் போலுங் கண்களை யுடையவளே !

(வி - ரை.) மானே என்பது உவமையாகு பெயர். மான்போலும் மருண்ட நோக்கத்தை யுடையவள். கர கமலம்: வடமொழிப் புணர்ச்சி. அருட் கொம்பு - அருளைத் தருகிற கொம்பு. கழிபெருங் காதல் - மிகுந்த பேரன்பு. கொழித்தல்-வெளியே வீசுதல். இப் பாட்டு விளி. (உ)

கமலைதிரு மறுமார்பன் மனைக்கிழத்தி
செழுங்கமலக் கையாய் செய்ய
விமலைபசுங் கழைகுழைக்கும் வேனிலான்
தனையீன்ற விந்தை தூய
அமுதகும்ப மலர்க்கரத்தாய் பாற்கடலுள்
அவதரித்தோய் அன்பர் நெஞ்சத்
திமிரமகன் றிடவொளிருஞ் செழுஞ்சுடரே
எனவணக்கஞ் செய்வான் மன்னோ.

(ப - ரை.) கமலை - திருமகளே !, திருமறு மார்பன் மனைக்கிழத்தி - அழகிய மறுவமைந்த மார்பினை யுடையவனாகிய திருமாலின் இல்லக்கிழத்தியே!, செழும் கமலக் கையாய் - செழுமை வாய்ந்த தாமரை மலர்போன்ற கைகளை உடையவளே!, செய்ய விமலை-செஞ்சிறமுள்ள விமலையே!, பசும் கழை குழைக்கும் - பசுமையான கரும்பினை வில்லாகவளைக்கின்ற, வேனிலான் தனை ஈன்ற விந்தை-

வேனிற் காலத்திற் குரியவனுகிய காமனைப் பெற்ற திரு மகளே!, தூய அமுத கும்பம் - தூய்மை வாய்ந்த அமுதம் நிறைந்த குடத்தை யேந்திய, மலர் கரத்தாய் – தாமரை மலர் போன்ற கைகளை யுடையவளே!, பால் கடலுள் அவ தரித்தோய் - திருப்பாற் கடலிலே பிறந்தவளே!, அன்பர் நெஞ்சத் திமிரம் அகன்றிட - அடியார்களுடைய மன விரு ளானது நீங்குமாறு, ஒளிரும் செழும் சுடரே! – விளங்கு கின்ற செழுமையான பேரொளியே!, என வணக்கம் செய் வான் - என்று வணக்கஞ் செய்யலானுன். மன், ஓ: அசை நிலைகள்.

(பொ-ரை.) திருமகளே! அழகிய மறுவமைந்த மார் பினை யுடையவனுகிய திருமாலின் இல்லக் கிழத்தியே! செழுமை வாய்ந்த தாமரை மலர் போன்ற கையை உடை யவளே! செந்நிறமுள்ள விமலையே! பசுமையான கரும் பினை வில்லாக வளைக்கின்ற வேனிற் காலத்திற் குரியவனு கிய காமனைப் பெற்ற திருமகளே! தூய்மை வாய்ந்த அமுதம் நிறைந்த குடத்தை யேந்திய தாமரை மலர் போன்ற கையை உடையவளே! திருப்பாற் கடலிற் பிறந் தவளே! அடியார்களுடைய மன விருளானது நீங்குமாறு விளங்குகின்ற செழுமையான பேரொளியே! என்று வணக்கஞ் செய்யலானுன்.

(க - து.) திருமகளே! என்று விளித்து அகத்திய முனிவர் வணக்கஞ் செய்யலானுர்.

(வி - ரை.) கமலை - தாமரை மலரில் இருப்பவள். மறு என்பது திருமாலின் திருமார்பில் இருக்கிற நல்லிலக் கணம் அமைந்த ஒரு மறு, இதனை வடநூலார் ஸ்ரீவத்சம் என்பர். மனைக்கிழத்தி - இல்லத்திற்கு உரிமை பூண்ட

வள்; விமலே - தூய்மையாக இருப்பவள். வேனில்-வசந்த காலம்; இக்காலம் காமனுக்கு உவப்பாகிய காலமாதலால் அவனே வேனிலான் என்றார். விந்தை-வீரத் திருமகள். திருப்பாற் கடலில் தோன்றிய நாளில் அமிர்தம் நிறைந்த குடத்தைக் கையிலேந்தி வந்தபடியால் 'அமுத கும்ப மலர்க்கரத்தாய்!'' என்றார். 'அமுத கும்ப கன தனத்தாய்' எனப் பாட வேறுபாடும் உண்டு. நெஞ்சத் திமிரம் அகன்றிடலாவது மன மயக்கம் நீங்குதல். (௫)

மடற்கமல நறும்போகுட்டில் அரசிருக்கும்
சேந்துவர்வாய் மயிலே மற்றுன்
கடைக்கணருள் படைத்தன்றோ மணிவண்ணன்
உலகமெலாங் காவல் பூண்டான்
படைத்தனன்நான் முகக்கிழவன் பசுங்குழவி
மதிபுனைந்த பரமன் தானும்
துடைத்தனன்நின் பெருஞ்சீர்த்தி எம்மனோ
ரால்எடுத்துச் சொல்லற் பாற்றோ ?

(ப - ரை.) மடல் கமல நறும் பொகுட்டில் - இதழ்களை யுடைய மணமுள்ள தாமரைப்பூங் கொட்டையில், அரசு இருக்கும் - அரசு வீற்றிருக்கின்ற, செம் துவர்வாய் மயிலே-செம்பவழம் போன்ற அதரத்தையுடைய மயில் போல்வாளே!, உன்கடைக்கண் அருள்படைத்து அன்றோ- உன்னுடைய கடைக்கண்ணின் அருளைப் பெற்றன்றோ, மணிவண்ணன் உலகம் எலாம் காவல் பூண்டான் - நீல மணி போன்ற நிறத்தினையுடைய திருமால் உலகம் முழு வதையும் காத்தற் றொழிலை மேற்கொண்டான், நான்முகக் கிழவன் படைத்தனன் - நான்முகனனவன் படைத்தற் றொழிலை மேற்கொண்டான், பசும் குழவி மதி புனைந்த பரமனும் தானும் - பசுமையாகிய இளந்திங்களை யணிந்த

சிவபெருமானும், துடைத்தனன் - அழிக்குந் தொழிலை மேற்கொண்டான், நின் பெரும் சீர்த்தி - நின்னுடைய பெரிய புகழானது, எம்மனோரால் எடுத்துச் சொல்லற் பாற்றோ — எம்மைப் போன்றவர்களால் எடுத்துக் கூறத் தக்க தன்மை யுடையதோ ?

(போ - ரை.) இதழ்களையுடைய மணமுள்ள தாமரைப் பூங்கோட்டையில் அரசு வீற்றிருக்கின்ற செம்பவழம் போன்ற அதரத்தையுடைய மயில்போல்வாளே! உன்னுடைய கடைக்கண் அருளைப் பெற்றன்றோ நீலமணி போன்ற நிறத்தினையுடைய திருமால் உலகம் முழுவதையுங் காத்தற் றொழிலை மேற்கொண்டான்? நான்முகனவன் படைத்தற் றொழிலை மேற்கொண்டான்? பசுமையாகிய இளந் திங்களை யணிந்த சிவபெருமானும் அழிக்குந் தொழிலை மேற்கொண்டான்? நின்னுடைய பெரிய புகழானது எம்மைப் போன்றவர்களால் எடுத்துச் சொல்லத் தக்க தன்மை யுடையதோ?

(க - து.) திருமகளே உன்னுடைய பெருமையை எம் போன்றவர்களால் எடுத்துக் கூற முடியுமோ?

(வி - ரை.) செந்துவர்-சிவந்த பவளம். பண்பாகு பெயர். மயில் : உவமையாகு பெயர். மற்று : அசை. மதி-அமுதத்தை யுடைய திங்கள். திருமால், நான்முகன், சிவன் ஆகிய முத்தேவர்களும் முத் தொழிலையும் புரிவது உன்னுடைய அருளினுல்தான் என்பது கருத்து. (௪)

மல்லல்நெடும் புவியனைத்தும் போதுநீக்கித்
தனிபுரக்கு மன்னர் தாமும்
கல்வியினில் பேரறிவில் கட்டழகில்
நிகரில்லாக் காட்சி யோரும்

வேல்படையில் பகைதுரந்து வெஞ்சமரில்
வாகைபுனை வீரர் தாமும்
அல்லிமலர்ப் பொகுட்டுறையும் அணியிழைநின்
அருள்நோக்கம் அடைந்து ளாரே.

(ப - ரை.) மல்லல் நெடும் புவி அனைத்தும்—வளம் பொருந்திய நீண்ட உலகம் முழுவதையும், பொது நீக்கி - பொதுத் தன்மையில் இருந்து விலக்கி, தனி புரக்கும் மன்னர் தாமும்-தனியே அரசாட்சி செய்கின்ற அரசர்களும், கல்வியினில்—கல்வியிலும், பேரறிவில்-சிறந்த அறிவிலும், கட்டழகில் – மிகுந்த அழகிலும், நிகர் இல்லாக் காட்சி யோரும் - ஒப்பில்லாத தன்மையைப் பெற்றவர்களும், வெல் படையில் பகை துரந்து – வெல்லுகிற படையைக் கொண்டு பகைவர்களை விரட்டி, வெம் சமரில் வாகை புனை வீர்தாமும் - கொடிய போரில் வெற்றி மாலையைச் சூடுகிற வீரர்களும், அல்லி மலர் பொகுட்டு உறையும் - அகவிதழ்களை யுடைய தாமரைப் பூங்கொட்டையில் தங்கியிருக்கின்ற, அணியிழை-அழகிய அணிகலன்களை யணிந்த திருமகளே!, நின் அருள் நோக்கம் அடைந்துளாரே-உன்னுடைய திருவருட் பார்வையைப் பெற்றவர்களே.

(போ - ரை.) வளம் பொருந்திய நீண்ட உலகம் முழுவதையும் பொதுத் தன்மையில் இருந்து விலக்கித் தனியே அரசாட்சி செய்கின்ற அரசர்களும் கல்வியிலும் சிறந்த அறிவிலும் மிகுந்த அழகிலும் ஒப்பில்லாத தன்மை யமையப் பெற்றவர்களும், வெல்லுகிற படையைக் கொண்டு பகைவர்களை விரட்டிக் கொடிய போரில் வெற்றி மாலையைச் சூடுகிற வீரர்களும் அகவிதழ்களையுடைய தாமரைப் பூங்கொட்டையில் தங்கி யிருக்கின்ற திருமகளே நின்னுடைய திருவருளைப் பெற்றவர்களே யாவர்.

(க - து.) திருமகளே அரசர்கள் முதலான எல்லோரும் உன்னுடைய திருவருளைப் பெற்றவர்களே.

(வி - ரை.) "மல்லல் வளனே" என்பது சூத்திரம் ஆகலின் மல்லல் என்பதற்கு வளம் என்று பொருளுரைக்கப்பட்டது. "அல்லி அகவிதழ்; புல்லிபுறவிதழ்" என்பர். அணியிழை: வினைத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயர். அண்மை விளியாகையால் இயல்பாக நின்றது. (ரு)

சேங்கமலப் போலந்தாதில் திகழ்ந்தோளிரும்
எழின்மேனித் திருவே வேலை
அங்கண்உல கிருள்துரக்கும் அலர்கதிராய்
வெண்மதியாய் அமரர்க் கூட்டும்
போங்கழலாய் உலகளிக்கும் பூங்கோடியே
நேடுங்கானில் போருப்பில் மண்ணில்
எங்குளைநீ அவணன்றே மல்லல்வளம்
சிறந்தோங்கி இருப்ப தம்மா.

(ப - ரை.) செங்கமலப் பொலம் தாதில்—செந்தாமரை மலரின் பொன் மயமாகிய மகரந்தத்தைப் போல, திகழ்ந்து ஒளிரும் - சிறந்து விளங்குகிற, எழில்மேனி - அழகிய உடலினையுடைய, திருவே-திருமகளே !, வேலை - கடலால் சூழப்பட்ட, அம் கண் - அழகிய இடத்தையுடைய, உலகு இருள் துரக்கும்-உலகத்திலுள்ள இருளை ஒட்டுகிற, அலர் கதிராய்-விரிந்த ஒளியை உடைய கதிரவனாய், வெள் மதிஆய் - வெள்ளிய திங்களாய், அமரர்க்கு ஊட்டும்—தேவர்கட்கு இன்பத்தைக் கொடுக்கும், பொங்கு அழலாய்-மிகுந்த நெருப்பாய், உலகு அளிக்கும்-உலகத்தைக் காக்கின்ற, பூங்கொடியே-பூங்கொடியைப் போன்ற

வளே!, நெடுங்கானில் - பெருங்காட்டில், பொருப்பில் - மலையில், மண்ணில்-நிலத்தில், நீ எங்கு உளை - நீ எவ் விடத்தி லிருக்கிருயோ, அவண் அன்ரே - அவ்விடத்தில் அல்லவோ, மல்லல் வளம் சிறந்து ஓங்கி இருப்பது - மிகுந்த செல்வமானது சிறப்படைந்து உயர்வாகத் திகழ் கின்றது. அம்மா: உரையசை இடைச் சொல்.

(போ - ரை.) செந்தாமரை மலரின் பொன் மய மாகிய மகரந்தத்தைப் போலச் சிறந்து விளங்குகிற அழகிய உடலினையுடைய திருமகளே ! கடலால் சூழப்பட்ட அழ கிய இடத்தையுடைய உலகத்திலுள்ள இருளை ஒட்டுகிற விரிந்த ஒளியை உடைய கதிரவனும் வெள்ளிய திங்களாய், தேவர்கட்கு இன்பத்தைக் கொடுக்கும் மிகுந்த நெருப்பாய், உலகத்தைக் காக்கின்ற பூங்கொடியைப் போன்றவளே ! பெருங் காட்டில் மலையில் நிலத்தில் நீ எவ்விடத்தி லிருக்கி ருயோ அவ்விடத்தில் அல்லவோ புகழ்பெற்ற மிகுந்த செல்வமானது சிறப்படைந்து உயர்வாகத் திகழ்கின்றது.

(க - து.) திருமகளே! நீ எவ்விடத்தி லிருக்கிருயோ அவ்விடத்தி லல்லவோ செல்வம் சிறப்படைந்து மிகுதியாக விளங்குகின்றது!

(வி - ரை.) தீயானது அமரர்க்கு ஊட்டுதல்-வேள்வி யில் அவி யுணவை உண்பித்தல். உலகு அளிக்கும் - இட வாகு பெயராய் உலகத்திலுள்ள உயிர்த் தொகைகளைக் குறித்தது மல்லல் வளம்-மிகப் பெருஞ் செல்வம். (௬)

இலக்குமி தோத்திரப் பலன்

என்றுதமிழ்க் குறுமுனிவன் பன்னியோடும்
இருநிலத்தில் இறைஞ்ச லோடும்
நன்றுனது துதிமகிழ்ந்தேம் நான்மறையோய்
இத்துதியை நவின்றோர் யாரும்
பொன்றலரும் பெரும்போகம் நுகர்ந்திடுவர்
ஈங்கிதனைப் பொறித்த ஏடு
மன்றல்மனை அகத்திருப்பின் வறுமைதரு
தவ்வைஅவண் மருவல் செய்யாள்.

(ப - ரை.) என்று - என்று கூறி, தமிழ் குறு முனிவன் - தமிழை யுணர்ந்த அகத்திய முனிவர், பன்னியொடும் - தம்முடைய மனைவியோடும், இருநிலத்தில் இறைஞ்சலோடும்-பெரிய நிலகத்தில் வீழ்ந்து வணங்குதலும், (திருமகள் அகத்திய முனிவரைப் பார்த்து) நான் மறையோய் - நான்கு மறைகளிலும் வல்லவனே!, நன்று - நல்லது, உனது துதி மகிழ்ந்தேம்-உன்னுடைய புகழ்ப் பாடலுக்கு உள்ளங் களித்தேம், இத் துதியைநவின்றோர் யாரும்-இப் புகழ்ப் பாக்களைப் பாடியவர்கள் எல்லோரும், பொன்றல் அரும்-கெடாத, பெரும்போகம் நுகர்ந்திடுவர்-பெரிய போகங்களை நுகர்வார்கள், ஈங்கு இதனை பொறித்த ஏடு - இப் புகழ்ப் பாடல்களை எழுதப்பெற்ற இவ் வேடானது, மன்றல் மனை அகத்து இருப்பின்-வளம் பொருந்திய வீட்டினிடத்தி லிருந்தால், வறுமைதரும் தவ்வை - வறுமையைக் கொடுக்கின்ற மூதேவியானவள், அவண் மருவல் செய்யாள் - அவ்விடத்தில் பொருந்துதலைச் செய்ய மாட்டாள்.

(போ-ரை.) என்று கூறித் தமிழை யுணர்ந்த அகத்திய முனிவர் தம்முடைய மனைவியோடு நிலத்தில் வீழ்ந்து வணங்குதலும் (திருமகள் அகத்திய முனிவரைப் பார்த்து) நான்மறைகளிலும் வல்லவனே! நல்லது; உன்னுடைய புகழ்ப் பாடலுக்கு உள்ளங் களித்தேம்; இப்புகழ்ப் பாடல்களைப் பாடியவர்கள் எல்லோரும் கெடாத பெரிய போகங்களை நுகர்வார்கள். இப் புகழ்ப் பாடல்களை எழுதப்பெற்ற இவ் வேடானது வளம் போருந்திய வீட்டினிடத்திலிருந்தால் வறுமையைக் கோடுக்கின்ற மூதேவியானவள் அவ்விடத்தில் போருந்துதலைச் செய்ய மாட்டாள்.

(க – து.) அகத்திய முனிவனே! இப்பாடல்களைப் பாடியவர்கள் சிறந்த இன்பங்களை நுகர்ந்திடுவார்கள்.

(வி - ரை.) பன்னி-மனைவி, பத்நி என்னும் வடசொல் திரிபு என்பர். பொன்றலரு என்பதில் அரு இன்மைப் பொருளைத்தந்து நின்றது, அருங்கேடன் என்புழிப் போல. திருமகள் உள்ள இடத்தில் அவளுக்கு மூத்தவளாகிய மூதேவி சேரமாட்டாள். அதுபோலவே அவள் புகழ் விளங்கும் இப் பாடல்கள் உள்ள இடத்திலும் மூதேவி சேர்தற்கு அஞ்சிச் சேரமாட்டாள் என்க. (எ)

[இப் பாடல்கள் அதிவீர ராமபாண்டியரால் மொழி பெயர்க்கப்பட்ட காசி கண்டத்தில் அவரால் மொழி பெயர்த்துப் பாடப் பெற்றன.]

உ

சிவமயம்



அ. மக்கட் செல்வ மாலை

மூலமும் உரையும்

[மக்கட் பேறற்றவனுகிய விசுவாநரன் என்பவன் மக்கட் பேற்றை விரும்பிச் சிவபெருமான்மீது இப் பாடல்களைப் பாடினுன். சிவபெருமான் விசுவாநரனுக்குக் காட்சியளித்து மக்கட் பேற்றை வழங்கி யருளியதோடு இப் பாடல்கள் எட்டையும் பாடுவோர் மக்கட் பேற்றை அடைவார்கள் என்று அருள்செய்தார். மக்கட்பேற்றை விரும்புவோர் இப் பாடல்களை அன்பினெடு பாடி இறைவனைப் போற்றக் கடவர்.]

அருவுருவாய் ஏகமாய்க் குணங்குறிகள்
எவையும்இன்றி அசல மாகி
நிருமலமாய் எவ்வுயிர்க்கும் உயிராகிச்
சுடரோளியாய் நித்த மாகிக்
கருதரிய ஆனந்தக் கடலாகி
மெய்ஞ்ஞானக் கனியாய் நின்ற
வரதநின தடிக்கமலம் மனத்திருத்திக்
கொழுமலர்தூய் வழுத்தல் செய்வாம்.

(ப-ரை.) அருவு உருவு ஆய்–அருவமாகியும் உருவ மாகியும், ஏகம் ஆய் - ஒன்றாகியும், குணம் குறிகள் எவை யும் இன்றி - குணங்கள் குறிகள் முதலான ஒன்றுமில்லா மல், அசலம் ஆகி - அசைவற்றதாகியும், நிருமலம் ஆய் – தூய்மையுடையதாகியும், எவ்வுயிர்க்கும் உயிர் ஆகி-எல்லா உயிர்கட்கும் உயிராகியும், சுடர் ஒளியாய்-சுடரினது ஒளி யாகியும், நித்தம் ஆகி - எக்காலத்தினும் உள்ளதாகியும், கருத அரிய ஆனந்தக் கடல் ஆகி – எண்ணுதற்கரிய இன் இன்பக் கடலாகியும், மெய்ஞானக் கனியாய் நின்ற - உண்மை ஞானப் பழமாகவும் விளங்குகின்ற, வரத - மேலான கடவுளே!, நினது அடிக்கமலம் மனத்து இருத்தி – தேவரீருடைய திருவடித் தாமரை மலர்களை உள்ளத்திலே அமைத்து, கொழு மலர் தூய் - கொழுவிய மலர்களை இறைத்து, வழுத்தல் செய்வாம் - வணங்குதல் செய்கின்றோம்.

(க - து.) அருவத்தோடும் உருவத்தோடும் விளங்கு கிற மேலான கடவுளே! உன்னுடைய திருவடித் தாமரை மலர்களை வணங்குகின்றோம்.

(வி – ரை.) கடவுள் உருவமற்றவராக இருப்பினும் அன்பர்கட்கு அருள் செய்தற் பொருட்டு உருவத்தையும்

மேற்கொள்ளுகின்றாராதலின் 'அருவுருவாய்' என்றார். "அருவனாயினும் அன்பர்க்குருவனாய் வருவனென்பது மாமறை சொல்லுமே" என்பதும் ஈண்டு எண்ணத்தக்கது. சலித்தற்றன்மை யின்மையின் 'அசலமாகி' என்றார். உயிர்த்தொகைகள் விரும்பும் எல்லாவற்றையும் அருளுந் தன்மை இறைவனுக் குண்மையின் 'வரத' என்றார். (க)

இலகொளிய கதிரோன்று யிரம்புனல்பெய்
குடங்கள்தோறும் இயைந்து நாளும்
அலகில்பல உருவாகித் தோன்றுதல்போல்
சராசரங்கள் அனைத்தும் ஆகி
உலகமுழு வதற்குமோரு தனிக்கடவுள்
ஆகிஉல களந்த மாலும்
மலரயனும் அறியாது நின்றநின்றன்
சேவடிகள் வணங்கு வாமே.

(ப - ரை.) இலகு ஒளிய கதிர் ஒன்று-மிக விளங்குகின்ற ஒளியினையுடைய கதிரவன் ஒருவனே, ஆயிரம் புனல் பெய் குடங்கள் தொறும்-நீர் நிரம்பிய ஆயிரக் கணக்கான குடங்களினும், இயைந்து-பொருந்தி, நாளும்-நாள் தோறும், அலகு இல் பல உருவு ஆகி-அளவற்ற பல வடிவங்களை யுடையனாகி, தோன்றுதல்போல் - காணப்படுகின்றதைப் போல, சர அசரங்கள் அனைத்தும் ஆகி-அசையும் பொருள்கள் அசையாப் பொருள்கள் எல்லாமாகி, உலகம் முழுவதற்கும் ஒரு தனிக் கடவுள் ஆகி-எல்லா வுலகங்கட்கும் ஒப்பற்ற முழுமுதற் கடவுளாகி, உலகு அளந்த மாலும்-உலகத்தை அளந்தருளிய திருமாலும், மலர் அயனும்-நான்முகனும், அறியாது நின்ற-காண்டற்கு இயையாமல் பொருந்தி நின்ற, நின்றன் சேவடிகள் வணங்கு

வாம்-தேவரீருடைய சிவந்த திருவடிகளைப் போற்றுகின்றோம்.

(க - து.) உலகத்திலுள்ள எல்லாப் பொருள்களாகி விளங்கி நின்றும் ஒரே கடவுளாக அமைந்த உன்னுடைய திருவடிகளை வணங்குகின்றோம்.

(வி - ரை.) கதிரவன் ஒருவனேயாயினும் ஆயிரக் கணக்கான குடங்களின் நீரிலும் தனித்தனியே காணப் படுதல் போல இறைவனும் ஒருவனேயாயினும் எல்லா உயிர்த் தொகைகளினிடத்தும் அமைந்து நின்று விளங்குகின்றனன் என்க. ஒரு காலத்தில் நான்முகனுந் திருமாலும் போரிட்டு அடியையும் முடியையுந் தேட முயன்றும் அறியப்படாதவாறு நின்றபடியால் "உலகளந்த மாலு மலரயனும் அறியாது நின்ற" என்றார். (உ)

கானலிடைத் தெண்ணீரும் கயிற்றினில்வாள்
அரவும்அலை கடலில் பட்ட
கூன்முதுகிப் பியில்தோன்றும் வெள்ளியும்அம்
முதலுண்மை குறிக்கில் தீரும்
ஆனவைபோல் நினையறியில் தோன்றுசகம்
அனைத்தும்நில்லா தழியு மாற்றால்
தேனவிழ்பூங் கடுக்கையணி செல்வநின
தறைகழற்றாள் சென்னி சேர்ப்பாம்.

(ப - ரை.) கானல் இடை தெள் நீரும்-கானலிடத்திலே தெளிந்த நீரும், கயிற்றினில் வாள் அரவும்-கயிற்றினிடத்திலே ஒளி தங்கிய பாம்பும், அலை கடலில் பட்ட - அலைகளையுடைய கடலினிடத்தே தோன்றிய, கூன் முதுகு இப்பியில் தோன்றும் வெள்ளியும் - வளைந்த முதுகினையுடைய கிளிஞ்சலோட்டில் காணப்படுகிற வெள்ளியையும் போல், அம் முதல் உண்மை குறிக்கில் தீரும்-அதன் முதற்

பொருளை ஆராய்ந்தறியு மிடத்தில் ஐயம் நீங்கும், ஆனவை போல்-ஆகிய இவைகளைப் போல, நினை அறியில் - நும்முடைய மெய்ம்மையான இயல்புகளைத் தெரிந்து கொண்டால், தோன்று சகம் அனைத்தும் நில்லாது அழியும் ஆற்றால்-காணப்படுகின்ற உலகம் முழுவதும் இல்லாது அழியுந் தன்மையால், தேன் அவிழ் பூம் கடுக்கை அணி செல்வ-தேனோடு மலர்ந்த பொலிவு தங்கிய கொன்றை மாலையை அணிந்தருளும் சிவபெருமானே!, நினது அறை கழல் தாள் சென்னி சேர்ப்பாம்-தேவரீரது ஒலிக்கின்ற வீரக் கழலை யணிந்த திருவடிகளை எம்முடைய தலையின்மேல் அணிந்து கொள்ளுவாம்.

(க - து.) இறைவனே! உம்முடைய மெய்ம்மைத் தன்மையை அறிந்து கொண்டால் உலக மயக்கம் நீங்கும். ஆகவே நும்முடைய அடிகளைத் தலைமேற் கொண்டு வணங்குகிறோம்.

(வி - ரை.) கானல்-கடுமையான வெய்யிலில் தோன்றும் ஒருவகையான ஒளிப் பிழம்பு. இது பார்வைக்குத் தண்ணீரைப்போல் காணப்படும். மாக்களே யன்றி மக்களும் இக் கானல் தோற்றத்தின் உண்மை யுணராது சென்று அலைந்து வருந்துதல் உண்டு. அறைகழல்-ஒலிக்கின்ற வீரக்கழல்; வினைத் தொகை. (ந)

நீரினிடைத் தண்மையுஞ்சேந் நெருப்பினிடை
வெம்மையும்வெண் ணிலவுத் திங்கள்
சேர்தருதட் பமும்இலகு செஞ்ஞாயிற்
றழற்சியுந்தீம் பாலில் நெய்யும்
ஈர்ம்மலரின் நறுமணமும் என்னலாய்
உலகமெலாம் இருக்கும் எந்தை
வார்கழற்சே வடிக்கமலம் நறவொழுகு
மலர்தூவி வணங்கல் செய்வாம்.

(ப - ரை.) நீரினிடைத் தண்மையும்-தண்ணீரினிடத்திலே குளிர்ச்சியும், செந் நெருப்பின் இடை வெம்மையும்—சிவந்த தீயினிடத்திலே வெப்பமும், வெண் நிலவு திங்கள் சேர்தரு தட்பமும்-வெள்ளிய ஒளியையுடைய திங்களிடத்தில் குளிர்ச்சியும், இலகு செம் ஞாயிற்று அழற்சியும் - விளங்குகின்ற சிவந்த கதிரவனிடத்தில் சூடும், தீம் பாலில் நெய்யும்-இனிமை பொருந்திய பாலினிடத்தில் நெய்யும், ஈர் மலரின் நறு மணமும் என்னல் ஆய்-குளிர்ச்சி பொருந்திய மலர்களில் இனிய மணமும் என்று சொல்லப் பெறுவதாய், உலகம் எலாம் இருக்கும் எந்தை - உலகம் முழுவதும் நிறைந்து விளங்குகின்ற எந்தையாகிய சிவபெருமானே! (தேவரீருடைய) வார்கழல் சே அடி கமலம் - நெடிய வீரக் கழலையணிந்த சிவந்த திருவடித் தாமரை மலர்களை, நறவு ஒழுகு மலர் தூவி - தேன் ஒழுகுகின்ற மலர்களை யிறைத்து, வணங்கல் செய்வாம் - போற்றுதலைச் செய்கின்றோம்.

(க - து.) எல்லாமாக விளங்குஞ் சிவபெருமானே! தேவரீருடைய அடிமலர்களை மலர் தூவி வணங்குகின்றோம்.

(வி - ரை.) நீரில் குளிர்ச்சியும், தீயில் வெம்மையும், திங்களில் தண்மையும் ஞாயிற்றில் சூடும், பாலில் நெய்யும், மலரில் மணமும் எவ்வாறு பிரித்தறிய முடியாதவாறு அமைந்துள்ளனவோ அவ்வாறே இறைவனும் எல்லாப் பொருள்களினும் பிரித்தறிய முடியாதவாறு நிறைந்து விளங்குகின்றார் என்க. எம் தந்தை - எந்தை யென்றாயது, செம்மை அடி - சேவடி, "ஈறுபோதல் இடையுகரம் இய்யாதல், ஆதி நீடல்" என்னும் சூத்திர விதிப்படி இவ்வாறாயது. (ச)

நோக்கின்றிக் கண்டுநனி கையின்றிக்
கொடுத்துமறை நுவல்வ தாய
நாக்கின்றி அறுசுவையும் இனிதுணர்ந்தும்
காலின்றி நடத்தல் செய்தும்
மூக்கின்றி மணங்கவர்ந்தும் செவியின்றிக்
கேட்டுமறை முதல்வ ரியார்க்கும்
வாக்கன்றி மனத்தினுக்கும் எட்டாநின்
தாமரைத்தாள் வணங்கல் செய்வாம்.

(ப – ரை.) நோக்கின்றி நனி கண்டும்-கண்களில்லாமலே எல்லாவற்றையும் நன்ருகப் பார்த்தும், கை இன்றிக் கொடுத்தும் - கைகளில்லாமலே (உயிர்த் தொகைகள் விரும்பியவைகளைத்) தந்தும், மறை நுவல்வது ஆய–மறைகளைக் கூறுவதாகிய, நாக்கு இன்றி-நாவில்லாமலே, அறு சுவையும் இனிது உணர்ந்தும் - ஆறுவகைப்பட்ட சுவைகளையும் நன்ருக அறிந்தும், கால் இன்றி நடத்தல் செய்தும்-கால்களில்லாமலே நடந்தும், மூக்கு இன்றி மணம் கவர்ந்தும்-மூக்கில்லாமலே மணத்தை இனிது நுகர்ந்தும், செவி இன்றிக் கேட்டும் - காதுகளில்லாமலே கேட்டலைச் செய்தும், மறை முதல்வர் யார்க்கும்-அந்தணர் எவர்க்கும், வாக்கு அன்றி – கூறுதலுக்கே யல்லாமல், மனத்தினுக்கும் எட்டா – உள்ளத்திலே எண்ணுவதற்கும் எட்டாத, நின் தாமரை தாள் வணங்கல் செய்வாம் - நின்னுடைய தாமரை மலரைப் போன்ற திருவடிகளைப் பணிதல் செய்கின்ருேம்

(க - து.) கண்களில்லாமலே பார்த்தல் முதலியவைகளைச் செய்கின்ற நின்னுடைய திருவடித் தாமரை மலர்களை வணங்குகின்ருேம்.

(வி-ரை.) நோக்கு - கண், பொருள்களை நோக்கு கின்றபடியினால் கண்களுக்கு ஏற்பட்ட காரணப் பெயர். இறைவன் உருவமற்றவனாக விருந்தே எல்லாத் தொழில் களையும் புரிகின்றானாதலின் இவ்வாறு கூறினார். அறுசுவை- உவர்ப்பு, கார்ப்பு, கைப்பு, தித்திப்பு, துவர்ப்பு, புளிப்பு என்பன. இவைகளை வடநூலார் சட் ரசம் என்பர். மறை முதல்வர்-மறைகளை ஓதுந் தொழிலையே முதன்மை யாகக் கொண்டவர்கள். (ரு)

வண்டுழாய்ப் பசுந்தேரியல் மாயவனும்
நான்முகனும் வானு ளோரும்
அண்டர்நா யகனுமறை முனிவர்களும்
அறிவரிதாய் அன்பு முற்றும்
தோண்டரா னவர்க்கேளிதாய்த் தோன்றுதனிச்
சுடர்க்கோழுந்தே சுருதி யென்னும்
பண்டைநூன் முடிவில்உறை பராபரநின்
அடிக்கமலம் பணிதல் செய்வாம்.

(ப - ரை.) வண் துழாய் பசுந் தெரியல் மாயவனும்- வளப்பம் பொருந்திய பசிய துளசி மாலையை அணிந்த திரு மாலும், நான்முகனும்-நான்முகனும், வான் உளோரும் - விண்ணுலகில் உள்ள தேவர்களும், அண்டர் நாயகனும் - அத்தேவர்கட்குத் தலைவனாகிய இந்திரனும், மறை முனிவர் களும் – மறைகளை யோதி யுணர்ந்த முனிவர்களும், அறிவு அரிதாய் - (ஆகிய இவர்களெல்லாம்) அறிந்துணர்தற்கு அரிதாகி, அன்பு முற்றும் - அன்பு செய்யுந் திறத்திலே முதிர்ந்த, தொண்டர் ஆனவர்க்கு எளிதாய் - அடியாரயி னார்க்கு எளிமையாக, தோன்று தனிச்சுடரே - காணப் பெறுகின்ற ஒப்பற்ற சுடர்க் கொழுந்தாகிய சிவபெரு மானே!, சுருதி என்னும் பண்டை நூல் முடிவில் உறை

பராபர-மறையென்று சொல்லப் பெறுகிற பழைமையான நூலின் முடிவிலே உறைகின்ற மேலான பரம்பொருளே !, நின் அடி கமலம் பணிதல் செய்வாம்-நின்னுடைய திருவடித் தாமரை மலர்களை வணங்குதல் செய்கின்றோம்.

(க - து.) திருமால் நான்முகன் முதலிய தேவர்கட்கு அருமையாகவும் அடியார்கட்கு எளிமையாகவும் விளங்குகின்ற பரம்பொருளே ! நின் திருவடித் தாமரை மலர்களை வணங்குகின்றோம்.

(வி - ரை.) திருமால் முதலிய பெருந் தேவர்களாயினும் அவர்கட்கு அருமையாக விளங்கும் சிவபெருமான் அன்பு முதிர்ந்த அடியவர்கட்கு மிக எளிமையானவராக விளங்குகின்றார். "யாவராயினு மன்பரானன்றி யறியொணு மலர்ச் சோதியான்" என்பதும் ஈண்டு எண்ணத் தக்கது. சுருதி யென்னும் பண்டை நூல் முடிவு-வேதாந்தம். பராபரன் - மேலான பொருள்களுக் கெல்லாம் மேலான பொருளாக விளங்குபவன். (கூ)

குலங்குடிகோத் திரமின்றிப் பிறப்பிறப்புப்
பெயர்வண்ணம் குணமும் இன்றி
இலங்கொளிய வெறுவெளியாய் இருந்துநெடு
நீருலகம் யாவும் வேட்ட
நலங்கொள்பொருள் அனைத்தினையும் நல்குதலால்
நளிர்மதிச்செஞ் சடையோய் மற்றுன்
பொலன்கழல்தா மரைமலரேம் புன்தலையின்
மிசைசூட்டிப் போற்று வேமால்.

(ப - ரை.) குலம் குடி கோத்திரம் இன்றி - குலம், குலப்பிறப்பு வழிமுறை ஆகியவைகளில்லாமல், பிறப்பு இறப்பு பெயர் வண்ணங் குணமும் இன்றி - பிறத்தலும்

இறத்தலும் பெயரும் நிறமுந் தன்மையும் இல்லாமல், இலங்கு ஒளிய வெறு வெளியாய் இருந்து - விளங்குகின்ற ஒளியை உடைய வெறு வெளியாக விருந்து, நெடு நீர் உலகம் யாவும் வேட்ட-நீண்ட நீரால் சூழப்பட்ட உலகத்தி லுள்ள உயிர்த் தொகைகளெல்லாம் விரும்பிய, நலம் கொள் பொருள் அனைத்தினையும் நல்குதலால் - நன்மையைக் கொண்ட பொருள்கள் எல்லாவற்றையும் கொடுத்தலால், நளிர் மதி செம் சடையோய் - குளிர்ந்த திங்களை யணிந்த சிவந்த சடைமுடியை உடைய் சிவபெருமானே !, உன் பொலன் கழல் தாமரை மலர் - உன்னுடைய அழகிய வீரக்கழலை யணிந்த திருவடித் தாமரை மலர்களை, எம்புன் தலையின்மிசை சூட்டிப் போற்றுவேம் - எம்முடைய பெருமையற்ற தலையின் மீதே அணிந்து வணங்குகின்றேம்.

(க - து.) சிவபெருமானே உன்னுடைய திருவடித் தாமரை மலர்களை எம்முடைய தலைமீது அணிந்து வணங்கு கின்றேம்.

(வி - ரை.) உலகம் இடவாகு பெயராய் உலகத்தி லுள்ள உயிர்த் தொகைகளை உணர்த்தி நின்றது. பொன் கழல் எனற்பாலது பொலன் கழல் என்றாகியது. "பொன்னென் கிளவி ஈறு கெட முன்னர்த் தோன்றும் லகார மகாரம்" என்பது சூத்திரம். (எ)

முதியவன்நீ காளையும்நீ முதுக்குறைவில்
பாலனுநீ மூளரி வாட்டும்
மதிபுரையும் வாள்முகத்து மலைமடந்தை
கோழுநனும்நீ வானோர் போற்றும்
கதழெரிகால் மூவிலைவேல் கங்காள
நாதனும்நீ ஆத லால்உன்
போதியவிழ்தா மரையனைய பூங்கழல்கள்
எஞ்ஞான்றும் போற்றல் செய்வாம்.

(ப - ரை.) முதியவன்நீ காளையும்நீ—முதுமைப் பருவம் உடையவனும் நீயே காளைப் பருவம் உடையவனும் நீயே, முதுக்குறைவு இல் பாலனும்நீ - பேரறிவில்லாத குழந்தைப் பருவம் உடையவரும் தேவரீரே, முளரி வாட்டும்-தாமரை மலரை வாடச் செய்கின்ற, மதிபுரையும் - திங்களை யொத்து விளங்கும், வாள்முகத்து - ஒளிதங்கிய முகத்தினையுடைய, மலைமடந்தை கொழுநனும்நீ - இமைய மலையிற் பிறந்த உமையவளுடைய கணவராக விளங்குபவரும் தேவரீரே, வானோர் போற்றும் - தேவர்கள் பாராட்டும், கதழ் எரி கால்- விரைவோடு கூடிய தீயைக் கக்குகிற, மூ இலைவேல் கங்காள நாதனும் நீ-முத்தலைச் சூலத்தையும் என்பு மாலையையும் அணிந்த தலைவரும் தேவரீரே; ஆதலால்-ஆகையினால், நின்-தேவரீருடைய, பொதி அவிழ் - முறுக்கு அவிழ்ந்த, தாமரை அனைய பூங்கழல்கள்-தாமரை மலரை யொத்த அழகிய திருவடிகளை, எஞ்ஞான்றும் போற்றல் செய்வாம்-எக் காலத்தினும் வணங்குதல் செய்கின்றோம்.

(க - து.) எல்லாத் தன்மையோடும் விளங்குவது தேவரீரே யாகையால் தேவரீருடைய திருவடித் தாமரை மலர்களை வணங்குகின்றோம்.

(வி - ரை.) எல்லாமாக விளங்குதல் இறைவன் ஒருவனே யாகையால் இவ்வாறு கூறினர். கொழுநன் - தாவிப் படர்தற் கிடனாகிய கொழு கொம்பைப் போல் விளங்குபவன். மூவிலை வேல் - மூன்று இலைகளையுடைய வேல், அஃதாவது சூலம். வேல் ஓர் இலைமட்டும் அமையப் பெற்றது. கங்காளம் - தசை கழிந்த முழுவெலும்பு. இவை ஊழிக்காலத்தில் அழிந்தொழியும் திருமால் நான்முகர்களுடையவை.

“நங்காயி தென்னதவம் நரம்போ டெலும்பணிந்து
கங்காளந் தோள்மேலே காதலித்தான் காணேடி
கங்காள மாமாகேள் காலாந் தரத்திருவர்
தங்காலஞ் செய்யத் தரித்தனன்காண் சாழலோ”

என்பது திருவாசகம். (அ)

மக்கட் செல்வ மாலைப் பலன்

என்றினைய துதிகூறி இறைஞ்சுதலும்
ஆங்கவனை எழுக வென்று
நன்றுதுதி மகிழ்ந்தனன்நீ விழைந்தனநல்
குவன்விரைவில் நவிறி என்ன
மன்றவுயிர்க் குயிராய வரதநினைக்
கறிவரிதாய் மற்றொன் றுண்டோ ?
புன்றொழிலேன் தனைக்கேட்ட தென்னையென
மறைமுதல்வன் புகல்வன் மாதோ.

(ப - ரை.) என்று இனைய துதி கூறி இறைஞ்சுதலும்- என்று இத்தகைய புகழ்ப் பாடலைச் சொல்லி வணங்குதலும், ஆங்கு அவனை எழுக என்று—அப்பொழுது அவ்விசுவாநரனை எழுக என்று அருள்செய்து, நன்றுதுதி மகிழ்ந்தனன் - நல்லது; உன்னுடைய புகழ்ப் பாடலைக் கேட்டு மனம் மகிழ்ந்தேன், நீ விழைந்தன நல்குவன் - நீ விரும்பியவைகளைக் கொடுப்பேன், விரைவில் நவிறி என்ன- விரைவிலே கூறுவாயாக என்று சொல்ல, மன்ற - நிலை பெற்ற, உயிர்க்கு உயிராய வரத - உயிர்கட்கு உயிராகிய மேலான கடவுளே !, நினக்கு அறிவு அரிதாய் ஒன்று உண்டோ? - தேவரீருடைய திருவுள்ளம் உணர்தற்கு அரிதாக ஒரு பொருள் இருக்கின்றதோ?, புன்தொழிலேன்

தனைக் கேட்டது என்னை என - சிறு தொழிலை யுடையவனாகிய என்னைக் கேட்டது என்ன காரணம் என்று விசுவாநரன் சொல்ல, மறை முதல்வன் புகல்வன் - மறைகளுக்கு முதல்வராகிய சிவபெருமான் கூறுகின்றார்.

(க-து.) விசுவாநரனைப் பார்த்துச் சிவபெருமான் கூறுகின்றார்.

(வி - ரை.) விசுவாநரனுடைய எண்ணம் மக்கட் பேற்றை நாடியது. உயிர்த் தொகைகளின் எண்ணங்களை யெல்லாம் உணர்ந்தருளும் சிவபெருமான் விசுவாநரனுடைய இவ்வெண்ணத்தையும் உணர்வாராகலின், "அறிவரிதாய் மற்றொன்றுண்டோ?" என்று கூறினன். உயிர்த் தொகைகளெல்லாம் சிறு தொழில்களை யுடையவைகளாதலின் "புன் தொழிலேன்" என்றான்.

மின்போலும் நடங்கிடைநின் மனைக் கிழத்தி
அவள்வயிற்றில் விண்ணோர் போற்ற
என்போலும் ஒருபுதல்வன் கிரகபதி
எனும்பெயரில் இயைவன் அன்பர்
உன்போல்யார் இத்துதிப்போர் உவகைபுரி
அட்டகமீ துலகில் நாளும்
அன்போடு துதித்திறைஞ்சில் வந்தியரும்
அருமகப்பே றடைவர் மாதோ.

(ப-ரை.) மின்போலும் நடங்கு இடை-மின்னலைப் போல் அசைகின்ற இடையினையுடைய, நின் மனைக்கிழத்தி அவள் வயிற்றின் - உன்னுடைய மனைவியின் வயிற்றில், விண்ணோர் போற்ற - தேவர்களெல்லாரும் போற்றுமாறு, என்போலும் ஒரு புதல்வன் - என்னைப் போன்ற ஒரு மைந்தன், கிரகபதி எனும் பெயரில் இயைவன் - கிரகபதி என்

னும் பெயரோடு தோன்றுவான், உன்போல் அன்பர் - உன்னைப்போன்ற அன்பர்களில், யார் - எவர் இருக்கின்றார்கள் ?, இத் துதி - இப் புகழ்ப் பாடல்களாகிய, பேர் உவகை புரி — மிகுந்த இன்பத்தைச் செய்கின்ற, அட்டகம் - எட்டுப் பாடல்களையும், உலகில் - உலகத்தில், நாளும் - நாள் தோறும், அன்போடு துதித்து இறைஞ்சில்-உள்ளன்போடு பாடி வணங்கினால், வந்தியரும் - மலடாக இருப்பவர்களும், அரு மகப்பேறு அடைவர் - சிறந்த மக்கட் பேற்றினை அடைவார்கள். மாது, ஓ : அசைநிலைகள்.

(க - து.) உன் மனைவியிடத்தில் ஒரு மகன் தோன்றுவான். இவ் வெட்டுப் பாடல்களையும் பாடி வணங்கும் மலடிகளும் நன்மகப் பேறடைவர்.

(வி - ரை.) கிரகபதி எனும் பெயருடையவனாகப் பிறப்பான் என்றார். அட்டகம் - எட்டுப் பாடல்கள். மக்கட் பேறற்றவர்கட்கு மக்கட் பேறுண்டாகுமாறு இறைவனை வேண்டி அன்பர்களும் இப்பாடல்களைப் பாடி இறைவனைப் போற்றலாம்.

[இப் பாடல்கள் அதிவீர ராமபாண்டியரால் மொழி பெயர்க்கப்பட்ட காசி கண்டத்தில் அவரால் மொழி பெயர்த்துப் பாடப் பெற்றன.]

உ

சிவமயம்



௧. மழை மாலை

மூலமும் உரையும்

[சிருங்ககிரி என்னும் ஊரில் உலக குருவாக எழுந்தருளி யிருந்த சச்சிதாநந்த சிவாபி நவ நரசிம்ம பாரதி சுவாமிகள் என்னும் பெரியார் செட்டிமார் நாட்டுக்கு எழுந்தருளிய பொழுது முருகன் எழுந்தருளியுள்ள குன்றக்குடி என்னும் ஊருக்குச் சென்றார். அப்பொழுது மழை யில்லாமல் மிகுந்த வறட்சி யேற்பட்டிருந்தது. சில அன்பர்கள் மழை யின்மையைச் சுவாமிகளிடம் இயம்பியதோடு "மழை பெய்யுமாறு தாங்கள் முருகப் பெருமானை வேண்டிக் கொள்ளுங்கள்" என்று கேட்டுக் கொண்டனர். சுவாமிகள் முருகன் மீது விருட்டி சட்கம் என்னும் பெயரோடு ஆறு பாடல்களை வடமொழியிற் பாடினார். அவ்வளவில் நல்ல மழை பெய்தது. அவ் வடமொழிப் பாடல்கள் ஆறையும் உயர்திரு வீர சுப்பைய சுவாமிகள் என்னும்

பெரியார் தமிழிலே மொழி பெயர்த்துப் பாடி யருளினார்கள். மழை வேண்டிய சமயத்தில் மெய்யன்போடு இப் பாடல்களைப் பாடி முருகக் கடவுளை வேண்டிக்கொண்டால் மழை பெய்கிறது. இது நடைமுறையிற் கண்டறிந்த உண்மை.

மகிசல முதல எட்டையும் வடிவாய்
மகிழ்ந்தருள் குரவனே ! புரத்தைத்
தகியரன் குமர ! நினைச்சரண் புகுந்த
தவத்தினர் பவத்தின்வேர் அறுப்போய் !
சகிதரற் கரிய அடைந்துள தாபம்
தணந்திட மழைகடி தருள்வாய்
குகவிரு மூன்று முகமுடைப் பரம !
குறமகட் கினியநா யகனே !

(ப - ரை.) குக – குகனே !, இரு மூன்று முகம் உடைப் பரம - ஆறு திருமுகங்களை யுடைய மேலான வனே!, 'குறமகட்கு இனிய நாயகனே -குறப் பெண்ணாகிய வள்ளி நாயகிக்கு இன்பத்தைச் செய்யும் தலைவனே !' மகி சலம் முதல எட்டையும்-நிலம், நீர், தீ, காற்று முதலாகிய எட்டையும், வடிவாய் மகிழ்ந்து அருள் குரவனே - வடிவ மாக மகிழ்ச்சியோடு கொண்டருளும் ஆசிரியனே !, புரத்தை தகி அரன் குமர - முப்புரத்தையும் எரித்தருளிய சிவபெருமானுடைய புதல்வனே!, நினை சரண் அடைந்த - உன்னிடத்திலே அடைக்கலமாகப் புகுந்த, தவத்தினர் - தவஞ் செய்வோர்களது, பவத்தின் வேர் அறுப்போய் - தீமையின் வேரைக் கெடுப்பவனே !, சகிதரற்கு அரிய - பொறுத்தற்கு அரியதாய், அடைந்துள தாபம் தணிந்திட- நேர்ந்திருக்கின்ற வருத்தமானது நீங்க, மழை கடிது

அருள்வாய்—மழை விரைவிலே பெய்யுமாறு செய்தருள்வாயாக !

(கருத்து.) அறுமுகப் பரமனே ! விரைவில் மழை பெய்யச் செய்தருள்வாயாக !

(விரிவுரை.) நிலம், நீர், தீ, காற்று, வெளி, ஆன்மா, ஞாயிறு, திங்கள் என்னும் எட்டையும் இறைவன் வடிவமாகக் கொண்டுள்ளாராதலின், 'மகிசலம் முதல எட்டையும் வடிவாய் மகிழ்ந்தருள் குரவனே' என்றார். இறைவனுக் குரியது முருகனுக்கு முரியதாகலின் ஈண்டு முருகன் மேலதாயிற்று. இறைவன் ஒரு காலத்தில் முப்புரங்களை எரித்தழித்தாராதலின், "புரத்தைத் தகியரன் குமர" என்றார். (க)

அகஞ் சபத் தோடு மந்திரம் சேவை
அரியநற் பூசையே முதலா
உகந் துனக் கியற்றும் வலியிலன் எனினும்
உயருன தியல்பளி யாலே
புகழ்மழை பொழிய எழுமேன்வாஞ் சையினைப்
பூரணங் கணம்புரிந் தருள்வாய்
குகவிரு மூன்று முகமுடைப் பரம
குறமகட் கினியநா யகனே!

(ப-ரை.) குக இரு மூன்று முகம் உடைப் பரம குறமகட்கு இனிய நாயகனே-; அகம் சபத்தோடு - உள்ளத்திலே நினைத்து உருவேற்றுதலோடு, மந்திரம் - மந்திரத்தைக் கூறுதல், சேவை - வழிபாடு, அரிய நல் பூசை - அருமை வாய்ந்த சிறந்த பூசை, முதலாம் - முதலானவைகளை, உகந்து - மனம் மகிழ்ந்து, உனக்கு இயற்றும் வலியிலன் எனினும் - உனக்குச் செய்யும் ஆற்றலில்லாதவ

னென்றாலும், உயர் – உயர்ந்த, உனது இயல்பு அளியால் – உன்னுடைய இயற்கையான அருளினால், புகழ் மழை பொழிய - புகழாகிய மழையைப் பொழிவதற்கு, எழும் என் வாஞ்சையினை - எழுகின்ற என்னுடைய விருப்பத்தினை, பூரணம் - நிறைவேற்ற வேண்டி, கணம் புரிந்து அருள்வாய்–ஒரு கணப் பொழுது விரும்பி யருள்வாயாக.

(க - து.) அறுமுகப் பரமனே! உன்னைப் புகழ விரும்பும் என்னுடைய விருப்பத்தினை முற்றும் நிறைவேற்றி யருள்வாயாக.

(வி- ரை.) உள்ளத்தில் உருவேற்றல், ஆறெழுத் தரு மறையைக் கூறல், பூசை வழிபாடு ஆகியவைகளைச் செய்தற்கு அரிய மனத்திட்பமும் முயற்சியும் வேண்டும். புகழினை வாயால் பாடுதற்கோ அதிக முயற்சி வேண்டுவதின்று, ஆகவே நான் இந்த எளிய வழியைப் பின்பற்றினேன், என்னுடைய எண்ணத்தை நிறைவேற்றியருள வேண்டும் என்பது குறிப்பு. (உ)

மிகவணங் ககில விபுதர்கள் மவுலி
மிளிர்தரும் பாததா மரையாய்
மகிழ்தரு தேரியல் நன்குலா விடும்போன்
மணியணி கம்புதிண் களனே
தோகுமினல் கோடி நிபவபு ஒளியோய்
துரிதமன் மழையுற அருள்வாய்
குகவிரு மூன்று முகமுடைப் பரம
குறமகட் கினியநா யகனே!

(ப-ரை.) குக இரு மூன்று முகம் உடைப் பரம குறமகட்கு இனிய நாயகனே!; மிக வணங்கு - மிகுதியாக வந்து வணங்குகின்ற, அகில விபுதர்கள் மவுலி - தேவருல

கின் தேவர்களுடைய முடியானது, மிளிர்தரும் பாத தாமரையாய்-விளங்குகின்ற திருவடித் தாமரை மலர்களை யுடையவனே, மகிழ்தரு தெரியல்-மகிழ்ச்சியைக் கொடுக் கின்ற மாலையானது, நன்கு உலாவிடும்-நன்றாக உலாவப் பெறுவதும், பொன் மணி அணி - பொன்மணிகளை யணி கின்றதும், கம்பு திண்களனே-சங்கைப்போல் விளங்குவது மாகிய திண்ணிய கழுத்தை யுடையவனே!, தொகும் மினல் கோடி நிபவபு ஒளியோய் - தொகுதியாகிய ஒளிக் கற்றையினை யுடைய கோடிக் கதிரவர்களின் ஒளியை உடையவனே!, துரிதம்-விரைவாக, மன்மழை உற-மிகுதி யான மழையானது வருமாறு, அருள்வாய்—அருள் செய் வாயாக !

(க - து.) அறுமுகப் பரமனே ! விரைவில் மிகுதி யான மழை வருமாறு அருள் செய்வாயாக !

(வி-ரை.) அகிலம்-உலகம். அகில விபுதர்கள் - விண்ணுலகில் உள்ள தேவர்கள். முடி அடியில் விளங்கு தல் வணங்குங்கால் நிகழ்வது. அழகிய கழுத்துச் சங்கு போல் விளங்கு மென்பர். (கூ)

அகம்மிக நிறைந்த அவர்தமிற் கோடியன்
அடியன்மற் றுலகிலேன் றனக்குத்
தகுதியிங் கெவரும் இலைமழை பொழியத்
தனியுனை வேண்டுமோ தரிலோ
சகமிது தனக்கிங் கற்புதம் மிகவும்
சமைந்திடுங் கடிதுநீ அருள்வாய்
குகவிரு மூன்று முகமுடைப் பரம
குறமகட் கினியநா யகனே!

(ப – ரை.) குக இரு மூன்று முகம் உடைப் பரம குறமகட்கு இனிய நாயகனே-; அகம் மிக நிறைந்த அவர்

தமில்-தீவினையானது மிகுதியாக நிறையப்பெற்ற மனிதர்களில், அடியன் கொடியன்-அடியேன் மிகப் பொல்லாதவன், உலகில் என்றனக்குத் தகுதி இங்கு எவரும் இலை-உலகத்திலே (கொடியவர்களில்) எனக்கு ஒப்பானவர்கள் இங்கு வேறே எவரும் இலர், மழை பொழிய - மழை பெய்யுமாறு, வேண்டுமா தரிலோ - வேண்டுகிறபடி கொடுத்து விடுவாயானால், சகமது தனக்கு-உலகத்திற்கு, இங்கு அற்புதம் மிகவும் சமைந்திடும் - இங்கே புதுமை மிகுதியாக உண்டாகிவிடும், கடிது நீ அருள் - (ஆகவே) விரைவாக நீ (மழை பெய்யுமாறு) அருள் செய்வாயாக.

(க - து.) அறுமுகப் பரமனே! யான் மிகக்கொடியவன். நான் விரும்புகிறபடி நீ மழை பெய்யச் செய்வாயானால் அஃது உலகத்திற்குப் புதுமையாகி விடும். ஆகவே விரைவில் மழை பெய்யுமாறு அருள் செய்வாயாக.

(வி-ரை.) அகம்-தீவினை. மிகப் பொல்லாதவனாகிய என்னுடைய வேண்டுகோளை நீ நிறைவேற்றி விடுவாயானால் அஃது உலகத்திற்கு மிகுந்த புதுமையாகி விடும். ஆகவே அப் புதுமை நிகழவேண்டி நீ விரைவாக மழைபெய்யச் செய்தருள்வாயாக வென்றார். (ச)

துகளுறு பாபி எனதிடத் தினினும்
துரிதம தாய்த்தயை புரிந்தே
புகுபுகு எனநன் மழைமிகப் பொழியப்
புரியருள் புண்ணிய ரிடத்தில்
தகுதிருக் கருணை புரிதரில் யாது
தரும்புகழ் நினக்கு நீ புகலாய்
குகவிரு மூன்று முகமுடைப் பரம
குறமகட் கினியநா யகனே.

(ப - ரை.) குக இருமூன்று முகம் உடைப் பரம குறமகட்கு இனிய நாயகனே -; தகள் உறு பாபி எனது இடத்தினினும் - குற்றம் பொருந்திய தீவினையாளனுகிய என்னிடத்திலும், துரிதம் ஆய் - விரைவாக, தயைபுரிந்து-அருள்செய்து, புகுபுகு என மழை மிகப் பொழிய - புகு புகு என்னும் ஒலிக் குறிப்போடு மழை மிகுதியாகப் பெய்யுமாறு, அருள்புரி-அருளைச் செய்வாயாக, புண்ணிய ரிடத்தில் தரு திருக்கருணை புரிதரில் - நல்வினையாளரிடத்திலே தகுதியான திருவருளைச் செய்தால், நினக்கு யாது புகழ்தரும் - உனக்கு என்ன புகழுண்டாகும்?, புகலாய்நீ- நீ அதனைக் கூறுவாயாக.

(க – து.) அறுமுகப் பரமனே! தீவினையாளனுகிய என் வேண்டுகோளுக்கு அருள் புரிந்து உடனே மழை பெய்யச் செய்வாயாக.

(வி - ரை.) அருள்செய்தல் நல்வினையாளர்களுடைய வேண்டுகோளுக்கே தான் என்றாலும், தீவினையாளனுகிய என்னிடத்திலும் அருளைச் செய்து மழை பெய்யுமாறு செய்தருள்வாயாக. நல்வினையாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி அருள் செய்தால் உனக்குப் புகழ் உண்டாக மாட்டாது. தீவினையாளனுகிய என்னுடைய வேண்டுகோளுக்கு இணங்கி மழை பொழியச் செய்தால் உன்னுடைய திருவருளுக்குப் புகழுண்டாகும் என்றார். (ரு)

சுகமுடன் எனது வேட்கையை நிரப்பச்
சுடர்வலி இலையெனச் சோலிலோ
நகமகள் தனய நினதுயர் மொழியும்
நனியநி ருதமதே யாகும்

சிகிவல கவின்கோள் கரத்தில்சத் தியினைத்
திடமுடன் தரித்திடும் அதனால்
குகவிரு மூன்று முகமுடைப் பரம
குறமகட் கினியநா யகனே !

(ப - ரை.) குக இரு மூன்று முகம் உடைப் பரம குறமகட்கு இனிய நாயகனே - : நகமகள் தனய - மலைமகளாகிய உமாதேவியினுடைய மைந்தனே!, சுகமுடன்-சிறப்போடு, எனது வேட்கையை நிரப்ப - எனது அவாவை நிறைவேற்றுவதற்கு, சுடர் வலி இல என சொலில் - கோள்களின் ஆற்றல் நன்றாக இல்லையென்று கூறினால், நினது உயர்மொழியும் - நின்னுடைய மேன்மையான சொல்லும், நனி அநிருதம் ஆகும் - நன்கு பொய்யாக முடியும், சிகி வல - மயிலூரும் ஆற்றலுடையோய் !, கவின் கொள் கரத்தில் - அழகினைக் கொண்ட கையில், சத்தியினை திடமுடன் தரித்திடும் அதனால் – வேற்படையினை ஆற்றலோடு தாங்கியிருக்கும் அத்தன்மையினால் (உடனே மழையைப் பெய்யச் செய்தருள்வாயாக) அது, ஏ, ஓ: அசை நிலைகள்.

(க-து.) உன்னுடைய அருளாற்றலால் உடனே மழை பெய்யச் செய்ய வேண்டும்.

(வி - ரை.) மழை பெய்யச் செய்வதற்கு இப்பொழுது மழையை வருவிக்குங் கோள்கள் வலியுடையனவாக இல்லையே யெனின் உன்னுடைய அருளாற்றலால் அக் கோள்களை வலியுடையனவாகச் செய்தல் இயலும். ஆகையால், கோள்கள் வலியில என்று கூறும் உன்னுடைய மொழி பெரும் பொய்யாகும். பேராற்றல் அமைந்த வேற்படை நின்னுடைய கையிலே உள்ளமையின் உடனே மழை பெய்யச் செய்தருள்வாயாக என்பது முடிபு. (௬)

மழை மாலைப் பயன்

கானகம் அதனில் வேடுவச் சிறுமி
　　கண்டுகண் களிதரக் கலந்தே
போனக மாகத் தேனையும் தினையும்
　　புசித்தருள் குமரவேள் பதத்தை
வானகங் குளிர்ந்து மழைதர விரைவில்
　　வரமுறு சங்கர குரவன்
தானகங் குழைந்து வழுத்திய இதனைச்
　　சபஞ்செயின் மழைதவா துறுமே.

(ப - ரை.) கானகம் அதனில் - காட்டில், வேடுவச் சிறுமி - வள்ளி நாயகியை, கண்டு - பார்த்து, கண் களிதர கலந்து - கண் களிக்குமாறு சேர்ந்து, போனகம் ஆக - உணவாக, தேனையும் தினையும் புசித்தருள் - தேனையுந் தினையையும் உண்டருளிய, குமரவேள் பதத்தை - முருகக் கடவுளுடைய திருவடியை, வான் அகம் குளிர்ந்து - விண்ணின் இடமானது குளிர்ச்சியை அடைந்து, விரைவில் - சடுதியில், மழைதர - மழை பெய்ய, வரம் உறு சங்கர குரவன் - மேன்மையை யுடைய சங்காராச்சாரியார், தான் அகம் குழைந்து - தாம் மனமானது இளகி, வழுத்திய இதனை - பாடிய இப் பாடல்களை, சபம் செயின் - பன்முறை பாடிப் போற்றினால், மழை தவாது உறும் - மழையானது தவறாமல் பெய்யும்.

(க - து.) சங்கராச்சாரியார் பாடிப் பரவிய இதனைப் பன்முறை படித்தால் மழை பெய்யும்.

(வி - ரை.) மொழி பெயர்ப்பாசிரியர் இச் செய்யுளால் விருட்டி சட்கம் என்னும் வடமொழிப் பெயருடைய இம் மழை மாலையைப் பாடுதலால் உண்டாகும் பயனைக் கூறினர்.

கo. என்ன செய்குவாய் மனமே!

என்ன செய்குவாய் மனமே? நாளை
எமனிடத்தில் என்ன செய்குவாய் மனமே? நாளை
கறுத்தபுருவமும் பருத்த உடலமும்
கனலைப்போல விழியும் தனதில்லாத மொழியும்
கண்டவர் அஞ்சிடு பாசமும் இருதண்டகமாகிய ஈட்டுக்
கருநிற மாகிய எருமைக் கடாவினில் ஏறி
ஒரு இமைப்பொழுதினில் பெருவரை போலவே சீறிக்
காலதூ தருடன் கூடியே - இந்த
ஞாலந்தன்னில் உன்னைத் தேடியே;
கண்டு, அடியார்க்குத் தொண்டு,
செய்யாமல் நித்தம் உண்டு, உறக்கங் கொண்டு,
பெண்டுபிள்ளைக் குழைக்கும்பேயே! அடநாயே!-என்று
கட்டிக் கரமதனால் கிட்டித், தலையதனில் குட்டித்
திறமாகவே திட்டி, உலகுதனில் ஒட்டிக்,
கிரட்டியாகிய வட்டி, வாங்கிப் பையிற்கொட்டி,
அதை இருப்புப் பெட்டி தனிலே வைத்துக்,
கெட்டி செய்திட்டு வைத்த மட்டீ!
அடா காசாசை பிடித்த பிசாசே! - நீ
ஏறித் திரிகரிகள் எங்கே? பெரும்பரிகள் எங்கே?
தந்தக்கட்டில் எங்கே? தங்கத்தொட்டில் எங்கே?
பவுன்காசும் எங்கே? கொண்ட காதல் எங்கே?
உத்தியோகம் எங்கே? வியாபாரம் எங்கே?
துரைத்தனமும் எங்கே? அதைக்காட்டு
அரைக்காசள வாகிலும் தாசருக் கீயாத
கருமீ! மிக்கவமீ! கொண்ட கன்னி இருக்கப்பிற
பெண்களைச் சுகித்த சண்டாளா! - என்றும்
கருத்திற் சிவ நாமத்தைத் துதித்திடாமல் வீண்
பொழுதைப் போக்குகிற கழுதை - எங்கள்
கடவுளைத் துதியாத மடையா! - வாளனத்
தானே உதையானோ? வதையானோ?
என்ன செய்குவாய் மனமே! நாளை எமனிடத்தில்
என்ன செய்குவாய் மனமே!

(சாந்தலிங்க அடிகள்.)



முருகக்கடவுள் துணை

இந்நூல்
உரையாசிரியரின்
அறுபதாண்டு நிறைவு நாளாகிய
பராபவ ஆண்டு மாசித் திங்கள் இருபத்தைந்தாம்
நாள் குருவாரமாகிய மாசிவ இரவு நாட்
பகலில் திருப்போரூர்த் திருமுருகப்
பெருமான் திருமுன்பு வெளியிடப்பெற்றது.

வேலுமயிலுந் துணை

9—3—1967

கிடைக்குமிடம் :

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
திருநெல்வேலி-6. சென்னை-1.

விலை ரூபா. 2—00

பாரி அச்சகம், சென்னை-1.